YARL OSAI
யாழ் ஓசை

ஓசை : 01 நாதம்: 03 வெள்ளிக்கிழமை 19.11.2010 வார இதழ் விலை : ரூபா 15.00

தேசிய இனப்பிரச்சினைக்கு சர்வதேச கவனத்தை ஈர்க்க ஐ.தே.க. களத்தில்

பொதுநலவாய நாடுகள் அமைப்பை சந்திக்க விசேட பிரதிநிதியாக டாக்டர் ஜயலத் பிரிட்டன் பயணம்

(ஜே.ஜி.ஸ்டீபன்)

இழுத்தடிக்கப்பட்டுவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகத்துக்கு வலியுறுத்தும் வகையில் ஐ.தே.க.களத்தில் குதித்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி பிரித்தானிய பாராளுமன்றக் குழுவையும், பொதுநல வாயநாடுகள் அமைப்பையும் சந்தித்து நிலைமைகளை எடுத்து விளக்கவுள்ளது. இதன் பொருட்டு ஐக்கிய தேசிய கட்சியின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாந்தோட்டையில் சீன உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்தபோது பிடித்த படம்.

யாழ். வாக்காளர் விபரங்கள் கணனிமயம் முறைப்பாடுகள் நவ.30 வரை ஏற்கப்படும்

(ரொபட் அன்டனி)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சில கிராம சேவகர் பிரிவுகளை தவிர ஏனைய அனைத்து பகுதிகளிலும் வாக்காளர் இடாப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. தற்போது அவற்றை கணனிமயப்படுத்தி வருகின்றோம். இருப்பினும் நவம்பர் மாதம் 30 ஆம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்துக்கும் கிருஷ்ணா விஜயம்

வடக்கில் 1000 வீடமைக்க திட்டம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா எதிர்வரும் 25ஆம் திகதி மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை வரும் அவர், வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கென இந்தியா அமைக்கவுள்ள 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முதற்கட்டமாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி இன்று பதவியேற்பு

காலிமுகத்திடல் விழாக்கோலம்

(நமது நிருபர்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது தடவை பதவிக் காலத்துக்கான பதவியேற்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை பழைய பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்னால் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய உதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் விவசாய பீடங்கள் அமைக்கப்படும்

ஜனவரி மாதம் நிர்மாணப்பணிகள் ஆரம்பம் என்கிறார் உயர்கல்வி அமைச்சர்

(ரொபட் அன்டனி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை உருவாக்குவது தொடர்பில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நிர்மாண பணிகள் ஆரம்பமாகும். இந்தியாவின் உதவியு

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் ஜே.வி.பி. யினரின் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது காணாமல் போன உறவுகளை மீட்டுத்தரக்கோரி கதறியழுத தாய்மார்கள்.

வட பகுதி மக்களின் அவலக்குரல்களுக்கு மத்தியிலேயே ஜனாதிபதி பதவிப்பிரமாணம்

விக்கிரமபாகு கருணாரத்ன

(ப.பன்னீர்செல்வம்)

வடபகுதி மக்களின் அவலக் குரல்களுக்கு மத்தியிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்

(2 ஆம் பக்கம் பார்க்க)

விபத்தில் ஒருவர் பலி மற்றொருவர் படுகாயம்

(வண்ணார்பண்னை)

யாழ்ப்பாணம் உரும்பிராய் மருதனார்மடம் வீதியில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

தருபெயர்ச்சி பலன்கள்

பொறியியல் படிப்பை தொடரமுடியாது தவிக்கும் இலங்கை அகதி மாணவி

ராமநாதபுரம், மண்டபம் அகதிமுகாமில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த ஷைலஜா என்ற மாணவி, கல்லூரிக் கட்டணம் செலுத்தமுடியாததால் பொறியியல் படிப்பை பாதியில் நிறுத்த வேண்டியநிலையில் உள்ளார். மண்டபம் அகதிகள் முகாமில் வசிப்பவர் ஷைலஜா, தந்தையை இழந்த இவர் தாயார் பாரதியின் பராமரிப்பில் உள்ளார். கூலிவேலை செய்யும் பாரதி சிரமமான சூழலிலும் மகளை படிக்கவைத்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Express Newspapers (Cey.)Ltd. P.O.Box: 160, Colombo, Sri Lanka.

வடபகுதி மக்களின் நீண்ட கால உணவுப் பாதுகாப்பு திட்டங்களுக்கும், விவசாய நடவடிக்கைத் திட்டங்களுக்கும், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்குமென ஜப்பானிய அரசால் வழங்கப்படும் 98 மில்லியன் ரூபாவுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவம் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதராலயத்தில் நடைபெற்றபோது சர்வோதய நிறைவேற்றுப் பணிப்பாளர் சமன் அல்கொட, சேவா லங்கா மன்ற தலைவர் டாக்கடர் ஹர்ஷா குமார நவரட்ண, ஹலோ ரெஸ்ட் திட்ட முகாமையாளர் அடம் ஜசின்கி ஆகியோர் ஜப்பானியத் தூதுவர் குனிஓதக்கா ஹாசியுடன் ஒப்பந்தங்களைப் பரிமாறிக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு :- ஜோய் ஜெயக்குமார்)

வடக்கில் சட்ட ஒழுங்கு, ஜனநாயகம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை

ஜே.வி.பி. தெரிவிப்பு

(லியோ நிரோஷ தர்ஷன்)

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் வடக்கில் இன்னும் சிவில் சட்ட ஒழுங்கோ, ஜனநாயகமோ உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கு வாழ் மக்கள் இராணுவச் சட்டத்தின் கீழ் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே உயிர் வாழ்கின்றார்கள் என ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

காணாமல் போனவர்களை தேடினால் தேடுபவர்கள் காணாமல் போகின்றார்கள். அவர்களை தேடித் தருமாறு வலியுறுத்தி வடக்கில் ஜனநாயக ரீதியாக ஆர்ப்பாட்டம் செய்தால் அதற்கும் அரசாங்கத்தின் குண்டர்கள் கற்களை எறிகின்றனர் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தெளிவுபடுத்திய ஜே.வி.பி.யின் உறுப்பினரும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி கூறுகையில், இலங்கையில் யுத்தம் முடிவடைந்து அனைத்து பிரதேசங்களும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் ஓமந்தையை கடந்து சென்று பார்த்தால் அது ஒரு வேறு நாடாகவே உணர முடிகின்றது. ஏனென்றால் வடக்கு முழுவதும் இராணுவ நிர்வாகமே காணப்படுகின்றது. வடக்கு மக்கள் கடந்த மூன்று தசாப்த காலம் புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று அரசாங்கத்தின் தேவைக்காக வடக்கு மக்கள் இராணுவ ஆட்சிக்குள் வைக்கப்பட்டுள்ளார்கள். தெற்கிலிருந்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வடக்கு பிரதேசங்களுக்கு சென்று பொது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கண்டறிய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. குறிப்பாக ஜே.வி.பி. வடக்கில் மக்கள் பிரச்சினைக்காக குரல் கொடுத்தால் பாரிய அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கு மக்கள் பரிதவிக்கையில், அரச ஊடகங்கள் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பொது மக்களின் வாழ்க்கை தொடர்பாக போலியான தகவல்களை வெளியிடுகின்றனர். கிளிநொச்சியில் அரசாங்கத்தினால் திறந்து வைக்கப்பட்ட பெரும்பாலான கட்டிடங்களுக்கு கூரைகள் இல்லை என்பது தெற்கு மக்களுக்கு தெரியவில்லை. எனவே அரசாங்கத்தின் தொடர் அடக்குமுறை மற்றுமொரு பிரச்சினைக்கே வித்திடுகின்றது எனக் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தமே விடுதலைக்கு காரணம்

ஐரோப்பிய ஒன்றியம், தமது விடுதலைக்கான அழுத்தத்தை முன்வைத்திருந்ததாகவும் தமக்கு விதிக்கப்பட்ட 20 வருட கடுழிய சிறைத் தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டமைக்கும் ஜி.எஸ்.பி. பிளஸுக்கும் இணைப்பு இருப்பதாகவும் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கான பொருளாதார உதவிகள், இலங்கையின் ஊடக சுதந்திரத்துடன் இணைத்து பார்க்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்தினால் தடுத்துவைக்கப்பட்டு விடுதலையான பின்னர் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்புக்கு முதல் தடவையாக அவர் செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார்.

அதில் இன்றைய இலங்கையின் நிலைமை பயங்கரமானது என வர்ணித்துள்ளார். இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகிறார்கள். காணாமல் போகின்றனர். சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் அரசாங்கத்தின் அவசரகால சட்டம் போன்ற நீதி கட்டமைப்புகள், ஊடகவியலாளர்களை தடுத்து வைப்பதற்கு இடமளிப்பதாக திஸ்ஸநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதி மக்களின்... (தொடர்ச்சி)

இரண்டாவது பதவிக்கால பிரமாணம் இடம்பெறுவதாக இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளும் உள்நாட்டு முதலாளிமாருமே இது குறித்து மகிழ்ச்சியடைகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவிக்கையில், பதவிக்காலம் நீடிப்பால் உழைக்கும் வர்க்கத்தினருக்கு நன்மைகள் இல்லை. அனைவரும் நம்பிக்கை இழந்துள்ளனர்.

பதவிப் பிரமாணத்திற்காக பறக்கவிடப்பட்டுள்ள கொடிகள் அசையும் போது வடபகுதி மக்களின் அவலக் குரல்களே ரீங்காரம் இசைக்கின்றன. யுத்தத்தால் அழிந்துபோன அவர்களது சொந்தங்களை சொத்துக்களை நினைத்து விடும் பெருமூச்சு கேட்கிறது. தமது காணாமல் போன உறவுகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15000க்கு மேற்பட்ட அரசியல் கைதிகளை நினைத்து குமுறும் வேதனைகளே வெளிப்படுகின்றன.

அன்று எங்களை 'புலிகள்' என முத்திரை குத்தி புலிக்குட்டிகள் என பாதையில் போகும்போது அழைத்தார்கள். இன்று எம்மை நோக்கி கையசைத்து எதையாவது செய்ய மாட்டீர்களா என்று கேட்கின்றனர்.

எனவே நாடும் மக்களும் நெருக்கடியில் சிக்கியுள்ளன. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வோ அதிகாரப் பரவலாக்கலோ கிடைக்கப் போவதில்லை.

எனவே பொதுவாக நாட்டு மக்களுக்கு சந்தோஷம் இல்லை என்றே கூறவேண்டும். ஆனால் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஆர்வமாகவுள்ள இந்தியா மற்றும் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு இது மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. அத்தோடு இலங்கையிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் பணக்கார முதலாளிமாருக்கு இன்றைய தினம் மகிழ்ச்சியை அளித்துள்ளதாகவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

விபத்தில்... (தொடர்ச்சி)

இடம்பெற்ற மினிபஸ் – மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பலியானதுடன் மற்றவர் படுகாயமடைந்த நிலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவத்தில் சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் (வயது 30) என்பவர் பலியானதுடம் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். கோபு (வயது 30) என்பவர் படுகாயமடைந்தவராவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் குறித்த வீதியில் வந்த மினிபஸ்ஸொன்று மருதனார்மடம் உரும்பிராய் பிரதான வீதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்தவரை அப்பகுதியால் வந்தவர்கள் வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எனக்காக நேசிக்கும் ஒருவரை கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது

''கடவுள் எவ்வாறு படைத்தாரோ அவ்வாறு நான் இருக்கிறேன். அது தொடர்பில் நான் பெருமையடைகிறேன். ஒருநாள் என்னை எனக்காக நேசிக்கும் ஒருவரை என்னால் கண்டுபிடிக்க முடியும் என நம்புகிறேன்'' என உலகின் குள்ளமான பெண்ணாக 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ள ஹரிஸ் கொகாமான் (21 வயது) தெரிவித்தார்.

இந்த வருட ஆரம்பத்தில் 28 அங்குல உயரமும் 15 இறாத்தல் நிறையுமுடைய அவரை உலகின் மிகவும் சிறிய பெண்ணாக உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து 'கின்னஸ்' உலக சாதனை பதிவேட்டு அதிகாரிகள் சான்றிதழ் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் அண்மையில் உலகிலுள்ள அனைத்து ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட மிகவும் குள்ளமான நபர்கள் வரிசையில் இரண்டாமவராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

உலகின் குள்ளமான நபர்கள் வரிசையில் முதலாவது இடத்தில் நேபாளத்தைச் சேர்ந்த கஜேந்திரா தமாமாகார் உள்ளார். அவரது உயரம் 25.8 அங்குலமாகும்.

'என்னை என்றோ உலகம் அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு

எப்போதும் இருந்தது எனத் தெரிவித்த ஹரிஸ் கொகாமான், ''எனது குள்ளமான தோற்றத்தால் நான் சிறுவயதாக இருந்த போது சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. ஏனெனில் எனது குள்ளமான தோற்றத்தை எனது சக மாணவர்கள் எப்போதும் கேலி செய்த வண்ணம் இருந்தார்கள்'' என்று கூறினார்.

''ஆனால் இன்று எனது குள்ளமான உயரமே எனக்கு மிகுந்த பிரபலத்தைத் தேடித் தந்துள்ளது. அது எனக்கு நான்

உலகின் குள்ளமான பெண்

மிகுந்த உயரமாக இருப்பது போன்ற உணர்வை தந்துள்ளது. நான் உலகமெங்கும் சுற்றுப் பயணம் செய்து உலகிலேயே மிகவும் உயரமான நபர் உட்பட பலதரப்பட்ட மனிதர்களையும் சந்திக்க விருப்பம் கொண்டுள்ளேன்'' என ஹரிஸ் மேலும் தெரிவித்தார்.

ஹரிஸ் தற்போது தனது பெற்றோரான இப்ராஹிம் மற்றும் ஹதுனுடன் துருக்கியின் கடிர்லி நகரில் வசித்து வருகிறார்.

தாயாரான ஹதுன் கொகாமான் தனது மகள் தொடர்பில் விபரிக்கையில், ''ஹரிஸ் கர்ப்பத்திலிருந்த போது எனக்கு எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லை. நான் இயற்கையான பிரசவத்தின் மூலமே அவரைப் பெற்றெடுத்தேன். அவர் பிறக்கும் போது 3 இறாத்தல் 10 அவுன்ஸ் நிறையுடன் வழமையான குழந்தைகள் போலே காணப்பட்டார். அவர் ஒரு வயதை அடையும் வரை அவரிடம் எதுவித பிரச்சினையும் காணப்படவில்லை. ஒரு வயதுக்கு பின்பே அவரது வளர்ச்சி ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் மந்தமாக இருப்பதை அவதானிக்க முடிந்தது'' என்று கூறினார்.

''ஹரிஸ நடக்கவும் பேசவும் கற்றுக் கொண்ட போதும், அவரது வளர்ச்சி மட்டும் அதே நிலையில் இருந்தது. அவர் 4 வயதான போது அவரது வளர்ச்சி முழுமையாக தடைப்பட்டது. இதனையடுத்து நாங்கள் மருத்துவர்களின் உதவியை நாடினோம். ஆனால் அவர்களால் ஹரிஸுக்கு ஏற்பட்ட பிரச்சினை என்ன என்பது குறித்து கண்டுபிடிக்க வில்லை'' என்று ஹதுன் தெரிவித்தார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிக்கலான மருத்துவ பரிசோதனைகளின் பிரகாரம், பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட தவறான மரபணுக்களின் காரணமாக ஹரிஸின் எலும்பு வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

ஹரிஸ் அஜீரண கோளாறு மற்றம் முதுகு பகுதியிலான பிரச்சினைகளால் துன்பப்பட்டு வருகின்ற போதும், அதற்காக அவர் ஒரு போதும் சிகிச்சை பெற்றுக் கொள்ள வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

காதலி பிறிதொருவரை திருமணம் செய்வதை விரும்பாத நபரின் கொலை வெறியாட்டம்

மகனுடன் சாரா

காதலி, பிள்ளைகள், நண்பி பலி

தனது முன்னாள் காதலி பிறிதொருவரை திருமணம் செய்யப் போவதை அறிந்து சினமடைந்த நபரொருவர், அக்காதலியையும் அவரது இரு பிள்ளைகளையும் நண்பியொருவரையும் கொடூரமாக படுகொலை செய்த சம்பவம் அயர்லாந்தில் இடம்பெற்றுள்ளது.

சாரா ஹின்ஸ்(வயது 25) என்ற இந்த யுவதி, தனது முன்னாள் காதலரான ஜோன் ஜியரியிடமிருந்து பிரிந்து கோலைம்றிக் எனும் இடத்திலுள்ள வீட்டில் தனது பிள்ளைகளான றீஸ் (வயது 3) மற்றும் அமி (5 மாதம்) ஆகியோருடன் தங்கியிருந்தார்.

இந்நிலையில் அவர் நோர்விச் நகரைச் சேர்ந்த கிறிஸ் பிரட்லியை (34 வயது) திருமணம் செய்ய முடிவெடுத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த ஜோன் ஜியறி, சாராவையும் றீஸ், அமி ஆகியோரையும் படுகொலை செய்ததாக கூறப்படுகிறது.

சாராவின் நண்பியான அலிசியா பரோவும் (21 வயது) நியூகாஸல்வெஸ்ட்டிலுள்ள தனது இல்லத்தில் சடலமாக மீட்

றீஸ், அமி

கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் தொடர்பான தீவிரவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பண்டைய ரோம குடியிருப்பு லண்டனில் கண்டுபிடிப்பு



பண்டைய கலைப் பொருட்கள் மற்றும் மனித எச்சங்களைக் கொண்ட ரோம குடியிருப்பொன்று மேற்கு லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சேயன் பூங்காவிற்கு அருகிலுள்ள தளத்தில் நிலத்தின் கீழ் அரை மீற்றர் ஆழத்தில் 11,000 க்கு மேற்பட்ட ரோம காலத்துக்குரிய பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி தளத்தில் புதிய ஹோட்டலொன்றை நிர்மாணிக்கும் முகமாக அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதே இந்த ரோம குடியிருப்பின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இத் தளத்தில் சுமார் 11,500 மட்பாண்ட பகுதிகள், 100 நாணயங்கள், நகைகள் என்பன கண்டெடுக்கப்பட்டதாக லண்டன் பூகர்ப்பவியல் அருங்காட்சியகம் தெரிவிக்கிறது.

சுமார் 10 தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இரு மாதங்களாக பணியாற்றி இந்த எச்சங்களை மீட்டெடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஓசை
2010 நவம்பர் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

அரசியல் கைதிகளுக்கு விடிவு பிறக்குமா?

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்கால ஆரம்பத்திலாவது சரணடைந்த போராளிகளையும், சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகளையும் விடுவித்து அவர்கள் புதியதோர் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி வழிசெய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தமிழ் மக்கள் ஜனாதிபதியுடன் இணைந்திருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைந்த நிரந்தரமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வினாலேயே தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய முடியும். இதனை விடுத்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு தமிழ் மக்களை அடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது வேதனையளிக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி வரிச்சட்டத்தின் கீழான கட்டளைகள் அங்கீகாரத்திற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஸ்ரீதரன் எம்.பி. இதனை தெரிவித்துள்ளார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தமது விடுதலை கோரி தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வருவதுடன் உண்ணாவிரதப் போராட்டங்களையும் அவ்வப்போது மேற்கொண்டுவருகின்றனர்.

தம்மை விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வாறான போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இதேவேளை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள் இருவர் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த 12 ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த பல வருட காலமாக இவ்வாறு அரசியல்கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர்களை நம்பி வாழும் குடும்பங்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றன. அத்துடன், யுத்தம் முடிவுக்கு வந்து அனைவரும் மகிழ்ச்சியுடனும், நிம்மதியாகவும் வாழும் சூழ்நிலையிலும் இவ்வாறு அரசியல் கைதிகள் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர்களின் எதிர்காலம் சூனியமாகியுள்ளது என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு அரசியல்கைதிகள் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களின் பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் சதா சிறைச்சாலைகளுக்கும் தடுப்பு முகாம்களுக்கும் அலையாய் அலைவதிலேயே காலத்தை கழித்து வருகின்றனர்.

இது அவர்களுக்கு மற்றுமொரு பாரிய நெருக்கடியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இளம்வயதினர், திருமணமான இளைஞர்கள், யுவதிகள் என பலதரப்பட்டவர்களும் இவ்வாறு வருடக்கணக்கில் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, குடும்பத் தலைவர்கள் பலர் இவ்வாறு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளதுடன் அவர்களின் மனைவிமார் மற்றும் பிள்ளைகள் இரந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தியோ அன்றேல் பொது மன்னிப்பின் அடிப்படையிலோ குற்றமற்றவர்களை சாத்தியமான அளவு விரைவாக விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். இதன் மூலமே அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இன்றேல், அவர்கள் மத்தியில் விரக்தியும் வேதனையுமே மேலோங்குவதாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எங்கள் ஊர் - அராலி

(சென்றவாரத் தொடர்ச்சி)

மக்களுக்கு தேனீர் பழக்கத்தை ஏற்படுத்த இப்ப எப்படி? அந்தச் சபையினருக்கு பெரிய வெற்றி. பாடசாலைகளில் பாணும் தேனீரும் இலவசமாக வழங்கப்படும். யுத்த காலம் அல்லவா?

வாகனங்கள் இல்லாத காலம். இன்று வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள்கள் நிற்கின்றன. சில வீடுகளில் இரண்டு மூன்றும் உண்டு. அன்று வீட்டுக்கு ஒரு சைக்கிளைக் கூட காண முடியாது. பெண்கள் சைக்கிளின் பின் கரியரில் கூட ஏறியிருந்து பிரயாணம் செய்வதில்லை. அப்படி யாராவது ஏறிப் போனால் மற்றவர்கள் அந்தக் காட்சியை வியப்புடன் பார்ப்பார்கள். சிலர் சிரிக்கவும் செய்வார்கள்.

பெரிய கமக்காரர்களிடம் தான் மாட்டு வண்டிகள் இருந்தன. அவர்கள் தூர இடங்களுக்கு அவற்றில் போவார்கள். மற்றவர்கள் எல்லோரும் எங்கும் பொடி நடைதான். பஸ் சேவை வந்த பிறகும் மக்கள் தத்தம் கிராமங்களுக்கு வெளியே போனதில்லை. தேவையில்லை, காசு மில்லை.

கோவில்கள் மலிந்த ஊர்

அராலிக் கிராமத்தில் எல்லாத் தெய்வங்களுக்கும் கோயில்கள் உண்டு. சிவன், அம்மன், பிள்ளையார், முருகன், வைரவர், வீரபத்திரர், நாகம்மாள், பத்திரகாளி, ஐயனார், நாச்சிமார், பெரியதம்பிரான்.... அவற்றில் வண்ணபுரம் சிவன் கோயில், ஆகாயக்குளத்துப் பிள்ளையார் கோயில், கரைப்பட்டி பிள்ளையார் கோவில், மயிலிப்புரம் கந்தசுவாமிக் கோவில், அம்மன் கோவில் ஆகிய ஐந்திலும் தான் ஆகம முறைப்படி கொடியேற்றித் திருவிழாக்கள் நடக்கும்.

ஏனையவற்றின் விசேட தினங்களில் திருவிழாக்களோ பூசைகளோ நடக்கும்.

அந்த காலத்தில் அதிகமானவை கொட்டில் கோயில்களே. இன்று அவை எல்லாம் வளர்ந்து விட்டன. சில கோயில்கள் கொடியேற்றத் திருவிழாக்களும் செய்கிறார்கள். இவை எல்லாம் ஊரின் செல்வம் பெருகிவிட்டதைக் கட்டி நிற்கின்றன.

எல்லாக் கோயில்களைப் பற்றியும் எழுத முடியாது. முக்கியமான இரண்டு கோயில்களை பற்றி மட்டும் எழுதுகிறேன். ஊரின் கிழக்கு எல்லையில் காவல் தெய்வமாக அமர்ந்திருப்பவள் முத்துமாரி அம்மன். கோயிலுக்கு கிழக்கேயும் தெற்கேயும் வயல் வெளிகள். அதற்கு அப்பால் கடல். கோயிலில் நின்று பார்த்தால் கடல் தெரியும். இந்தக் கோயிலைப் பற்றியும் ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு.

முன்னொரு காலத்தில் அராலிக் கடல் பெருகி ஊருக்குள் வந்ததாம். அம்மன் போய் சூலத்தால் குத்தியதும் கடல் பின் வாங்கிச் சென்றுவிட்டதாம். அதோடு அது செவிடாகியும் விட்டதாம். கீரிமலை கடல் இரைவது கேட்டால் இந்தக் கடலும் பெருகுமாம். அதுதான் நிரந்தர செவிடாகி விட்டதே. ஊரில் அராலிக் கடலுக்கு செவிட்டுக் கடல் என்று பெயர். உண்மை இதுதான். அராலிக் கடல் ஆழ மற்ற கடல். இது அலையடித்து ஆர்ப்பரித்தும் இல்லை. பெருகுவதும் இல்லை.

2004 ஆம் ஆண்டு சுனாமி இலங்கையைத் தாக்கிய போது இந்தக் கடல் பெருகி ரோட்டுக்கு வந்தது. ரோட்டு இல்லாது இருந்தால் கோயில் வரை வந்திருக்கும். கீரிமலையில் இருந்து கொழும்பு வரை இலங்கையைப் பாதித்த சுனாமி, யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய பாதிப்பு எதனையும் செய்யவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

இலங்கையையும் தென்னிந்தியாவையும் சுனாமி பாதித்தது. இதுதான் முதன் முறை என்றார்கள் வரலாற்று ஆசிரியர்கள். வரலாற்று ஆசிரியர்களுக்கு எவ்வளவு கால வரலாறு தெரியும்? அதற்கு முன்பே சுனாமி இலங்கையை தாக்கி இருக்கலாம். அதிலிருந்து இந்தக் கர்ணப் பரம்பரைக் கதையும் உருவாகி இருக்கலாம்.

எங்கள் அம்மன் கோயிலின் அமைப்பும் அதில் நடக்கும் திருவிழாக்களும் சற்று வித்தியாசமானவை. பெரிய கோயில்தான். ஆனால் அதன் மூலஸ்தானத்தில் விக்கிரகம் இல்லை. பீடம்தான் இருக்கிறது. அண்மையில் திருப்பணிகள் செய்யப்பட்ட பொழுதும் மூலஸ்தானத்தில் விக்கிரகம் வைக்கப்படவில்லை. முன்பு இருந்தபடியே ஒரு பீடத்தையே அமைத்து விட்டார்கள்.

விக்கிரகம் என்ன? உருவம் இல்லாத இறைவனை வழிபட வசதியாக மனிதன் அமைத்த உருவம்தானே? கோயிலுக்குள் கொடிமரமும் இல்லை. கோயிலுக்கு முன் வீதியில் கொடிகளைக் கட்டிய ஒரு கமுகு மரத்தை நட்டுவிட்டார்கள். திருவிழா ஒன்பது நாட்களும் அந்த கமுக மரத்துக்குத்தான் கொடிக்கம்பப் பூசை நடைபெறும்.

மற்றப்படி திருவிழாக்கள் பூஜைகள் எல்லாம் ஆகம முறைப்படி தான். குருப்பட்டம் பெற்ற ஒருவர்தான் திருவிழாக்களை நடத்துவார்.

எட்டு நாட்கள் அலங்காரத் திருவிழா. ஒரு சாதிக்கு ஒரு திருவிழா ஆனதினால் ஒன்றை ஒன்று விஞ்சும். மேளம் சின்ன மேளம், வான வேடிக்கைகள் என்று கோவில் அமர்க்களப்படும். காலை ஆறு மணிக்கு தொடங்கும் திருவிழா அடுத்த

கலாபூசணம் அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளை

நாள் ஆறு மணிக்குதான் முடியும். உடனே அடுத்த திருவிழா ஆரம்பமாகும். நாங்கள் இரவிரவாக திருவிழா பார்ப்போம். அடுத்த நாள் பாடசாலைக்குப் போனால் ஆசிரியர் சொல்வது காதில் விழாது. நாதஸ்வர ஓசைதான் ஒலித்துக் கொண்டிருக்கும். தூங்கி விழுவோம். ஆசிரியர்களது பிரம்படியில் தூக்கம் கலையும்.

(மிகுதி அடுத்த வாரம் ..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் நெறி' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றபோது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் மற்றும் தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் அ.ரகவரன் ஆகியோர் மேடையில் இருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-அலுவலக நிருபர்)

கைவிடப்பட்டிருந்த வயல்களில் மீண்டும் விவசாயிகள் நெற் செய்கை

ஏழாலை

வேலணை பிரதேசத்தில் கைவிடப் பட்ட 150 ஏக்கரில் நெற் பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு பெரும்போகத்தில் கைவிடப்பட்டிருந்த வயற் காணிகளி லேயே நெற் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலணையில் கைவிடப்பட்ட வயற் காணிகளில் நெற் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக இம்முறை பெரும் போகத்தில் ஈடுபடும் 128 விவசாயிக ளுக்கு இலவசமாக விதை நெல்லும் மா னிய உரமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 1சீ - தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்படவேண்டும்

நகுலேஸ்வர வித்தியாலய அதிபர் சு. ஸ்ரீகுமரன்

ஏழாலை

தமது உடற் பலத்தை நம்பியிருந்த பாமர மக்களுக்கு அறிவொளி பாய்ச்சி அறிவுழைப்பின் இன்றியமையாமையை வலியுறுத்தி இன்று பல விற்பன்னர்களை யும் கல்விமான்களையும் உருவாக்கிய பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும் இப்பாடசாலையை 1சீ - தரப் பாடசாலை யாகத் தரமுயர்த்த வேண்டும்.

யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியால யத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின நிகழ்வும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு நினை வுப் பேருரையாற்றிய கீரிமலை நகுலேஸ் வரா வித்தியாலய அதிபர் சு. ஸ்ரீக்குமரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது நினைவுப் பேருரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

1955 ஆம் ஆண்டு பெரியவர் அமரர் குருநாதி மூத்தவியினால் இடப்பட்ட ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எனும் வித்து இன்று பெரு விருட்சமாகப் பரவி பிரதே சத்தில் அனைத்து வகையான மேம்பாட் டுக்கும் நிலைக்களனாக நிற்கின்ற நிலை மையில் நடைபெறும் பரிசளிப்புத் தினத் தில் நினைவுப் பேருரையினை ஆற்றுவ தற்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக மிக மகிழ்வடைகிறேன்.

பிரதேசத்தின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக் கும் பாடசாலைகளும் சமூகத் தலைமைக ளும் மிகுந்த பொறுப்பு வகிக்கின்றன. இப்பாடசாலை கிராமத்தின் கட்டுமானத் தில் பிரதான பங்கை வகிக்கின்றது.

இன்று ஆளுமைமிக்க அதிபரின் வழிந டத்தலில் பாடசாலை பல்வேறு மேம்பா டுகளையும் கண்டுள்ளது. இப்பாடசாலை யிலிருந்து உயர்தரத்துக்கு வேறு பாடசா லைகளில் கல்வி கற்கச் செல்லும் மாண வர்கள் அப்பாடசாலைகளில் கல்வி பயி லும் மாணவர்களை விட உயர்புலமை பெற்று பல்கலைக்கழகம் செல்வது அண் மைக் காலத்தில் நாம் காணும் விடயமா கும்.

இப்பாடசாலை இந்தப் பிரதேசத்துக்குத் தலைமை தாங்கும் 1 சீ- வகைப் பாடசா லையாகத் தரமுயர்த்தப்படும் போது இங் கிருந்தே பிரதேசப் பிள்ளைகள் பல்கலை க் கழகம் செல்லும் வாய்ப்பு ஏற்படும். அந்நிலைமை இந்த அதிபரின் காலத்தில் ஏற்பட வேண்டும் எனக் கூறினார்.

தொடர்ந்து இயற்கை வாதமும் ரூஸோ வின் கல்விக் கருத்துக்களும் என்ற விட யத்தில் பேருரையாற்றினார்.

இந் நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர் கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணையின் அபிவிருத்திக்கு வழிகாட்டியாக சமூக, பொருளாதார மூலவளத் திரட்டு நூல் தயாரிப்பு

ஏழாலை

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் சமூக பொருளாதார மூல வளத் திரட்டு என்னும் நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலகமும் பிர தேச சபையும் இணைந்து வேலணை பிர தேசம் தொடர்பான அனைத்துத் துறை சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கி அபிவிருத்திக்கான வழிகாட்டி நூலாக சமூக பொருளாதார மூல வளத்திரட்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகின்றது.

வேலணைப் பிரதேசத்தில் உள்ள வள ங்கள் மற்றும் துறைசார்ந்த தேவைகளை உள்ளடக்கிப் பொதுமக்களின் கருத்துக் கள், தேவைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டே மேற்படி சமூக பொருளாதா ரத்திரட்டு நூல் தயாரிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

சமூக பொருளாதார மூலவளத் திரட்டு தயாரிப்பதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக வேலணைப் பிரதேச சபையின் உப அலுவலகங்கள் தோறும் கலந்துரையாடல்கள் நடாத்தப் பட்டுள்ளன. வேலணை பிரதேசத்தின் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண் டிய விடயங்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றையும் குடும்பங்களின் தொ ழில், தனி நபர் முயற்சி என்பனவற்றை அபிவிருத்தி செய்தல், விவசாயம், கடற் றொழில் போன்ற துறைகளில் அபிவி ருத்தி செய்தல் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த நூலில் உள்ளடக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் வேலணைப் பிரதேச அபிவிருத்திக்கு வழிகாட்டும் வகையில் வேலணை சமூக பொருளாதார மூல வளத் திரட்டுமுன்னேற்பாடாகத் தயாரிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

பாட ரீதியாக மாணவர் கல்வியை மேம்படுத்த உடுவில் பகுதியில் தொடர் கல்வித்திட்டம்

மானிப்பாய்

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வைக்ரோ நிறுவனத்தினரால் தொடர் கல் வித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர் களை ஒவ்வொரு பாட ரீதியாகப் பிரித்து அவர்கள் பின்தங்கியுள்ள பாடங்களில் தேவையான பயிற்சிகளும் விளக்கங்க ளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந் நிறுவனம் இத்திட்டத்திற்கான மா ணவர்களை வலயக் கல்விப் பணிமனை மற்றும் பாடசாலை அதிபர்களின் ஊடா கத் தெரிவு செய்துவருகிறது.

இத் தொடர் கல்வித்திட்டத்தில் 79 மா ணவர்கள் முதற் கட்டமாகப் பயன டைந்து வருவதாகவும் இதில் கணித பா டத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள 27 மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி கள் விளக்கங்கள் வழங்கப்பட்டு வரு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் இணைந்து பயன்பெற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபரூடாக விண்ணப்பிக்கமுடியும் என வும் வைக்ரோ நிறுவனம் தெரிவித் துள்ளது.

அதிபர்களுக்கான செயலமர்வு

பளை

பாடசாலை அதிபர்களுக்கான சட்ட விடயங்கள் தொடர்பான செயலமர்வு சட்ட உதவி ஆணைக்குழுவினால் யாழ்ப் பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இச் செயலமர்வு நடத்தப்பட வுள்ளது.

இந்திய உதவி... (தொடர்ச்சி)

டன் கிளிநொச்சி பகுதியிலேயே யாழ். பல்கலைக்கழகத்துக்கான பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமைக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமைக்கப்படவேண்டும் என்று பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுவருகின்றமை தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை அமைக்கவேண்டும் என்று கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை அமைப்பதற்கு துரிதமாக முயற்சித்துவருகின்றோம்.

இந்தியாவின் உதவியுடனேயே இதனைச் செய்யவுள்ளோம். இது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுநடத்தப்பட்டுள்ளது. நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) நான் இந்திய உயர் ஸ்தானிகரை சந்தித்தபோதுகூட யாழ். பல்கலைக்கழகத்துக்கான பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை அமைப்பது குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினேன்.

யாழ்ப்பாண பகுதியில் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். அப்பகுதி மாணவர்கள் அந்த துறையில் மிகவும் ஆர்வமானவர்கள்.

எனவே யாழ். பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் அந்த பீடத்தை பெற்றுக்கொடுப்பது அவசியமாகும். அதனை கிளிநொச்சி பகுதியில் அமைப்பதற்கே முயற்சிக்கின்றோம். இதற்காக கிளிநொச்சியில் 300 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை அமைக்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என்றார்.

யாழ்.வாக்காளர்... (தொடர்ச்சி)

திகதிக்குள் எமது அலுவலகத்திலோ அல்லது தமக்குரிய கிராம சேவகர் பிரிவிலோ மேற்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

யாழ். தேர்தல் மாவட்ட வாக்காளர் இடாப்பு பதிவு செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது

யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பு பதிவு நடவடிக்கைகள் இடம் பெற்றுவிட்டன. தற்போது விபரங்களை நாங்கள் கிராம சேவகர்களிடம் இருந்து பெற்று அவற்றை கணணிமயப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றோம்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் எனும் போது கிளிநொச்சி மாவட்டமும் உள்ளடங்குகின்றது. அந்த வகையில் கிளிநொச்சி பகுதியில் 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் யாழ்ப்பாணம் பலாலி பகுதியில் 34 கிராம கேவகர் பிரிவுகளிலும் இன்னும் வாக்காளர் இடாப்பு பதிவுகள் இடம்பெறவில்லை.

எனவே அவற்றுக்கு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். மேலும் முகாம்களில் தங்கியுள்ள மக்களை பதிவு செய்வது தொடர்பான முறைமை தொடர்பில் உயர்மட்டத்தினால் எமக்கு இவ்வாரம் அறிவிக்கப்படும்.

இந்நிலையில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வது தொடர்பில் வாக்காளர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் இம்மாதம் 30 ஆம் திகதிவரை முறைப்பாடு செய்யலாம். எமது அலுவலகம் அல்லது உரிய கிராம கேவகர் பிரிவில் இதனை செய்ய முடியும். முறைப்பாடுகள் தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

மேலும் அனைத்து விபரங்களும் கணணிமயப்படுத்தப்பட்டதும் வாக்காளர் பெயர் பட்டியல் கிராம சேவகர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் ஜனவரி 3 ஆம் திகதி முதல் காட்சிக்கு வைக்கப்படும்.

அவற்றை பார்த்துவிட்டு வாக்காளர்களுக்கு ஆட்சேபனை இருப்பின் எமக்கு அறிவிக்க முடியும். ஜனவரி மாதம் முழுவதும் இவ்வாறு ஆட்சேபனை வெளியிடலாம். பின்னர் ஆட்சேபனைகள் தொடர்பில் நாங்கள் பெப்ரவரி மாதத்தில் ஆராய்வோம். ம

அதன்படி ஏப்ரல் மாதம் அல்லது மே மாதம் அளவில் புதிய உத்தியோகபூர்வ வாக்காளர் இடாப்பு புத்தகத்தை நாங்கள் வெளியிடுவோம்.

ஜனாதிபதி பதவி... (தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று வெள்ளிக்கிழமை பதவியேற்றுக்கொள்வதை முன்னிட்டு காலி முகத்திடல் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது.

பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் விசேட மேடையமைக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் கலைஞர்கள் பங்கேற்கும் கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் முப்படையினரது அடையாள அணிவகுப்புக்கள் இடம்பெறவிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்க விருப்பதாக ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் மிக பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பதவி ஏற்பு வைபவத்தில் மாலைதீவு ஜனாதிபதி மற்றும் சீனாவின் உப-பிரதமர் ஆகியோர் பிரதம அதிதிகளாக பங்கேற்கவிருக்கின்றனர். அத்துடன் இந்தியா, பாகிஸ்தான், உள்ளிட்ட ஏனைய நாடுகளை சேர்ந்த சுமார் 150 வெளிநாட்டு அதிதிகள் பங்கேற்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு கொழும்பில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு... (தொடர்ச்சி)

ஆயிரம் வீடுகளை அமைக்கும் முன்னோடி திட்டமொன்றில் அவர் கைச்சாத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள இந்திய பிரதித் தூதுவராலயங்களையும் பார்வையிடவுள்ளார்.

இலங்கை வரும் கிருஷ்ணா, இலங்கை இந்திய இருதரப்பு உறவுகள் மற்றும் மீள்குடியேற்றம், இலங்கைக்கான இந்திய உதவிகள் தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவின் உதவியுடன் வடக்கில் அமைக்கப்படவுள்ள 1000 முன்னோடி வீடுகளை அமைப்பதற்கான உடன்பாட்டின் கீழ் இந்திய நிறுவனம் ஒன்றே இந்த வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

எச்.பி.எல். என்ற நிறுவனம் இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடன் இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த முன்னோடி வீடுகள் ஒவ்வொன்றும் 540 சதுர அடிகள் கொண்டதாக அமைக்கப்படும். உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டே வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இந்திய நிறுவனம் திட்டக் கண்காணிப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

தேசிய இனப்பிரச்சினை... (தொடர்ச்சி)

தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பிரதிநிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா பிரித்தானியா பயணமாகவுள்ளார்.

இது தொடர்பில் ஜயலத் எம்.பி. மேலும் கூறுகையில் ;- தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரிலேயே அவரது விசேட பிரதிநிதியாக மேற்படி குழுக்களை சந்தித்து ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவுபடுத்தல்களையும் ஆலோசனைகளையும் பிரித்தானிய பாராளுமன்ற குழுவிடமும் பொது நலவாய நாடுகளின் பாராளுமன்றக் குழுவிடமும் தெரிவிக்கவிருக்கின்றேன்.

உண்மையாகக் கூறப்போனால் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரும் நாடு பரபரப்பாக காணப்படுவது அவசியமற்றது. அனைத்து சமூகத்தினதும் இயல்பு வாழ்க்கை இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. யுத்த காலத்தில் அனுபவித்த துன்பங்களைவிட பாரியளவிலான துன்பங்களையே இன்று வடக்கு கிழக்கு மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.

விசேடமாகக் கூறினால் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரையில் நிர்க்கதி நிலையையே எதிர்நோக்கியுள்ளனர்.

மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் ஏமாற்றப்படுவது மட்டுமல்லாது வஞ்சிக்கவும் படுகின்றனர். புலிகள் ஒழிக்கப்பட்டதாகவும் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறுகின்ற அரசாங்கம் நாட்டின் நிரந்தரமான அமைதியையும் சமூகங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் தவறி வருகின்றது.

மீள்குடியேற்றம் எந்த வகையிலும் பொருத்தமானதாக அமையவில்லை. அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

தற்போதைய காலகட்டத்தில் அவசரகாலச்சட்டம் என்பதும் அவசியமற்றதாகும். இதனை மாதா மாதம் நீடித்து வருகின்ற அரசாங்கம் அந்த சட்டத்தை சாதாரண மக்கள் மீது திணித்துக்கொண்டிருக்கின்றது.

மேலும் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அந்த காணிகளை உரியவர்களிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பது பொதுவான கோரிக்கையாக இருக்கின்றது. ஆனாலும் அரசாங்கம் இவ்விடயத்தில் விடாப்பிடியாக இருந்து வருகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தமிழ்ப்பிரச்சினை ஆகியவை தொடர்ந்தும் இழுபட்டு வருகின்றன. அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட சர்வகட்சிக் குழுவின் யோசனைகள் குப்பையில் போடப்பட்டுள்ள நிலையில் 18 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்ட அரசாங்கம் தான் நினைத்ததை செய்து வருகின்றதே தவிர நாட்டின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு எத்தனிப்பதைக் காண முடியாதிருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் தமிழ் இளைஞர் - யுவதிகளை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கோ அல்லது அவர்கள் தொடர்பில் ஆக்கபூர்வமானதொரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதிருப்பது கவலைக்குரியதாகும் என்றார்.

பொறியியல்... (தொடர்ச்சி)

பிளஸ் 2 இல் 943 மதிப்பெண் பெற்ற ஷைலஜா, திருச்சி-பாவேந்தர் பாரதிதாசன் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார்.

முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டிய நிலையில் நகையை விற்று 20 ஆயிரம் ரூபாவை செலுத்தினார். மீதித் தொகையை செலுத்த முடியாமல் முதலாண்டே சிரமமாக உள்ள நிலையில் வரும் ஆண்டுகளில் எப்படி கல்லூரி கட்டணம் செலுத்தமுடியும் எனற வருத்தத்தில் உள்ளார்.

இந்நிலையில், கிறிஸ்தவ அமைப்பின் உதவியால் திருச்சியில் உள்ள இலவச விடுதியில் தங்கி ஷைலஜா கல்லூரிக்குச் சென்று வருகிறார். ஷைலஜா கூறுகையில் படிப்பின் மேல் உள்ள ஆசையால் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தேன். தற்போது நிதி பற்றாக்குறை காரணமாக படிப்பை தொடர முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்றார் மாணவிக்கு உதவநினைப்பவர்கள் 9788414638 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமாகவும் அழகாகவும் ஜொலிக்க வேண்டுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

உடலுக்குத் தேவையான சத்து கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் நம்பகமான வழிமுறைகளை உருவாக்கி, அதைப் பின் பற்ற வேண்டும்.

குறைவான கொழுப்புச் சத்துக் கொண்ட உணவு வகைகளைத் தேர்வு செய்வது காய் கறிகள், பழங்கள், தானியங்களை அதிகமாக சாப்பிடுவது கணிசமான அளவுக்கு சர்க்கரை மற்றும் சோடியம் உள்ள உணவை சாப்பிடுவது போன்றவற்றைப் பின்பற்ற வேண்டும்.

வளர் இளம் பருவ பெண்கள்

10 முதல் 12 வயதின் முற்பகுதியில் உள்ள வளர் இளம் பெண்கள் தினமும் 260 முதல் 320 கிராம் வரையிலும், 13 முதல் 15 வயது வரையில் உள்ளவர்கள் மற்றும் 16 முதல் 18 வயதின் பிற்பகுதியில் உள்ளவர்கள் தினமும் 290 முதல் 350 கிராம் வரையிலும் தானியங்கள், தினை, சாமை உணவு வகைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

புரோட்டின் நிறைந்த பயறுகள், பயற்றங்காய்கள், அவரை வகைகளை 10 முதல் 12 வயதின் முற்பகுதியில் உள்ள வளர் இளம்பெண்கள் தினமும் 30 முதல் 70 கிராம் வரையும், 13 முதல் 18 வயது வரையில் உள்ளவர்கள் தினமும் 50 முதல் 70 கிராம் வரையும் எடுத்துக் கொள்ள வேண்டும். புரதத்திற்கு மாற்று உணவாக அசைவத்தில் இறைச்சி, மீன் மற்றும் முட்டை - இவற்றில் ஏதேனும் ஒன்றை தினமும் 30 முதல் 60 கிராம் வரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சைவ உணவு மட்டுமே உட்கொள்பவர்கள் அதற்கு பதிலாக, முந்திரி போன்ற விதை வகைகள் மற்றும் நிலக் கடலை போன்ற எண்ணெய் வித்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை 30 முதல் 50 கிராம் வரை சேர்த்துக் கொள்ள வேண்டும். பால் மற்றும் பால் பொருட்களும் புரதம் கிடைக்க உதவும்.

தாதுப்பொருட்கள், உயிர்ச்சத்துக்கள், நார்ச்சத்துகள் நிறைந்துள்ள காய்கறிகள் சத்தான உணவு என்ற அடிப்படையில் 5 பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.

1. பச்சை இலை காய்கறிகள்.
2. வேரில் விளைபவை. கேரட், பீட்ருட், முள்ளங்கி, வெங்காயம் ஆகிய வற்றை இதற்கு உதாரணமாக கூறலாம்.
3. கிழங்குகள் - தானியங்களுக்கு ஓர ளவு மாற்றாக இவை அமைகின்றன.
4. பிரிவு - 1 காய்கறிகள். நார்ச்சத்து மிகுந்த வெள்ளரி போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.
5. பிரிவு - 2 காய்கறிகள், போஞ்சி, பயறு வகைகளை இதற்கு உதாரண மாகக் கூற லாம்.

10 முதல் 12 வயதின் முற்பகுதியில் உள்ள வளர் இளம்பெண்கள் பச்சை இலை காய்கறிகள் 100 கிராமும், வேரில் விளையும் மற்றும் கிழங்கு வகைகளை 25 கிராமும், பிரிவு - 1 மற்றும் 2இல் உள்ள காய் கறிகளை 50 கிராமும் தினமும் ஆகமொத்தம் 175 கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

16 முதல் 18 வயதின் பிற் பகுதியை சேர்ந்த வளர் இளம்பெண்கள் 275 முதல் 350 கிராம் வரை இந்த உணவு வகைகளை தினமும் எடுத்துக் கொள்ள வேண் டும். அதாவது, பச்சை இலை காய்கறிகள் 100 முதல் 150 கிராம் வரையும், வேரில் விளையும் மற்றும் கிழங்கு வகைகளை 50 முதல் 75 கிராம் வரையும், பிரிவு 1 மற்றும் 2 இன் காய்கறிகளை 75 முதல் 100 கிராம் வரைம் தினமும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த உணவு முறையை வளர் இளம் பெண்கள் பின்பற்றினால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். அழகாகவும் ஜொலிக்கலாம்.

(முற்றும்)

யாழ்ப்பாண சமையல்

வெண்டிக்காய் வெள்ளைக்கறி



தேவையான பொருட்கள்

பிஞ்சு வெண்டிக்காய் - 15
பச்சைமிளகாய் - 4
சின்ன வெங்காயம் - சிறிதளவு
தேங்காய்ப்பால் - 1 கப்
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
தேசிக்காய் சாறு - 1 மேசைக்கரண்டி

செய்முறை

1.வெண்டிக்காயை நன்றாகக் கழுவி அடி மற்றும் நுனி இரண்டையும் வெட்டி எடுக்கவும்.

2.வெண்டிக்காய்களை 2 சென்ரி மீற்றர் என்ற ஒரே அளவில் வெட்டி கழுவிய மண் சட்டியில் போடவும்.

3.தேங்காய்ப்பால், வெட்டிய பச்சை மிளகாய், வெங்காயம் மற்றும் கறிவேப்பிலை உப்பு ஆகிய வற்றை சேர்த்து அவிய விடவும்.

4.பதமான பதத்தில் இறக்கி தேசிக்காய் சேர்க்கவும்.

5.சூடான சுவையான வெண்டிக்காய் வெள்ளைக்கறி தயார்.

அனைவருக்கும் பிடித்தமான ஒரு கறி இதுவாகும்.

அரைத்த மாங்காய் சம்பல்



செய்முறை

1.பத்து செத்தல் மிளகாய்களை எடுத்து காம்பு நீக்கிக் கழுவிக் கொள்ளுங்கள்.

2.தேங்காயை உடைத்து பாதியை கறள் இல்லாமல் துருவி எடுத்துக் கொள்ளுங்கள்.

3.ஒரு மாங்காயை தோல் சீவி பாதியை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள்.

4.நான்கு சின்ன வெங்காயத்தை எடுத்து உடைத்துக் கழுவுங்கள்.

5.தேவையான அளவு உப்பையும் கழுவிய ஒரு நெட்டு கருவேப்பிலையையும் தயாராக வையுங்கள்.

6.அம்மி மற்றும் குளவியை நன்றாகக் கழுவுங்கள்.

7.செத்தல் மிளகாயையும் உப்பையும் சேர்த்து வைத்து கொஞ்சம் தண்ணீர் சேர்த்து நன்றாக அரைக்கவும்.

8.அதன்பின்னர் மாங்காயை சேர்த்து அரைக்கவும்.

9.அக்கலவை நன்றாக அரைபட்டதும் கொஞ்சம் கொஞ்சமாகத் தேங்காய்ப் பூவை சேர்த்து அரைக்க வேண்டும்.

10.இறக்குவதற்கு முன்பு வெங்காயம் மற்றும் கருவேப்பிலையை சேர்த்து தட்டி அரைக்கவேண்டும்.

நன்றி யாழ்.மண்

மங்கையரே உங்களின்
சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை
எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.கேசரி 117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் யாழ். மக்களின் உளக்குமுறல்கள்...

குழந்தையுடன் பெண்ணொருவர் சாட்சியம்

எங்களுக்கு உங்களிடமிருந்து எந்த விதமான நிவாரணமும் வேண்டாம். எங்களுக்கு எங்கள் உறவினர்தான் வேண்டும். காணாமல் போன எங்கள் உறவுகளை கண்டுபிடித்து தருமாறு நல்லிணக்க ஆணைக்குவிடம் கோரிக்கை விடுக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த தாயொருவரின் உளக் குமுறலே மேற்குறிப்பிட்ட விடயமாகும்.

யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களை இரவோடு இரவாக குடியேற்ற முடியுமானால் வலி வடக்கு பகுதி மக்களை ஏன் இதுவரை மீள்குடியேற்றாமல் வைத்துள்ளீர்கள். வலி. வடக்கு மக்களுக்கு இந்த நல்லிணக்க ஆணைக்குழு ஏதாவது நல்லது செய்யுமா? இவ்வாறு தெல்லிப்பளையில் நடைபெற்ற ஆணைக்குவிழுவின் அமர்வில் சாட்சியமளித்த பொது மகன் ஒருவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

மக்கள் மத்தியில் சில எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள கற்றறிந்த பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நடைபெற்றன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் மேற்கொண்டிருந்தது.

முதலாவது அமர்வு குருநகர் கலாசார கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருந்தது. எனினும் அன்றைய தினம் கொழும்பில் பெய்த கடும் மழை காரணமாக நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களினால் யாழ்ப்பாணத்துக்கு உரிய நேரத்தில் வர முடிய வில்லை. ஆணைக்குழு உறுப்பினர்கள் இரத்மலானை விமான நிலையத்தில் பல மணிநேரம் காத்திருந்ததாக தெரிவிக்கப் பட்டது.

எனினும் குருநகர் கலாசார மண்டபத்தில் அதிகளவான மக்கள் சாட்சியமளிப்பதற்காக காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் காணாமல் போன தமது உறவுகளின் புகைப்படங்களை கைகளில் ஏந்தியவாறு குருநகர் கலாசார மண்டபத்தில் கூடியிருந்தனர். ஆணைக்குழுவின் அதிகாரிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தபோதிலும் ஆணைக்குழு உறுப்பினர்களின் வருகை தாமதமாகிக்கொண்டேயிருந்தது. இதனையடுத்து அங்கிருந்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் கூடியிருந்த மக்களிடம் நிலைமையை எடுத்துக்கூறியதுடன் அவர்களை மறுநாள் 12 ஆம் ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அதே இடத்துக்கு வருமாறு கூறி அனுப்பி வைத்தனர்.

இதேவேளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு நல்லூர் அரியாலையில் நடைபெறவிருந்த ஆணைக்குழுவின் அமர்வு மாலை 4 மணிக்கே நடை

நல்லிணக்க ஆணைக்குழுவினருடன் அரச அதிபர்

பெற்றது. தாமதமாகி அமர்வு நடைபெற்ற மண்டபத்துக்கு வந்த ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தாமதத்துக்கான காரணத்தை குறிப்பிட்டதுடன் வருத்தத்தையும் தெரிவித்தார்.

மேலும் அந்த முதலாவது அமர்வில் விசாரணை அமர்வை ஆரம்பித்து வைத்து கருத்து வெளியிட்ட ஆணைனக் குழுவின் தலைவர் சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நல்லிணக்கத்தை அடைய முடியாது என நம்புகின்றோம். நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் முன்செல்ல வேண்டும். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற ரீதியில் எம்மிடம் வேறுபாடுகள் காணப்படக்கூடாது என்று குறிப்பிட்டார்.

இந்த அமர்வில் பொது மக்கள் பலர் சாட்சியமளித்தனர். சாட்சியமளித்த பலர் காணாமல் போன அல்லது கைது செய்யப்பட்டுள்ள தங்கள் உறவுகளை தேடித்தருமாறே கோரிக்கை விடுத்தனர்.

அந்த வகையில் நான்கு தினங்களாக யாழ்ப்பாணத்தின் குருநகர் கலாசார மண்டபம், அரியாலை சரஷ்வதி சமூக நிலை

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க காத்திருப்போர்

யம், நீர்வேலி, அளவெட்டி, சித்தங்கேணி, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், குடத்தனை, கரவெட்டி, சாவகச்சேரி, ஊர்காவற்றுரை மற்றும் வேலணை ஆகிய இடங்களில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றன.

நாட்டில் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறையும் யாழ்ப்பாண நூலக எரிப்புச் சம்பவமும் வரலாற்றில் இடம்பெற்ற அசிங்கமான கறுப்புப் புள்ளிகளாகும். இதனால் இனங்களுக்கிடையில் விரிசல்கள் ஏற்பட்டன. - ஆணைக்குழுவின் தலைவர்

ஆணைக்குழுவின் அமர்வுகளில் விதைப் பெண்கள், தாய்மார்கள், சமூக முக்கியஸ்தர்கள், ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள், முன்னாள் புலி உறுப்பினர்களின் மனைவிமார்கள், சகோதரர்கள், புத்திஜீவிகள் என பலதரப்பட்டோரும் சாட்சியமளித்தனர்.

முக்கியமாக சாட்சியமளித்த மக்களில் அதிகமானோர் காணாமல் போன அல்லது கைது செய்யப்பட்டுள்ள தமது உறவினர்களை ஆணைக்குழு எவ்வாறாவது மீட்டுத்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் ஒவ்வொரு அமர்விலும் மக்களின் கோரிக்கைகள் செவிமடுத்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தாம் இவை தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாகவும் கவனம் செலுத்தக்கூடிய வகையிலான பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா இவ்வாறான கருத்துக்களை பெரும்பாலும் அனைத்து அமர்வுகளிலும் வெளியிட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேவளை குடத்தனையில் நடைபெற்ற அமர்வில் கருத்து வெளியிட்ட ஆணைக்குழுவின் தலைவர் நாட்டில் 1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்முறையும் யாழ்ப்பாண நூலக எரிப்புச் சம்பவமும் வரலாற்றில் இடம்பெற்ற அசிங்கமான கறுப்புப் புள்ளிகளாகும். இதனால் இனங்களுக்கிடையில் விரிசல்கள் ஏற்பட்டன என்று குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் 12 ஆம் திகதி வெள்ளிக்கி

தொகுப்பு - ரொபட் அன்டனி

ழமை நடைபெற்ற விசாரணை அமர்வில் யாழ். மாவட்ட புத்தி ஜீவிகள் சாட்சியமளித்தனர். விசேடமாக உயர் கலாநிதி ஜீவரத்தினம் ஹூல் பேராசிரியர் சிற்றம்பலம் பேராசிரியர் பாலசுதந்தரம் பிள்ளை யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி. சிவஞானம் உள்ளிட்ட பலர் சாட்சியமளித்தனர்.

(28ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாகர் ஆதியில் இலங்கையில் பல்வேறு பிராந்தியங்களில் வாழ்ந்திருந்தாலும் அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியமே நாகதீபம் என் குறிப்பிடப் படுகிறது. இதற்கு இப்பிராந்தியத்தின் பூர்வீக மக்களாக நாகர்கள் இருந்தமையும், அவர்கள் எதிரேயுள்ள தமிழகத்துடன் கொண்ட தொடர்பால் தமிழ் மொழி பேசும் மக்களாக வாழ்ந்தமையும் முக்கிய காரணமாக இருக்கலாம். ஏனெனில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மேற்கொள் ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுக்கு முந்திய மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை (Ragu pathy 1987).. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களைப் போல் இங்கு நுண்கற்கால மக்களோ அல்லது கற்கால மக்களோ வாழ்ந்திருக்கு கூடிய பௌதீக



படம் 01

வளங்களோ, இயற்கை கனிமங்களோ இப் பிராந்தியம் கொண்டிருக்கவில்லை. இத னால் யாழ்ப்பாணத்தின் தொடக்க கால மக்களை பெருங்கற்காலப் பண்பாட்டுக் குரிய நாக இனத்தவராகக் கொள்வதே பொருத்தமாகும்..

கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கைத் தமிழர் மொழியடிப்படையில் ஒரு இனக்குழுவாக வாழத்தொடங்கி யதை வவுனியா, அநுராதபுரம், அம்பாறை போன்ற இடங்களில் கிடைத்த பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்தின்றன (Indra

மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்

pala 2005:141-44). இதற்குள் நாக என்ற இனக்குழுவும் கலந்திருக்கலாம் என்பதற்கு இப்பிராமிச் சாசனங்களி லேயே ஆதாரங்கள் காணப்படுகின்றன. இச்சாசனங்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டதால் ம்மொழிக்கு ஏற்ப இப்பெயர் பெரும்பா லான சாசனங்களில் 'நஹ',

'நஹஸ' 'நஹய' நஹலி' என்று எழு தப்பட்டுள்ளது. ஆயினும் சில சாசனங் களில் இதற்கு மாறாக 'நாக' 'நக' 'ணக' 'ணாக' என எழுதியிருபபது தென்னிலங் கையில் இவ்வினக் குழு வாழந்தமைக்குச் சான்றாகும் (Paranavitan 1970::nos-1120,1998. 1982:nos:126, 138,180,-267) இப்பெயரை பிராகித மொழியில் எழுதும் போது அதில் வடபிராமிக் குரிய 'ஹ'(ga) என்ற எழுத்தே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இலங்கையில் இதற்குப்பதிலாக பல சாசனங்களில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'க' (ka) என்ற எழுத்தே பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆயினும் இப்பெயரைப் பேராசிரியர் பரணவிதானா 'நக' (Naka) என்றே வாசித்துள்ளார். பிராகிருத மொழி வழக்கில் நெடில் குறிலாவது வழக்கமாக இருப்பதால் இதை 'நாக' (Naka) என வாசிப்பதே பொருத்தமாகும் (பத்மநாதன் 2006:35). இருப்பினும் சில சாசனங்க ளில் தமிழகத்தைப் போல் நெடிலுக்குரிய குறியீடு பயன்படத்தப்பட்டு இப்பெயர் நாக (Naka) என்றும் எழுதப்பட்டுள் ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது (Paranavithana 1970: nos.1157, 1120. 1982:) நாக என்பதைச் சில சமயங்களில் 'ணாக' என்று எழுதும் வழக் கம் தமிழகப் பிராமிச் சாசனங்களில் காணப்படுகிறது (Mahadevan1966: no33). இது இரு மொழி வழக்கின் கார ணமாக உச்சரிப்பில் எற்பட்ட தடுமாற்றத் தால் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு (பத்ம நாதன் 2006 : 35). இந்த அம்சம் இலங்கைப் பிராமிச் சாசனங்கள் சிலவற்றிலும் காணப்படுவது (Paranavithana 1970 : no.991, 1982: nos . 95, 96,100) நாக என்ற பெய ரை எழுதுவதில் தமிழத்திற் கும் இலங்கைக்கும் இடை யிலான ஒற்றுமையைக் காட்டுகிறது. மேற்கூறப்பட்ட மூன்று அம்சங்களும் தென்னிலங்கையில் வாழ்ந்த நாகர் தமது பெயரைத் தமிழில் எழுத முற்பட்டுள்ளனர் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது..

இதற்கு மேலும் ஒரு ஆதாரமாக நாண யங்களில் வரும் பெயர்களைக் குறிப்பிட லாம். அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்திலும், வட இலங்கையில் பூநகரி, உடுத்துறை, கந் தரோடை போன்ற இடங்களிலும் பிராமி எழுத்தப் பொறித்த பல நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதில் அக் குறுகொட என்ற இடத்தில் மட்டும் கி.மு. 3-2ஆம் நூற்றாண்டுக்குரிய நூற்றுக் கணக்கான நாணயங்கள் கிடைத்துள் ளன. இந்நாணயங்களில் பொறிக்கப்பட்ட பெரும்பாலான பெயர்கள் பிராகிருத மொழிக்கு உரியதாக இருப்பினும் சில பெயர்கள் தமிழிலும், தமிழ்மயப்படுத்தப் பட்ட பிராகிருதத்திலும் உள்ளன. இதில் சிறப்பாக கருத்தில் எடுக்க வேண்டிய முக்கிய அம்சம் சில நாணயங்களில் தமிழ் மொழிக்கே சிறப்பான 'ன' (n) 'ள' (i) போன்ற எழுத்துக்கள் பயன்படுதப்பட்டிருப்பதாகும் (படம்-1). இந்நாணயங்களை வெளியி டக் காரணமாக இருந்த குறுநிலத் தலை வர்கள் அல்லது அதிகாரம் பெற்றிருந்த தலைவர்கள் நாக இனக் குழுவுக்குரிய தமிழர்கள் என்பதற்கு நாணயங்களில் பொறிக்கப்பட்ட 'நாக' அல்லது 'ணாக' என்று பொறிக்கப்பட்ட நாண யங்கள் சான்றாக உள் ளன (Bopearachchi 1999 : 51 - 60, Pushparatnam 2003 : 67-78) அதில் சிறப்பாக குறிப்பிடத்தக்க அம்சம் இங்கு கிடைத்த நாணயமொன்றில் அதை வெளியிட்ட சிற்றரசனின் பெயர் 'ணாகராசன்' என எழுதப்பட்டுள்ளது (Pushparatnam 2002: 5-6) (படம்-2). இதன் மூலம் இம்மன்னனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த மக்களில் ஒரு பிரிவினராவது தமிழ் மொழி பேசிய நாகர்களாக இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. பெருங் கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் அப் பண்பாட்டு மக்கள் பிராமி எழுத்தின் பயன்பாட்டை அறிந்திருந்தனர் என்பதை அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட் பாண்டங்களில் காணப்ப டும் சாசனங்களில் இருந்து தெரியவரு கிறது. இவ்வகையான சாசனங்கள் பெரும்பாலும் தமிழகத்திலும், இலங்கை யிலும் கிடைத்திருப்பதால் இது இரு நாடு களுக்கும் உரிய தனிப்பண்பாகக் கருத லாம். அண்மையில் தமிழகத்தில் ஆதிச்ச நல்லூரிலும், இலங்கையில் அநுராதபுரத் திலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய் வின் போது இப்பண்பாட்டுக்குரிய மட் பாண்டங்களில் பல பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. இம் மட்பாண்டங்கள் நவீன காலக்கணிப் புக்களுக்கு உட்படுத்திய போது அதில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களின் காலம் பௌத்த மதத்துடன் பிராமி எழுத்த அறி முகமாவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கணிப்பி டப்பட்டுள்ளது (Conigham, Robin., 2002). பொதுவாக எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் அக்காலச் சமூகத்தில் வணிகப் பொருட்களை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லும் கொள்கலன்களாகப் பயன்படுத்தப்பட்டதால் அவற்றில் தனி நபர்களின் பெயர்களே பெரும்பாலும் எழு தப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதப்பட்ட நூற்கணக்கான பெயர்கள் தமிழக மட் பாண்டங்களில் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் நாக, ணாக, போன்ற பெயர் களும் இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது (Subrayalu 1991,Rajan 1994). அண்மை யில் வடஇலங்கையில் இரணை மடு, பூநகரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட களை ஆய்வின் போது கிடைத்த மட்பாண்ட ஓடு களில் 'நாக' என்ற பெயர் எழுதப் பட்டிருப்பதாக சாசனவியலாளர் மகாதேவன் குறிப்பிடுகிறார் (படம் - 3). இலங்கையில் பிராகிருத மொழியும், அவற்றை எழுதுவதற்குரிய 40 வடபிராமி எழுத்துக்களும் புழக்கத்தில் இருந்தற்கு ஆதாரங்கள் காணப்படுகின் றன. அப்படியிருந்தும் தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களில் பிராகிருத மொழிச் சாசனங்களில் பயன்படுத்தப்ப டாத தமிழ்பிராமியும், பல தமிழ்ப் பெயர்க ளும் இலங்கைப் பிராமிச் சாசனங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

படம்-3

படம்-2

இந்த அம்சம் பௌத்த மதத்துடன் பரவிய பிராகிருத மொழியும், வடபிராமி எழுத்தும் இலங்கையில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்னர் தமிழ் மொழியும், தமிழ்ப் பிராமி எழுத்தும் புழக்கத்தில் இருந்துள்ளது என எண்ணத்தூண்டு கிறது.

இவ்வாறான ஒரு கருத்தையே கலாநிதி சத்தமங்கலகருணாரட்ணா, ஆரிய அபயசிங்கா போன்றவர்களது ஆய்வுக ளும் கோடிட்டுக்காட்டுகின்றன (Ariya-singhe 1965, Karunaratne 1984). இப் பின்னணியில் மட்பாண்டங்களில் வரும் 'நாக' என்ற பெயர் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நாக இனக் குழுதோன்றி யதென்ற கருத்தை உறுதி செய்வதுடன் அவர்கள் மொழியால் தமிழராக இருந் திருக்கலாம் எனவும் கருத இடமளிக் கிறது.. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆங்கில தின நிகழ்வில்மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் பிரதம விரந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சிறிதரன் பாடசாலையின் முதல்வர் திருமதி.லலிதா மலர் முருந்தன் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சி.எ.திருக்குமார் உதவிஅதிபர் திருமதி த.நந்தினி ஆகியோர் பார்வையாளர்களுடன் இருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் கைதடி நிருபர்)

தேசிய ரீதியிலான நாடக எழுத்துருவாக்கல் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவி முதலிடம்

தேசிய ரீதியிலான நாடக எழுத்துருவாக்கல் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 3ஆம் வருட மாணவி ஜி.தமிழரசி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பெர்னாடீன் ஞாபகார்த்தமாக தேசிய ரீதியில் பொரளை நாமேல் மாலினி புஞ்சி தியேட்டரில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி தமிழரசியின் நாடகமும் பங்குபற்றியது. 'நியதிகள் மாறுவதில்லை' என்னும் தலைப்பில் முதியவர் ஒருவரின் தனிமையும் அதன் வலியும், குழந்தைகள் மூலம் அத்தனிமை எவ்வாறு போக்கப்படுகின்றது என்பது பற்றியும் சித்திரிக்கப்பட்ட தமிழரசியின் நாடகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மேற்படி நாடகத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் பாடநெறியைக் கற்கும் 13 மாணவர்கள் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை

அச்சுவேலி

வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரிய ஆலோசகர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் 20 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள 11 மாகாண கல்வித் திணைக்கள முதன்மை அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களின் பெபேறுகளின் அடிப்படையிலேயே நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்களை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அனுப்பி வைத்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டியவர்களுக்குத் தனித்தனியாக அழைப்புக் கடிதங்கள்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடத்துறை ரீதியாக பதவி ஆளணிக்கு உரியவர்களைத் தெரிவு செய்வதற்குரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி வலய ரீதியில் கணிசமானளவு ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் காலியாக இருப்பதாலும் ஆசிரிய ஆலோசகர் பதவி ஆளணிக்கு இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2:1 நிலையில் உள்ளவர்கள் பொருத்தமான அளவு விண்ணப்பிக்காமையினாலும் இலங்கை ஆசிரியர் சேவைத் தரம் 2:ஐஐ பதவி நிலையில் உள்ளவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் அண்மையில் நடத்தப்பட்டிருந்தன. போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட உயர் புள்ளிகளின் அடிப்படையிலேயே நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொட்டிக்கு நீர் நிரப்பாமையால் கட்டுடைப் பகுதி மக்கள் சிரமம்

மானிப்பாய் தொட்டிக்கு ஒழுங்காக நீர் நிரப்பப்படாமையால் அப்பகுதி மக்கள் குடிநீரைப் பெறப் பல்வேறு சிரமங்களை அநுபவிப்பதாகத் தெரிகின்றது. கட்டுடைப் பகுதியிலுள்ள பெரும்பாலான மக்கள் தமது குடிநீர்த் தேவையை இந்த நீர்த் தொட்டியில் நிரப்பப்படும் நீரின் மூலமே நிவர்த்தி செய்து வருகின்றனர்.

ஆனால், அண்மைக் காலங்களில் இந்த நீர்த் தொட்டியில் நீர் ஒழுங்கான முறையில் நிரப்பப்படுவதில்லை எனவும் அந்த நீர் நிரப்பப்படுவதற்கான கட்டணங்கள் உரிய காலங்களில் தம்மால் செலுத்தப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நீர்த் தொட்டிக்கான நீர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் உதவியுடனேயே நிரப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

புதுக்கடை திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 3ஆம் நாள் (19.11.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 08.21 மணி தொடக்கம் 09.32 மணிவரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும், மகரலக்கினமும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எமது

Saravana Texs

சரவணா ரெக்ஸ்

(இரண்டாவது கிளையை)

வெகுவிமரிசையாக ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

இல.770, 772
தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

வட இலங்கை சுதேச மருத்துவ சபைக்கு புதிய இயக்குநர் சபை தெரிவானது

அச்சுவேலி

வட இலங்கை சுதேச மருத்துவ சபைக்குப் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. புதிய இயக்குநர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

தலைவர்- டாக்டர் சு. ஸ்ரீவிக்கினேஸ்வரன், செயலாளர் டாக்டர் - ஜே. ஜெயசீலன், பொருளாளர் - டாக்டர் சி. செல்வலிங்கம், உபதலைவர் - டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன், உப செயலாளர் - டாக்டர் ச. நிசாந்தன். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்திற்கு டாக்டர் சி. ஸ்ரீபாலரஞ்சன், கிளிநொச்சி மாவட்டத்திற்கு டாக்டர் எஸ். திரிலோகமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு டாக்டர் எஸ். நேசதுரை, வவுனியா மாவட்டத்திற்கு டாக்டர் ந. சிவாதிரன், மன்னார் மாவட்டத்திற்கு டாக்டர் எஸ். யோகானந்தன், திருகோணமலை மாவட்டத்திற்கு டாக்டர் எஸ். பரமானந்தன், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு டாக்டர் சு. நிசாந்தன், அம்பாறை மாவட்டத்திற்கு டாக்டர் திருமதி பாத்திமா றிசானா, கொழும்பு மாவட்டத்திற்கு டாக்டர் இ. பிரசாந் ஆகியோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மக்கள் தமது சைவப் பாரம்பரியங்களை பேணிச் சிவ சின்னங்களை அணிய வேண்டும்

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

(வட்டுக்கோட்டை நிருபர்)

"சைவ மக்கள் தமது சைவப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். சிவ சின்னங்களை அணிவதற்கு இன்று பலர் தயங்குகிறார்கள். சைவர்களாகிய நாம் சிவ சின்னங்களைக் கைவிடக்கூடாது" இவ்வாறு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்திய சைவ மாநாட்டை ஆரம்பித்து வைத்து ஆசியுரை வழங்கிய நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்.

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் நல்லை ஆதீன முதல்வர் தொடர்ந்து பேசுகையில்- ஒரு நாவலர் பெருமான் இருந்து செய்த சைவப் பணியை நாம் பலர் சேர்ந்தும் செய்யமுடியாத நிலை காணப்படுவது மனவேதனைக்குரியது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நாம் அனைவரும் அந்தச் சங்கத்தில் இணைந்து சைவப் பணியாற்ற வேண்டும். இங்கு சைவப் புலவர்களை எல்லாம் கௌரவிக்கும் நிகழ்வு பாராட்டுக்குரியது. எதிர்காலத்தில் மேலும் பல சைவப் புலவர்கள் தோன்ற வேண்டும். எமது சைவ சமயத்தை வளர்க்க எல்லோரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

சத்தியசாயி பாபாவின் 85 ஆவது அவதார தின விழா

(யாழ். மத்தி நிருபர்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 85 ஆவது அவதாரத் தின விழா மானிப்பாய் கனகசபை வீதியிலுள்ள சர்வமத தேவஸ்தானத்தில் பேராசிரியர் எஸ்.லீலா கிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களையும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு பேராசிரியர் எஸ்.லீலா கிருஷ்ணன் கேட்டுள்ளார்.

காரைநகர் கிட்ஸ்பார்க் சிறுவர் முன்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர்தின விழாவின்போது மூத்த கிராமசேவையாளர் இ.திருப்புகழூர் சிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் காரைநகர் கிட்ஸ்பார்க் சிறுவர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- வட்டுக்கோட்டை)

பட்டப்பகலில் திருடர்கள் கைவரிசை முதியவர் தாக்கப்பட்டு மோதிரம் அபகரிப்பு

கல்வியங்காட்டில் சம்பவம்

(அலுவலக நிருபர்)

கல்வியங்காட்டுப் பிரதேசத்தில் முதியவர் ஒருவர் தாக்கப்பட்டு அவர் அணிந்திருந்த பெறுமதியான தங்க மோதிரம் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் துவிச்சக்கர வண்டியில் நல்லூர் சட்டநாதர் வீதியில் பிரஸ்தாப நபர் சென்று கொண்டிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவரை இடைமறித்தனர். அம் முதியவரிடம் பேச்சுக் கொடுத்து தனியாக ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றனர். ஆள் அரவமற்ற இடத்திற்குச் சென்று மூவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். திடீரென அவ் இளைஞர்கள் முதியவரை மூர்க்கத்தனமாகத் தாக்கி அவர் அணிந்திருந்த பெறுமதியான தங்க மோதிரத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

திருடர்களின் மூர்க்கத்தனமான தாக்குதலில் மூர்ச்சையாகிக் கிடந்த முதியவரை அயலவர்கள் கண்டு அவரை அவரது வீட்டுக்கு அழைத்தச் சென்று உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அப்பகுதியில் அதிகரித்து வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு வேடங்களில் தமது திருட்டுத் தொழிலை கச்சிதமாக பகல்வேளைகளில் நிறைவேற்றி வருவதால் இது குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வீதி மின் விளக்குகளைப் பொருத்த மானிப்பாய் பிரதேச சபை நடவடிக்கை

மானிப்பாய்

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் பிரதான சந்திகள், இருள் சூழ்ந்துள்ள வீதிகள் என்பனவற்றிற்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில பிரதான சந்திகள் மின் விளக்குகள் அற்ற நிலையில் காணப்படுவதனால் மக்களுக்கு பாரிய கஷ்டங்கள்ஏற்படுவதுடன் அது திருடர்களுக்கும் மிகவும் சாதகமாக அமைந்துள்ளது.

எனவே இக்குறைகளை நீக்கும் பொருட்டு மின் விளக்குகள் பொருத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இலங்கை மின்சார சபையினரால் மதிப்பீடு பெறப்பட்டுள்ளது.

இம் மின் விளக்குகளைப் பொருத்துவதற்குப் போதிய நிதி இன்மையால் பிரதேச சபையினர் ஆளுநரிடம் அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையினைக் கோரி மின் விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதியில்லாமல் இயங்கும் விடுதிகளால் சுன்னாகப் பகுதி மக்களுக்கு அசௌகரியம்

மானிப்பாய்

சுன்னாகப் பகுதியில் அனுமதி பெறப்படாமல் நடத்தப்படும் விடுதிகளால் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுன்னாகப் பகுதியில் சில விடுதிகள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருவதாகவும் இதனால் அங்கு வருகைதரும் பயணிகள் உண்ணும் உணவுகளின் கழிவுப் பொருட்கள், பாவிக்கும் நீர்க் கழிவு என்பன வீதிகளிலேயே விடப்படுகின்றன.

இதனால் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதோடு கழிவு நீர் நிலைகொண்டிருப்பதனால் டெங்கு நுளம்புப் பெருக்கம் என்பன ஏற்படும் அபாயங்கள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடுதிகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுத்து அடிப்படை வசதிகள், நீர் அகற்றும் வசதிகள் அற்ற விடுதி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கமுன்வரவேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் மாணவர் மட்ட புதிர்ப் போட்டி

அச்சுவேலி

வடக்கு மாகாண பாடசாலை மாணவர் மட்டத்தில் நடைபெற்ற புதிர்ப்போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்திற்கு 13 வெற்றிகள் கிடைத்துள்ளன. இதில் 7 இடங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்குக் கிடைத்துள்ளன.

மாகாண மட்டப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் ஏழு பேரின் பெயர் விவரம் வருமாறு:

சி. லக்சிகா - முதலாமிடம் - தரம் - 06, த. அபிஷேகா - மூன்றாமிடம் - தரம் 7, ம. துஷிதா - மூன்றாமிடம் - தரம் -8, ம. கலாமணி - முதலாமிடம் - தரம் 9 , வி. விதுர்ஷன் - முதலாமிடம் - தரம் 10, செ. சஞ்சிகா - இரண்டாமிடம் - தரம் 11, பா. லக்ஷிப்பிரியா - மூன்றாமிடம் - தரம் 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய உரம் கிடைக்காததால் கிளிநொச்சியில் நெற்செய்கை பாதிப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிற்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட உரவகைகள் போதியதாக இல்லாததால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளான வட்டக்கச்சி, உருத்திரபுரம், முரசுமோட்டை, கணேசபுரம், அக்கராயன்குளம், கல்மடுக்குளம் கண்டாவளை, தர்மபுரம், கோணாவில், குஞ்சுப்பரந்தன், பரந்தன், பூநகரி, பல்லவராயன்கட்டு, பூநகரி நல்லூர், மருதநகர், 3ஆம் வாய்க்கால், கிளிநொச்சி உட்பட்ட பல இடங்களில் இம் முறை காலபோக நெற்செய்கைக்கு படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து சகல பகுதிகளிலும் கமக்காரர் அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விவசாய திணைக்களத்தால் கமநல நிலையங்கள் ஊடாக உரம் வழங்கப்பட்டுவருகிறது. இவை உரியவேளையிலும் தேவைக்கு போதியஅளவாகவும் வழங்கப்படுவதில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்ப்பாசன வாய்க்கால்கள் பல இடங்களில் சேதமாகியுள்ளதாகவும் வயல்களுக்கு நீரை எடுத்து வருவதில் அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



கிளிநொச்சி உருத்திரபுரம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்தானந்தா விஜயம் செய்தபோது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடுவதை படத்தில் காணலாம். (வடமராட்சி)

யா.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் கொக்கி விளையாட்டுத்துறை விருத்திக்கென கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர் எஸ். இரட்ணசிங்கம் உதவி நிதியை கல்லூரி முதல்வரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். (படம் வேலணை நிருபர்)

தாளையடி றோ.க.த.க பாடசாலைக்குப் புதிய கட்டடம் அமைக்க யுனிசெவ் நடவடிக்கை

பளை

வடமராட்சி கிழக்கிலுள்ள தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கான கட்டங்கள் புதிய இடத்தில் 10.59 மில்லியன் ரூபா செலவில் 'யுனிசெவ்' நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

தாளையடி கடற்கரைக்கு அண்மித்த இடத்தில் அமைந்திருந்த இப் பாடசாலை 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது முற்றாகச் சேதமடைந்தது. அதனைத் தொடர்ந்து பாதுகாப்பான இடத்தில் இப்பாடசாலைக்கு காணி ஒதுக்கப்பட்டிருந்தது.

தற்போது யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதையடுத்து 'யுனிசெவ்' நிறுவனம் அப்பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பாடசாலையை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

மறவன்புலோ தனங்களிப்பு பகுதிகளில் இம்முறை 500ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் நெற்செய்கை

திருநெல்வேலி

மறவன்புலோ தனங்களப்பு பகுதியில் 500 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களில் இம் முறை நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நெற் செய்கையினைக் கால் நடைகளிடமிருந்து பாதுகாக்க முட்கம்பி வேலி சென்ற வருடம் அமைக்கப்பட்டது.

ஆனால், இவ் வேலி இம்முறை அழிந்து காணப்படுகிறது. இம்முறை நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு நெற் பயிர்வளர்ந்து காணப்படுகிறது. இந் நிலையில் இவ் நெற் பயிர்களைப் பாதுகாக்க வேலிகளை மீள அமைக்க முன்வருமாறு கமக்கார அமைப்புக்கள் விவசாயிகளிடம் கேட்டுள்ளது. மிக விரைவாக இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கமக்கார அமைப்பால் கேட்கப்பட்டுள்ளது.

வரணி பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட மாணவர், வாசகர்களுக்கான அறிவுசார் போட்டி

வரணி

வரணி பொது நூலகம் இந்த ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோரிடையே நடத்திய கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, பொது அறிவுப்போட்டி, நடனம், பேச்சுப் போட்டி போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:-

கட்டுரைப்போட்டி 1ஆம் பிரிவில்

1ஆம் இடம் -சிவபாதசுந்தரம் ராகவி (நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்)

2ஆம் இடம் - க.சர்மினி(மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)

3ஆம் இடம -சி.சிவதர்சினி (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

2ஆம் பிரிவில்

1ஆம் இடம் -இ.சாம்பவி (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)

2ஆம் இடம் -க.சகிலன் (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)

3ஆம் இடம் -கி.யசிந்தன் (இயற்றாலை அ.மி.த.க பாடசாலை)

3ஆம் பிரிவில்

1ஆம் இடம் -தி.கவிப்பிரியா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

2ஆம் இடம் -ஞா.செளந்தர்யா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

3 ஆம் இடம்-மெ.தீபா (இயற்றாலை அ.மி.த.க பாடசாலை)

4ஆம் பரிவில்

1ஆம் இடம் -ஞா.கார்த்திகா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

2ஆம் இடம் - த.லசிந்தனை (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

3ஆம் இடம்- தே.லஜிதாயினா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர்.

கவிதைப்போட்டி

ஜெ.நிதர்சி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பொது அறிவுப்போட்டி

இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகளான ஞா.கார்த்திகா முதலாம் இடத்தையும், ஜெ.நிதர்சி இரண்டாம் இடத்தையும், வி.ஜெசந்தா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

முன்பள்ளி மாணவர்களுக்கான அபிநய நடனப்போட்டியில்

1ஆம் இடம் -கி.கர்ஷனா (கௌரி பாலர்முன்பள்ளி -வரணி வடக்கு)

2ஆம் இடம் -பா.வினோஜா (இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளி)

3ஆம் இடத்தை -க.தனுக்ஜிகா (கலைவாணி முன்பள்ளி -வரணி இயற்றாலை) ஆகியோரும்,

பேச்சுப்போட்டி

1 ஆம் இடம் -கு.துபிதா (இடைக் குறிச்சி சர்வோதய முன்பள்ளி

2 ஆம் இடம் -கி.கர்ஷனா (கௌரி பாலர் முன்பள்ளி -வரணிவடக்கு)

3ஆம் இடம் -சு.சாருஜா (கலைவாணி முன்பள்ளி -வரணி இயற்றாலை) ஆகியோரும் பெற்று வெற்றியீட்டினர்.

வாசகர்களுக்கான பொது அறிவுப்போட்டியில்

1 ஆம் இடம் தெ.துவாரகன்

2 ஆம் இடம் பி.மயூரன்

3 ஆம் இடம் ம.துவாரகன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வடமராட்சி கிழக்கில் கிராமசேவையாளர் பற்றாக்குறையால் மக்கள் சிரமம்

பளை

18 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 கிராம சேவையாளர்களே கடமையாற்றி வருகின்றார்கள்.

தற்போது அப்பகுதியில் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதனால் கிராம சேவையாளர் பற்றாக்குறையினால் பல சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது. இரண்டிற்கு மேற்பட்ட பிரிவுகளில் ஒரு கிராம சேவையாளர் கடமையாற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அண்மையில் செம்பியன் பற்று தெற்கு, செம்பியன் பற்று வடக்கு மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய 6 கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியர்த்தப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகளைச் சாதகமான முறையில் மாற்றமுடியும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

- பெற்றோர், பெரியோரது அறிவுரைகளைக் கேட்டு முடிவெடுத்தல் அல்லது கேட்டு நடத்தல்.
- வாழ்க்கை தொடர்பான முற்கூட்டிய தீர்மானங்கள்.
- உணர்விற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட அறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- பொறுப்புக்களை உணர்ந்து நடத்தல்.
- பாதுகாப்பான முறைகளைக் கையாளுதல்.

இவற்றால் தோல்விகளைச் சாதகமான முறையில் கையாளாது விடுவதனால் எமது மனம் களைப்படைந்து விடுகின்றது. அத்துடன் உடலும் களைப்படைந்து விடுகின்றது. இதனால்

- பசியின்மை
- நித்திரையின்மை
- பொழுதுபோக்கு அம்சங்களில் நாட்டமின்மை
- கோப உணர்வு
- மது போதையை நாடுதல்
- யாரையும் நம்ப முடியாத நிலை
- பயங்கரக் கனவுகள்
- உடல் பலம் குறைவு அல்லது உடல் நோய்கள் என்னும் வெளிப்பாடுகள் போன்ற குணங்குறிகள் ஒருவரில் தோன்றும். இதில் சில குணங்குறிகள் வெளிப்படையாகத் தெரியும். சில குணங்குறிகளை அவரே உணர்ந்து கொள்வார்? இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் அம் மனிதன் மனநோயாளியாகலாம். அல்லது தற்கொலை முயற்சிக்கு எத்தனிக்கலாம். சில சமயங்களில் தற்கொலை புரிந்தும் விடலாம் .

தற்கொலை என்பது ஒருவன் திடீரென எடுக்கும் ஒரு பிழையான முடிவாகும். 'அதாவது உணர்வு வேகத்தால் அவன் அந் நிலைக்கு ஆளாகின்றான்.' அத் தருணத்தில் அவன் அறிவிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அத்தோடு நின்று விடாது அவனது பிரச்சினை அவன் இறப்புடன் முடிவடைவதில்லை மாறாக அவனது உறவினர் சகோதரர் பெற்றோரிற்கு இன்னும் இன்னும் பாரச்சுமையை கொடுப்பதுடன் அவர்களையும் ஊனமாக்கி அவர்களும் தற்கொலை செய்யக்கூட வழிவகுக்கலாம்.

எனவே மீண்டும் தற் கொலை உணர்வினை தடுப்பதற்கான வழிகளைப் பார்ப்போம்

மேற்கூறிய குணங்குறிகளுடன் ஒருவரை நாம் இனங்கண்டால் ,

- அவரை அலட்சியம் செய்யாது ஆதரவளித்தல் வேண்டும்.
- ஒருவர் தற் கொலை முயற்சி பற்றிப் பேசினால் அவரது கருத்தை தட்டிக் கழிக்காது திறந்த மனத்துடன் பேச இடமளித்தல் வேண்டும்.
- ஒருவருடைய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து (கோபம் ,சோகம், குற்ற உணர்வு) அவர் அதனை வெளிப்படுத்தக் கூடிய வகையில் செவிமடுத்தல் மிக அவசியமாகும்.
- அவரது கருத்தை பிழை எனக் கூறாது அவரை அவராக ஏற்றுக் கொள்ளல்.
- தொடர்ந்து தற்கொலை பற்றியே பேசிக்கொண்டிராது திசை திருப்பிக் கதைத்தல் தற்கொலை தொடர்பான தாக்கத்தைக் குறைக்கும்.
- எவ்வேளையிலும் இந் நபருக்கு வேண்டிய போதெல்லாம் உதவியளிக்கும் வகையில் ஆதரவு கொடுங்கள்.
- தற்கொலை புரியும் ஆயுதங்கள் அல்லது கருவிகளை அவரிடமிருந்து தந்திரமாக அப்புறப்படுத்துங்கள். (கத்தி, கயிறு, கூரிய ஆயுதங்கள், தூக்குப் போடக்கூடிய துணிவகைகள், மருந்துப் பொருட்கள்)
- உடனடி முயற்சியிலிருந்து விடுவித்தல் அதாவது உரையாடல் ஊடாக மதம் சார்ந்த கருத்துக்கள், உறவுச்சிக்கல்கள் ஊடாக இதனை இலகுவாக மாற்றலாம்.
- அவரை நேரடியாக அவதானிக்கக் கூடியவர்களுக்கு இவ்விடயத்தைத் தெரியப்படுத்தி அவரை அவதானிக்கச் செய்தல் அவசியமாகும்.
- அவர் தொழில் புரியும் இடத்திலும் இதனைத் தெரியப்படுத்துவதுடன் , சிறிது கால ஓய்வு இவருக்குப் பெற்றுக் கொடுப்பதால் அவரது பதவியும் பாதுகாக்கப்படுவதுடன் ஏனைய தொழிலாளர்களும் அவரது தொழிலும் இடையூறு இல்லாது பாதுகாக்கப்படும்.
- இவரைச் சிறந்த உளவளத்துணையாளரிடம் உட்படுத்துவதுடன் அவரைத் தொடர்ந்து உளவளத்துணையாளரின் திகதிக்கு ஏற்ப பங்கு பெறச் செய்தல் வேண்டும். அவ் உளவளத்துணையாளர் அவரிடம் உள்ள மறைவான பண்புகளை நேராக மாற்ற முயற்சிக்க வேண்டும்.

கி.ரேகன்
உள ஆற்றுப்படுத்துநர்
உ+ம் - 'வாழ்வின் முடிவு மரணமல்ல', 'வாழ்ந்து காட்டுதல் வேண்டும்'

- கற்பழிப்பு , சித்திரவதை , அங்க இழப்பு போன்றவற்றால் மனவடு ஏற்பட்டவர்களுக்கு கூடிய அநுபவமும் அறிவுமுள்ள உளநலன் உதவி அவசியமாகும்.

(முற்றும்)

உங்கள் நோய்களுக்கு உங்கள் வீட்டிலேயே சித்தர் மருந்துகள்

♦ மஞ்சள் காமாலைக்கு

கீழ்க்காய் நெல்லி வேருடன் 20 அளவில் பிடுங்கி சாறு பிழிந்து 2 அவுன்ஸ் எடுத்து பசுப்பாலில் விட்டுக் கலக்கி 7 நாட்கள் காலையில் மாத்திரம் சாப்பிடவும். உப்பில்லாமல் பால் தயிர் மோர் சேர்த்து சாப்பிடவும்.

♦ மலேரியா சுரத்திற்கு

9 குப்பை மேனி இலையும் 6 மிளகும் எடுத்து அரைத்தச் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியத்துடன் ஒரு நாள் இருந்தால் போதுமானது.

♦ கல்லீரல் மூத்திரத்தாரை அடைப்பு

வாழைத்தண்டை சிறுதுண்டுகளாக்கி தயிரில் கலந்து தாளித்து தயிர் பச்சடியாக உணவுடன் அருந்தக் குணமாகும்.

♦ நரம்புத் தளர்ச்சிக்கு

முற்றிய வேம்பின் பட்டையை நிழலில் உலர்த்தி இடித்துக் சூரணம் செய்து காலையில் தேக்கரண்டி வீதம் தினமும் பாலில் கலந்து அருந்தி வர வயதானாலும் நரம்பு தளராது.

♦ பாத வெடிப்புக்கு

பழம் துணி சுட்ட சாம்பலைத் தேங்காயெண்ணையில் குரைத்துப் பூசவும்.

♦ கீழ் வாதங்களுக்கு

கடுகை அரைத்து பற்றுப் போடவும்

♦ நீண்ட நாள் வாழ

காலையில் பிரதி தினமும் வெறும் வயிற்றில் இஞ்சிச் சாறை 1/2 அவுன்ஸ் தேனுடன் கலந்து சாப்பிட்டு வாருங்கள்.

♦ வீரிய விருத்திக்கு

காலையில் எழுந்தவுடன் பொன்னாங்கானியை வாய்கொண்ட மட்டும் வெறுமனே இப்படி 40 நாட்கள் சாப்பிடவும்.

♦ காது சீழுக்கும் / காது இரைச்சலுக்கும்

தயிர் வாளைச்சாறும் நல்லெண்ணையும் கலந்து காய்ச்சி வடித்து 2 ,3 துளி விடவும்.

♦ நீர் சுருக்கிற்கு

முள்ளங்கிக் கிழங்கு சாறு 1/4 படி கற்கண்டுடன் கலந்து பருகக் குணமாகும்.

♦ ஒரு தலை நோவுக்கு

மிளகு மஞ்சள் ஒவ்வொரு கழஞ்சு சிறுகீரை வேர் 1 அவுன்ஸ் மூன்றையும் அரைத்து நல்லெண்ணைய் 1/2 போத்தல் விட்டுக் காய்ச்சி தலையில் வைத்து முழுகி வரத் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைகளுக்கு செல்லாமல் வீடுகளிலிருந்தவாறு தண்டனையை அனுபவிப்பதற்கு நடவடிக்கை

பிரதியமைச்சர் காமினி விஜித் விஜயமுனி

பதுளை,

''நீதிமன்றங்களினால் இரு வருடங்களுக்கு குறைவாக சிறைத் தண்டனை பெற்ற கைதிகள், சிறைச்சாலைகளுக்கு செல்லாமல் தத்தம் வீடுகளிலிருந்தவாறே தண்டனையை அனுபவிக்கும் நிலையினை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன''

இவ்வாறு சிறைச்சாலைகள் புனரமைப்பு பிரதி அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா, பதுளை சிறைச்சாலையில் அண்மையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை தலைமை அதிகாரி அனுர ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

நீதிமன்றங்களினால் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் அபராதப் பணத்தை செலுத்தத் தவறுவோர் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடுகின்றது. விதிக்கப்படும் அபராதப் பணத்தை விட இரு மடங்கு பணத்தை சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களுக்கு செலவு செய்யக் கூடிய நிலை ஏற்படுகின்றது. இப் பணம் பொது மக்களுடையதென்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இது போன்ற சிறு சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பாக நீதிமன்றங்களினால் இரு வருடங்களுக்கு குறைவான காலங்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது. இவர்களை சிறையில் வைத்திருப்பதன் மூலம் அவர்களுக்கு பெருந் தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது. இதனைத் தவிர்த்து அத்தகைய கைதிகள் தத்தம் வீடுகளிலேயே தங்கியிருந்து தண்டனையை அனுபவிக்க முடியும். இது சம்பந்தமான தீர்க்கமாக ஆலோசனை செய்து வருகின்றோம்.

நீதிமன்றங்களினால் இரு வருடங்களுக்கு குறைவான காலத்திற்கு சிறைத் தண்டனையைப் பெறும் கைதிகள் கோவில், விகாரை, பள்ளிவாசல் போன்ற புனித ஸ்தலங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் கண்டிப்பான சேவைகளை ஆற்ற வேண்டும். இச் சேவையானது தண்டனைக் காலமாகவே கருதப்படும்.

சிறைச்சாலைகளுக்குள் தண்டனையை அனுபவிக்காமல் வீட்டிலிருந்தவாறே மேற்குறிப்பிட்ட தண்டனையை பொதுச் சேவையாக மேற்கொள்ள முடியும். இது காலத்திற்குத் தகுந்த தண்டனையாகவே கருதப்படுகிறது.

இது போன்ற தண்டனைகள், அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவுமுள்ளது. இதன் மூலம் சிறைச்சாலைகளில் தண்டனை பெறும் கைதிகளுக்கு செலவு செய்யப்படும் பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றார்.

மண்மேடு சரிந்து விழுந்ததில் தளம் வெட்டிய நபர் படுகாயம்

பதுளைப் பகுதியில் சம்பவம்

பதுளை,

வீடமைப்பிற்கென தளம் வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவர் மண்மேடு சரிந்து விழுந்ததில் அதில் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் பதுளை எலதலுவை என்ற இடத்தைச் சேர்ந்த எஸ்.எம். சேனக்க (வயது30) என்ற நபரே படுகாயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் மருத்துவ மனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தளம் வெட்டிக் கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக மண்மேடு சரிந்து வீழ்ந்ததாகவும் அதில் சிக்குண்ட நபரை அயல வர்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த தாகவும் தெரியவருகின்றது.

படுகாயமடைந்த நபரின் நிலை ஆபத்தாக இருப்பதாக பதுளை அரசினர் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் குறித்து பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வயோதிபர் காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழப்பு

ஓமடியாமடுவில் சம்பவம்

வாழைச்சேனை,

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லைக் கிராமமான ஓமடியாமடுவில் வயோதிபர் ஒருவர் காட்டு யானையினால் தாக்கப்பட்டு அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நாசிவன்தீவு வாழைச்சேனையைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்த வராவார். செவ்வாய்க்கிழமையன்று வயல் வேலைகளை முடித்து விட்டு அருகில் உள்ள நீரோடும் கால்வாயில் குளித்துக் கொண்டிருந்த வேலையிலேயே யானையினால் தாக்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக இக் கிராமத்தில் உயிரிழப்பு தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. இதனால் இங்கு வாழும் மக்கள் அச்சமும் கவலையும் தெரிவித்து வருகின்றனர். தகுந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் அமைதியாக இடம்பெற்ற ஹஜ் பெருநாள்

(திருகோணமலை மேலதிக நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் அமைதியாகவும் விமர்சையாகவும் ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

தியாகத்தை உணர்த்தும் இப்பெருநாள் முஸ்லிம்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது.

கிண்ணியா, கந்தளாய், மூதூர், தோப்பூர், முள்ளிப்பொத்தானை, திருகோணமலை, குச்சவெளி, புல்மோட்டை, இறக்கக்கண்டி உள்ளிட்ட பல இடங்களில் ஹஜ்ஜுப் பெருநாள் களை கட்டியிருந்தது. காலையில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்காக பெண்கள் பள்ளிவாசல்களுக்கும் ஆண்கள் மைதானத்துக்கும் சென்று தமது தொழுகையை நிறைவேற்றிக் கொண்டனர்.

ரவிசங்கர் குருஜீ மட்டு. நகர் விஜயம்

இந்தியாவின் பிரபல வாழுங்கலைப் பயிற்சி ஸ்தாபகர் பூஜ்ய ஸ்ரீலஸ்ரீ ரவிசங்கர் குருஜீ எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மட்டு. நகருக்கு வருகை தருகிறார்.

மட்டு. நகர் வெபர் முற்றவெளி அரங்கில் ரவிசங்கர் குருஜீ பிரமாண்டமான கூட்டத்தில் யாகம் நடத்துவதோடு அருளுரையாற்றவுள்ளார்.

தற்போது இலங்கையிலிருக்கும் ஸ்ரீ தன பால் ஜீ தலைமையிலான வாழுங் கலைப் பயிற்சி உறுப்பினர்கள் குருஜீயின் வருகைக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அன்றைய தினம் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் மட்டு. நகர் வெபர் மைதானத்தில் ஒன்றுகூடுரென எதிர்பார்க்கப்படுகிறது.

வாழுங்கலைப் பயிற்சிக் கலையானது தற்போது நாட்டின் பல பாகங்களிலும் விரும்பிக்கற்கும் பேணும் கலையாக மாறி வருகிறது.

சட்ட விரோதமாக மணல் அகழ்வு

திராய்கேணி,

விடத்தல்தீவு கொடுக்கட்டி ஆற்றில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதால் அந்தப் பிரதேசம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. கொந்தராத்து வேலைகளில் ஈடுபடுவோர் இந்த ஆற்றிலே பெருமளவு மணலை தொடர்ந்து அகழ்ந்து விற்று வருகின்றனர்.

இதன் காரணமாக கொடுக்கட்டியாறு அகலமாகுவதுடன் மழைக் காலங்களில் அந்தப் பிரதேச போக்கு வரத்தும் தடைப்படுகின்றது. இது தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி விசேட வழிபாடும் யாக பூஜையும்

புதிய காத்தான்குடி,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 65 ஆவது பிறந்த தினம் மற்றும் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தையொட்டி மட்டக்களப்பில் நேற்று காலை பாரிய யாகமும் பூஜை வழிபாடுகளும் இடம் பெற்றன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வழிகாட்டலில் அவரது தலைமையின் கீழ் இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஏற்பாட்டின் பேரிலேயே இவ் ஆசீர்வாத பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன. கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எட்வின் கிருஷ்ணானந்தராஜா, பி. பிரசாந்தன் உட்பட பலர் இவ் வழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

மட்டக்களப்பு, கல்லடி ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற யாகத்திலும் வழிபாடுகளிலும் பெருமளவிலானோர் பங்கு கொண்டனர். ஆலய பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ யோகானந்தக் குருக்கள் பூஜை வழிபாடுகளை நடாத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் இருந்து யாழ். வரை

வடக்கின் வளமான இரணைமடுக் குளத்து நீரை - முழுமையாகப் பயன்படுத்துவோம்



தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். - கிளிநொச்சி நீர்விநியோகத் திட்டத்திற்கான திட்டப் பணிப்பாளர் எந்திரி.தி.பாரதிதாசனுடனான நேர்காணல்

இந்நிலையில் வளப்பங்கீடுகளில் பாதிப்பு உண்டா? இல்லை இதற்கான தடைக்காரணிகள் நோக்கு - இலக்கு ஆராயப்பட வேண்டிய ஒன்றா? என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். - கிளிநொச்சி நீர்விநியோகத் திட்டத்திற்கான திட்டப் பணிப்பாளர் எந்திரி.தி.பாரதிதாசன் பின்வருமாறு விபரிக்கின்றார்.

யாழ். - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்காக இரணைமடு நீர்த்தேக்கக் குளத்திலிருந்து நீரைப்பகிர்ந்து கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை முன்கொண்டு செல்வதற்காக 2002 இலிருந்து கருத்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை 60 இக்கும் மேற்பட்ட பல முக்கிய கூட்டங்கள், கருத்தமர்வுகள், கலந்துரையாடல்கள் (சிறிய கலந்துரையாடல்கள் தவிர்த்து) முன்வைத்து ஆசிய அபிவிருத்தி வங்கி - இலங்கை அரசின் நிதியுதவியுடன் 2000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்து பெறப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமான இரணைமடுக் குளத்து நீரை எவ்வாறு பாதுகாத்து பங்கீடு செய்து மக்களுக்கு (கிளிநொச்சி - யாழ்ப்பாணம்) வழங்க வேண்டும் என்ற பொறுப்பு எனக்கு உள்ளது.

இதனால் முக்கிய காலகட்டத்தில் இதனை மக்களுடன் பகிர்கின்றேன்.

இரணைமடுக் குளம் 106 500 ஏக்கர் அடி நீரைத் தேக்கக்கூடியது. அணைக்கட்டின் நீர்ப்பிடிக்கும் எல்லை 34 அடி ஆகும். 227 சதுரமைல் மழை நீர் ஏந்து பிரதேசத்தாலும் கனகராயன் ஆற்றாலும் இரணைமடுக் குளம் நிரப்பப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் கிளிநொச்சியில் கூடுதலான அளவு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கும் என இரணைமடுக் குளம் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் இன்றைய நிலை

இரணைமடுக்குளம் 34 அடி என்பதற்குப் பதிலாக 28 முதல் 30அடிக்கு நீர்பிடிக்கப்படுகிறது. மேலதிகமான நீர் வழிந்தோட விடப்படுகின்றது.

ஏனெனில் சேதடைந்த வான் கதவுகள் மற்றும் புனரமைக்கப்படாத அணைக்கட்டுக்கள் காரணமாக நீர் வெளியே செல்கிறது.

மேலும் பிரதான நீர் வழங்கும் கால்வாய்கள் சேதமடைந்துள்ளது. இதனால் பெரு மளவு நீர் வீண் விரயமாகின்றது.

மேட்டுநில பயிர்ச் செய்கைக்கான நீர் வழங்கல் புனரமைப்பின்மையால் தடைப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செய்யப்படவுள்ள குள புனரமைப்புக்கள்

மேலதிகமாக 2 அடியால் அணைக்கட்டை உயர்த்துதல், சேதமடைந்த அணைக்கட்டைப் புனரமைத்தல், அணைக்கட்டின் உறுதித் தன்மையை மேம்பாடு செய்தல், வான் கதவுகளை மீள் புனரமைப்புச் செய்வதன் ஊடாக 15 ஆயிரம் ஏக்கர் அடி நீர் வருடத்திற்குச் சேர்க்கப்படுகிறது.

மேலும் சேதமடைந்த - தூர்ந்துபோன பிரதான கால்வாய்கள் உடன் மீள்புனரமைப்புச் செய்தல் வேண்டும் என்பதாகும்.

மீள்புனரமைப்பின் பின்னர் ஏற்படவுள்ள உடனடித் தன்மை

உடனடியாக 12 1000 ஏக்கர் அடி நீரைக் குளத்தில் சேமிக்க முடியும். பெரும் போகத்தில் 22 050 ஏக்கரில் பயிர்ச் செய்கையும் சிறுபோகத்தில் 11 600 ஏக்கர் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளமுடியும்.

அத்துடன் ஆயிரத்து 100 ஏக்கர் மேட்டு நில பயிர்ச் செய்கைக்கான நீரும் வழங்க முடியும்.

போருக்குப் பின்னரான கிளிநொச்சி அபிவிருத்திக்கு கிளிநொச்சி மாநகரம் விரைவில் புதிய பரிமாணத்தில் மீள்கட்டுமானப் பணிகள் அபிவிருத்திகள் இடம் பெறவுள்ளன. இப்பிரதேசத்திற்கான நகர மயத் திட்டத்திற்கு 4 ஆயிரம் க.மீ. குடிநீர் ஒரு நாளுக்கு வழங்கப்படும்.

பின்னர் மேலதிக நீர் தேவைப்படுமிடத்து 8000 க.மீ. குடிதண்ணீர் ஒரு நாளைக்கு வழங்கப்படும்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கீழுள்ள பூநகரி - பளை பிரதேச மக்களுக்கு 2000 க.மீ. குடிதண்ணீரும் - யாழ். மாவட்ட நீர்வழங்கலுக்காக 27 000 க. மீ. குடிதண்ணீரும் ஒரு நாளைக்கு வழங்கக் கூடியதாக இருக்கும்.

மேலதிகமாக 46761 க. மீ. குடிதண்ணீர் ஒரு நாளைக்கு பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்த முடியும். (அதாவது 4028.5 ஏக்கர் அடி நீர் ஒருநாளைக்குவிவசாயத் தேவைக்குப் பயன்படுத்த முடியும்)

முடிவாகக் கூறுவது யாதெனில்

மரபு ரீதியான விவசாயப் பாவனையாளர்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாவண்ணம் புதிதாக ஆரம்பிக்கும் விவசாயிகளுக்கும் முழுமையான நீரினை வழங்குதல், அணைக்கட்டினை 2 அடி உயர்த்துவதன் மூலம் அதிகரிக்கப்படும் கொள்ளளவில் குறிப்பிட்ட சிறு பகுதியை மட்டும் யாழ். குடாநாட்டுக்கு வழங்குவதும் - மிகுதி அனைத்தையும் கிளிநொச்சி - பூநகரி பாவனையாளர்களுக்கு வழங்குவதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளைப் பன்முகப்படுத்துதல் - விவசாய ஸ்தாபன கட்டமைப்பை மேம்படுத்துதல் ஊடாக அபிவிருத்தி செய்தல் என்பனவாகும்.

எனவே இவ்வாறான மக்களின் நல் வாழ்வு - அபிவிருத்தி என்பதற்கான முன்னோடித் திட்டத்திற்கு அனைவரும் பங்களிக்க முன்வரவேண்டும் என்று எந்திரி. தி. பாரதிதாசன் குறிப்பிட்டார்.

செல்வி கனிடவர்
நவாலியூர் செ. ரமேஷ்

இலங்கையரசு - ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் (2000 கோடி) ஆரம்பிக்கப்பட்ட வலுவான பாரிய திட்டத்திற்கு ஒன்றிணைந்து கைகொடுத்து வலுச்சேர்ப்போம்.

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான வளம் நீர்ஆகும். வட மாகாணம் சகல வளங்களையும் தன்னகத்தே பூரணமாகக் கொண்டுள்ள பூமியாக வர்ணிக்கப்படுகின்ற அதேநேரம்-

எமது குடிதண்ணீர்த் தேவை - விவசாயத் தேவை - கால்நடைத் தேவை என்பவற்றுக்காக வளங்களைப் பங்கீடுசெய்வது தொடர்பான பிரச்சினை - முரண்பாடு என்பன நீண்டு கொண்டே செல்கின்றன.

2000 கோடி ரூபா செலவில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடா மக்களுக்குநவீன தொழில் நுட்ப வசதிகளுடாக நன்னீரைக் கொண்டு செல்வதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படுக்கையறைக் காட்சிக்கு மறுப்பு

படுக்கையறை காட்சியில் நடிக்க மறுத் துள்ளார் பிரியங்கா சோப்ரா. விஷால் பரத்வாஜ் இயக்கும் படம் சாத் கூன் மாப். இதில் ஏழு ஆண்களை திருமணம் செய்து ஏமாற்றும் வேடத்தில் நடிக்கிறார் பிரியங்கா சோப்ரா. அந்த ஏழு பேரில் அனுகபூரும் ஒருவர். காட்சிப்படி அனுகபூருடன் படுக்கையறை காட்சியில் பிரியங்கா நடிக்க வேண்டுமாம். ஆனால் அதில் நடிக்க மறுத்து அவர் படப்பிடிப்பிலிருந்து சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. அனுகபூர் பிரபலம் இல்லாத குணச்சித்திர நடிகர். அவ ருடன் படுக்கையறை காட்சியில் நடிப்பது பிரி யங்காவுக்கு பிடிக்கவில்லை. அதனால்தான் அவர் நடிக்க மறுத்துள்ளார் என படக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

காணாமல் போன குவாட்டர் கட்டிங்!

குவாட்டர் கட்டிங்காக ஆரம்பித்து வ குவாட்டர் கட்டிங் ஆன படத்தில் இருந்து கடந்த சில தினங்களாக குவாட்டர் கட்டிங் காணாமல் போய் விட்டது. ஒரே ஒரு இரவில் நடக்கிற கதைதான் குவாட்டர் கட்டிங் என்றும், தமிழ் சினிமாவை வேறொரு களத்துக்கு கொண்டு போகிற முயற்சிதான் இந்த படம் என்றும் படத்தின் டைரக்டர்கள் புஷ்கரும், காயத்ரியும் மாறி மாறி கூறினாலும், ரசிகர்களுக்கு கிக் ஏறாததால் குவாட்டர் கட்டிங் போதையில்லாத சோடா தரத்துக்குப் போய் விட்டது.

இந்த நிலையில்தான் கடந்த சில நாட்களாக வெளிவரும் இப்படத்தின் விளம்பரங்களில் ஒரு புதுமை. வ என்ற எழுத்தை மட்டும் படத்தின் டைட்டிலாக வெளியிட்டிருக்கிறார்கள். துணையாக வந்து கொண்டிருந்த குவாட்டர் கட்டிங் என்ற உப தலைப்புக் காணாமல் போய் விட்டது. ஏற்கனவே குவாட்டர் கட்டிங் என்று தலைப்பு வைத்திருப்பதால் இந்தபடத்திற்கு வரிவிலக்கு உண்டா? இல்லையா? என்ற கேள்வி எழுந்தது. அதன் பின்னர் படம் வெளிவ ரும் நேரத்தில் வ என்ற எழுத்து வந்து ஒட்டிக் கொண்டது. இப்போது வ மட்டும் தலைப்பாக இருந்து விட்டு, குவாட்டர் கட்டிங் காணாமல் போய் விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஹ்ரித்திக்குடன் கிளுகிளு காட்சிகள்... ஐஸ்வர்யா ராய் குடும்பத்தில் சிக்கல்?

குஜாரிஷ் படத்தில் ஹ்ரித்திக் ரோஷனுடன் படு நெருக்கமாக நடித்துள்ளதால் ஐஸ்வர்யா ராய்க்கு குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குஜாரிஷ் படத்தில் ஹிருத்திக் ரோஷன் மனநலம் பாதித்தவராகவும் ஐஸ்வர்யாராய் அவருக்கு சிகிச்சை அளிக்கும் நேசாகவும் வருகின்றனர்.

இந்த படத்தில் இருவரும் நெருக்கமாக நடித்துள்ளனர். இருவரின் படுக்கை அறை காட்சிகளும் இடம்பெற்றுள்ளனவாம். ஐஸ் வர்யாராய் இதுபோல் நடித்ததற்கு அமிதாப் பச்சன், அபிஷேக்பச்சன் இருவரும் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் மனைவி மேல் அபி ஷேக்பச்சன் கடும் கோபத்தில் இருப்பதாகவும் மும்பை பத்திரிகைகளில் செய்திகள் வெளி யாயின.

இதுபற்றி ஐஸ்வர்யாராயிடம் கேட்டபோது, 'படங்களில் இரு கேரக்டர்களுக்குள் நடப்ப வைகளை நிஜத்தில் ஒப்பிடக் கூடாது. எல்லா படங்களிலுமே நாயகனும் நாயகியும் திரை யில்தான் காதல் செய்கிறார்கள்.

இதில் என் குடும்பத்தார் என் மேல் கோபமாக இருப்பதாக வெளியான செய்திகள் உண்மை இல்லாததவை. வெறும் புரளிதான். ஆனால் எப் போதுமே எனக்கு விருப்பமில்லாத காட்சிகளில் நான் நடிக்க மாட்டேன்....' என்றார்.

ஏற்கெனவே தூம் 2 படத்தில் ஹ்ரித்திக் ரோஷனுடன் ஐஸ்வர்யா ராய் லிப் டு லிப் கிஸ் அடித்ததில் பெரும் சர்ச்சை எழுந்தது நினைவி ருக்கலாம்.

அன்வர்

புதிய தளபதி 2

என் பாடல்களை கேவலப்படுத்துறாங்களே டி.எம்.சௌந்தரராஜன் ஆவேசம்

நான் பாடிய பழைய பாடல்களை இப்போது உள்ள புதிய பாடகர்கள் உணர்ச்சியே இல்லாமல் பாடி கேவலப்படுத்துகிறார்கள். இந்த பாவம் சும்மா விடாது என்று டி.எம்.சௌந்தரராஜன் ஆவேசமாக கூறினார். பின்னணி பாடகி பி.சுசீலாவின் அறக்கட்டளை சார்பில் சாதனை புரிந்த பின்னணி பாடகர்களுக்கு விருது வழங்கும் விழா, சென்னை நேரு உள்ளக விளையாட்டு அரங்கில் நடந்தது. விழாவில், பின்னணி பாடகர் ஜேசுதாசுக்கு பி.சுசீலா அறக்கட்டளை விருதும், டி.எம்.சவுந்தரராஜன், பி.பி.சீனிவாஸ் ஆகிய இருவருக்கும் வாழ்நாள் சாதனையாளர் களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. விழாவில் பின்னணி பாடகர்கள் பாலமுரளி கிருஷ்ணா, ஹரிகரன், மனோ, உன்னி மேனன், ஹரீஷ் ராகவேந்திரா, மாணிக்க விநாயகம், டி.எம்.எஸ்.செல்வகுமார், பாடகிகள் எல்.ஆர்.ஈஸ்வரி, வாணி ஜெயராம், சித்ரா, சந்தியா ஆகியோர் கலந்துகொண்டு பாடினார்கள். டி.எம்.சவுந்தரராஜன் பாடிய பாடல்களை, சில பாடகர்கள் இணைந்து பாடியபோது, பாடல் வரிகள் நினைவுக்கு வராமல் தடுமாறினார்கள்.

அதைத்தொடர்ந்து மேடைக்கு வந்த டி.எம்.சவுந்தரராஜன், புதிய பாடகர்களை கண்டித்து ஆவேசமாக பேசினார். அ பேசும்போது, அந்தக்காலத்தில் நாங்கள் உணர்ச்சிகளை கொட்டி பாடினோம். அதே பாடல்களை உணர்ச்சியே இல்லாமல் சிலர் கேவலப்படுத்துகிறார்கள். மனசுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த பாவம், சும்மா விடாது என்று பேசினார். அப் பேசிய பி.சுசீலா, 'உங்கள் அளவு திறமையான பாடகர்கள் யாரும் கிடையாது. நீங்கள் மிக உயரத்தில் இருக்கிறீர்கள். இப்போ எல்லோரும் உங்களை வணங்குகிறார்கள்' என்றார். இதனால் சிறிது நேரம் மேடையில் பரபரப்பு நிலவியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிசின்

தமிழில்
இருக்கும்போதே ப
ஆரம்பத்தில் எகப்பட்ட வரவேற்பு. அ
அந்த படம் இந்தியிலும் ஹிட் ஆனதால், த
என எதிர்பார்த்தார். ஆனால் அதற்கு
ஒரேயடியாக சரித்து விட்டது. இதையடு
மாட்டேன் என்று சொன்னவர் இப்போது
ஜோடி போட்டு நடித்துள்ளார். அதே நே
வைத்துக் கொண்டே இருக்கிறாராம்.
முன்னணி பிரமுகர்களை நண்பராக்கு
இறங்கியிருக்கும் பிஸின், தமிழில் ஏற்கன
படங்கள் பற்றி பேசி, அந்த படத்தை இ
பெரிய ஹிட் ஆகும் என்ற ஆசை
வருகிறாராம். அப்படி பிஸின் ரெகமன்ட்
செ

கமல்ஹாசன் பாணியில் இளம் ஹீரோக்கள்

தனது படத்தில் இளம் நடிகர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதை தனி கொள்கையாக வைத்திருக்கும் கமல்ஹாசனின் கொள்கைக்கு இளம் ஹீரோக்கள் மாறி வருகிறார்கள். இன்றைய இளம் ஹீரோக்கள் தங்கள் படங்களில் வேறொரு ஹீரோ நடிப்பதை அனுமதிக்க மறுப்பது கடந்த சில ஆண்டுகளாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது. பாலிவுட், ஹொலிவுட்டைப் போல மூத்த நடிகர்கள் ஒன்று சேர்ந்து ஒரே படத்தில் நடிப்பதில்லை. தமிழ் சினிமாவில் இந்த நிலை மாற வேண்டும் என்று நடிகர் கமல்ஹாசன் அவ்வப்போது கூறுவதுடன், தனது படங்களில் இளம் நடிகர்களையும் இணைத்து நடிக்க வைப்பார். பஞ்சதந்திரம், தெனாலியில் ஜெயராம், அன்பேசிவம் படத்தில் மாதவன், காதலா காதலாவில் பிரபுதேவா, குருதிப்புனலில் அர்ஜூன் என சக கலைஞர்களை நடிக்க வைத்தார். தற்போது அவர் நடித்து வரும் மன்மதன் அம்புவில் கூட மாதவன் இருக்கிறார்.

இப்போது கமல்ஹாசன் வழியைப் பின்பற்ற தயாராகியிருக்கிறார்கள் நடிகர் விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த் ஆகியோர். டைரக்டர் ஷங்கர் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகவிருக்கும் 3 இடியட்ஸ் படத்தில்தான் இந்த மூன்று நட்சத்திரங்களும் இணைகின்றன. இந்த படத்துக்காக முதல் பாடல் கம்போஸிங் முடிந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜெமினி பிலிம் சர்க்யூட் தயாரிக்கும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். டிசம்பர் 6 ஆம் திகதி படத்தின் முதல் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.

சித்து ப்ளஸ் 2

ஐஸ்

எனது முழு பெயரையும் சொல்லி அழையுங்கள் என்றார் ஐஸ்வர்யா பச்சன். இதுபற்றி ஐஸ்வர்யா கூறும்போது, சினிமாவுக்கு வந்த புதிதில் ஐஸ்வர்யா ராய் என்ற என் முழுப் பெயரை உச்சரிக்க கஷ்டமாக இருக்கிறது என்று, ஐஸ் என அழைத்தனர். ஆனால், அப்படியே எல்லோரும் அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். எனது முழுப்பெயரையும் சொல்லி அழைத்தால் அதை வரவேற்பேன் என்றார். சமீபத்தில் சில பத்திரிகையாளர்களிடம், ஐஸ்வர்யா என்றே எழுதுங்கள். ஐஸ் என்று எழுதாதீர்கள் என்று கேட்டுக்கொண்டாராம் அபிஷேக் பச்சன். இதையடுத்தே ஐஸ்வர்யாவும் இதை தெரிவித்துள்ளார்.

புது நடிகைக்கு ஆர்யா கவர்ச்சி டிப்ஸ்

பாலிவுட் நடிகை அம்ரிதா ராவ். இவரது சகோதரி பிரீத்திகா, சிக்கு புக்கு படத்தில் நடிக்கிறார்.அவர் கூறியது:

மும்பையில் மாடலிங் செய்து வந்த நான், சினிமா இதழ் ஒன்றுக்கு கட்டுரைகள் எழுதி வந்தேன். அதில் என்னுடைய புகைப்படம் இடம்பெற்றது. அதைப்பார்த்த சிக்கு புக்கு இயக்குனர் மணிகண்டன் இதழின் ஆசிரியரை அணுகி, என்னுடைய முகவரியை வாங்கினார். பிறகு என்னை நேரில் சந்தித்தவர், பிசிக்கு புக்கு படத்தில் வித்யா பாலன் நடிப்பதாக இருந்த வேடத்தில் நடிக்க கேட்டார். அவரது கால்ஷீட் இல்லாததால் அந்த வாய்ப்பு உங்களுக்கு வந்திருக்கிறது. இது படத்தில் சர்ப்ரைஸ் தரும் கேரக்டர். நடிக்கிறீர்களா எனக் கேட்டார். தமிழில் அறிமுகமாகும் வாய்ப்பு என்பதாலும் கேரக்டர் பிடித்திருந்ததாலும் ஒப்புக் கொண்டேன். ஊட்டி, மைசூர், காரைக்குடியில் ஷூட்டிங் நடந்தது. ஹீரோ ஆர்யா நட்பாக பழகினார். எனது உடலமைப்பை கவர்ச்சி தோற்றத்துக்காக எப்படி பராமரிக்க வேண்டும். என்பதற்கு நிறைய டிப்ஸ் கொடுத்தார். அது எனக்கு பயனுள்ளதாக இருந்தது என்றார்.

நடிகையின் முத்தக்காட்சிக்கு தந்தை தடை

சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கும் 'அடடா என்ன அழகு' படத்தில் நாயகியாக நடித்திருப்பவர் நடிகை நிக்கோல். இந்த படத்தில் நிக்கோலின் கவர்ச்சி காட்சிகள் ரசிகர்களை சூடேற்றுகின்றன. அதிலும் நீச்சல் உடையில் வந்த காட்சிகள் ரசிகர்களை கிறங்கடித்தன. இப்படி கவர்ச்சி விருந்து படைத்த நிக்கோல் தனக்கென்று ஒரு கொள்கை வைத்திருக்கிறாராம். எவ்வளவு கவர்ச்சியாக நடித்தாலும் முத்தக்காட்சியில் மட்டும் நடிக்க மாட்டேன், என்கிறார் நிக்கோல். எனது அப்பாவுக்கு முத்தக்காட்சி பிடிக்காது. முத்தம் கொடுப்பது போன்ற காட்சியில் நடிக்கக் கூடாது என்று அவர் கூறியிருக்கிறார். அதனால் முத்தக்காட்சியில் நடிக்க மாட்டேன் என்கிறார் நிக்கோல்.

மையம் கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு

கரவெட்டி பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச சிறுவர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கரணவாய் மூத்த விநாயகர் கோவிலில் நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டு காளாஞ்சி பெறுவதையும் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராசா ஆகியோர் அருகில் நிற்பதையும் கரவெட்டிப் பிரதேசத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய புலமைப் பரிசில் மாணவர்கள், விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வடமராட்சி நிருபர்)

நவாலி பிரதேச மக்களுக்கான முதியோர் அடையாள அட்டை வழங்குவதற்கான பதிவுக் கூட்டம் நவாலி ஹேமலதா சிறுவர் நிதியத்தில் இடம்பெற்றபோது முதியோர் சங்க தலைவி திருமதி கனகசிங்கம் இந்திரராணி விளக்கமளிப்பதனையும் டாக்டர் சோ. சுந்தரராஜன் அருகில் இருப்பதனையும் படத்தில் காணலாம். (படம்: யாழ். மத்தி)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சூபிணி வரதலிங்கம் உரையாற்றுதையும் இந்த சிறுவர் தின விழாவில் மாதகல் சென்தோமஸ் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெற்றதையும் படத்தில் காணலாம். (படங்கள்: திருநெல்வேலி நிருபர்)

ஞா. அருளானந்தம் எழுதிய 'நிஜத்தின் நிழல்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் அகவொளி குடும்ப உளவளத் துணை நிலையத்தில் நடைபெற்றது. அருட்பணி ஜே. இராஜநாயகம் நூலை வெளியிட்டு வைப்பதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்: அலுவலக நிருபர்)

காரைநகரில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின விழாவில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் மாணவி ஒருவருக்கு தங்கப்பதக்கம் அணிவிப்பதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் சத்திய மூர்த்தி மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- வட்டுக்கோட்டை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக் கணக்கான ஏழைகளுக்கு நிழல் கொடுக்கும் தியாகி அறக்கொடை நிறுவனம்

2002 ஆம் ஆண்டு கொடை வள்ளலும் தெய்வ சிந்தையும்கொண்ட தனி நபர் ஒருவரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது தான் தியாகி அறக்கொடை நிறுவனம்.

போரினால் மட்டுமல்ல பல வழிகளாலும் பாதிக்கப்பட்ட ஏழை மக்களின் நல் வாழ்வுக்காக குடாநாட்டில் மழைக்கு முளைத்த காளான்களைப் போல் பல பொது நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவற்றில் சில நிறுவனங்கள் தொடர்ந்து இயங்க முடியாத நிலையில் இடையில் மூடப்பட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. கைவிரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நிறுவனங்கள் மட்டும் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

உள்ளத் தூய்மை யோடு பரந்த மனப் பான்மையுடனும் மக் களுக்கு உதவி செய்ய வேண்டும். பல வழிகளாலும் பா திக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த வேண் டும், கல்விப் பசி யைத் தீர்க்க முடியா மல் திண்டாடும் மா ணவர்களுக்கு கல்வியறிவைக் கொடுக் கவேண்டும் என்ற சிந்தனைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள், தெய் வத்தின் ஆசியுடனும் பயனாளிகளின் ஆசீர்வாதத்துடனும் தொடர்ந்தும் இ யங்கி வருவதுமல்லாமல் பிரமிக்கத்தக்க வகையில் வீறுநடைபோட்டு வளர்ந்து கொண்டே வருகின்றன.

அந்த வரிசையில் யாழ்ப்பாணத்தில் தமிழுக்கும், சைவத்திற்கும் பெருமை சேர்த்த நாவலர் பெருமான் வாழ்ந்த நாவ லர் வீதியில் 2002 ஆம் ஆண்டு கொடை வள்ளலும் தெய்வ சிந்தையும்கொண்ட தனி நபர் ஒருவரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது தான் தியாகி அறக் கொடை நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் ஆல் போல் தழைத்து கம்பீரமாக வளர்ந்து காட்சியளிப்பது மட் டுமல்லாமல் அதன் நிழலில் பல நூற் றுக் கணக்கான ஏழை மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

விதவைகள், போரினால் பாதிக்கப் பட்ட குடும்பங்கள், வசதியற்ற மாணவர் கள், ஆதரவின்றி அல்லற்படும் முதி யோர்கள், புற்று நோயாளர்கள், பெற் றோர்கள், பெற்றோரை இழந்த சிறுவர் கள் உட்படப் பல வழிகளாலும் பாதிக்கப் பட்டு வருமானின்றித் திக்குத் திசை தெரி யாமல் திண்டாடும் மக்களுக்கு இன மத வேறுபாட்டின்றி வடக்கு, கிழக்கு, தெற் கு, மலையகம் எங்கும் அன்றிலிருந்து இன்றுவரை மேற்படி நிறுவனத்தினால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களினதும் முதி யோர்களினதும் போஷாக்கை விருத்தி செய்யும் வகையில் இலைக்கஞ்சி உட் பட சத்துணவையும் வழங்கிவரும் மேற் படி நிறுவனம் இலவச மருத்துவ சேவை யையும் ஆற்றி வருகிறது.

இதற்காக மருத்துவ நிலைய மொன்றை ஆரம்பித்து இனங்காணப்ப டும் நோயாளர்களை அங்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றது. இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆயி

கிழமை தோறும் முதியவர்களுக்கான இலவச மருத்துவ சேவை

ரக்கணக்கான மக்கள் ஏதோவொரு வழி யில் நன்மை அடைந்து வருகிறார்கள்.

குடாநாட்டில் பாதிக்கப்பட்ட குடும் பங்களின் வாழ்வாதாரத்திற்காக இனங் காணப்பட்ட 139 குடும்பங்களுக்கு மேற் படி நிறுவனத்தால் மாதாந்தம் 500 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஊக்கு விப்புத் தொகையாக ரூபா 250 மாதாந் தம் வழங்கப்பட்டு வந்ததுடன் தற்போ தும் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ். குடா நாட்டின் 139 குடும்பங்க ளின் வாழ்வாதார உயர்வுக்காக ரூபா 500 வழங்கப்பட்டு வந்ததுடன் இன்னும் அதிகரித்த நிலையில் தற்போது தொடர் செயற்றிட்டமாக அது உள்ளது.

பொறுப்பான காரணங்கள் இன்றி சிறையில் வாழும் குடும்பத் தலைவர்க ளின் குடும்பங்களிற்கு மாதாந்தம் ரூபா 500 வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் புதியவர்கள் இணைக்கப்பட்டு வருகின் றனர். ஆரம்பத்தில் 11 குடும்பங்கள் இணைக்கப்பட்டிருந்தன.

கல்வி அபிவிருத்தியின் ஒரு அங்க மாக விளங்கும் நூலகத்திற்கு பல்லாயி ரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் அன் பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நலிவுற்ற குடும்பங்கள் இனங்காணப் பட்டு அவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அன்னார் கல்வி கற்ற பரியோவான் கல் லூரியின் ரெனிஸ் விளையாட்டுத் திடல் உருவாக்கத்திற்காக ரூபா 1 இலட்சம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு சுயதொழில் கட னாக ரூபா 17 இலட்சம் நலிந்த பிரிவி னருக்கு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப் பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரி விலுள்ள கச்சாய்க் கிராமத்தின் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான காணி கொள்வனவிற்கான தியாகியி னால் ரூபா 10 000 அன்பளிப்புச் செய்யப் பட்டுக் காணிக் கொள்வனவு செய்யப் பட்டது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செய லர் பிரிவில் நலிவுற்ற மக்களின் சுயதொ ழில் செய்கைக்காக ரூபா 1 000 000 அன் பளிப்பினை தியாகி அறக்கொடை நிலையம் வழங்கியது மறக்கமுடியாத தொண்டாகும்.

மலையகத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 100 பல்லைக்கழக மாணவர்க ளுக்கு புலமை பரிசில் வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு தரம் 5 இல் கல்வி கற்று வந்த 125 தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 250 வீதம் வழங்கப்பட்டு வந்ததுடன் இத் தொகை அவர்களின் உயர் கல்வி நிறை வடையும் வரை வழங்கப்பட்டு வருகின் றது.

மகரகம புற்று நோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் ஆதரவற்ற

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான மாதாந்த உதவித்திட்டத்தை திருமதி அ.வேதநாயம் ஆரம்பித்து வைக்கின்றார்.

நோயாளிகள் 40 பேருக்கு மாதாந்தம் ரூபா 400 வழங்கப்பட்டது. தொடர்ந்தும் இத்திட்டத்தில் சிலர் உள்ளனர்.

மாணவர்களுக்கும் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்குமான இலவச ஆங்கில கல்வி கற்பிக்கப்பட்டு வருகின் றது.

பல்கலைக்கழகக் கல்வியைத் தொட ர முடியாத வறிய மாணவர்களுக்கான உத விகள் செய்யப்பட்டு வருகின்றன.

மிகமிக பின்தங்கிய கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடாத்தி மக்களின் ஆரோக்கியம் பேணப்பட்டு வருகின் றது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக ளில் ஆரோக்கியம் குறைந்த மாணவர் கள் இனங்காணப்பட்டு சத்து உணவு வழங்கப்பட்டு வந்தது.

புற்றுநோய், இதய மாற்று சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை பெறுவதற் காக கொழும்பு சென்று திரும்பி வருவ தற்கான பிரயாண செலவுகளை இந்நிறு வனம் யாழ். குடாநாட்டின் வறுமையான குடும்பங்கள் சிலவற்றிற்கு வழங்கி யுள்ளது. மிகமிக வறிய கிராமங்கள் பல வற்றில் மலசல கூடங்களை அமைத்து சுற்றுச் சூழல் சுகாதாரத்திற்குப் பங்களிப் புச் செய்துள்ளது. இதில் வெற்றியும் கண் டுள்ளது.

புற்றுநோயாற் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுடன் இருக்கும் நோயாளிக ளில் உதவி தேவைப்படுபவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500 வழங்கப்பட்டு வரு கின்றது.

ஆண்களின் துணையின்றி பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு சொந்த வருமானம் கிடைக்கும் வரை உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின் றது. சுழற்சிக் கடன்கள் பல வழங்கப் பட்டு வருகின்றன. தொழில் வாய்ப் பின்றி இருக்கும் பெண்களுக்கு இல வச தையல் வகுப் புக்கள் நடத்தி உ யர்வடையச் செய் யப்பட்டுள்ளது.

ஆடை தயாரிப் புத் தொழிலில் பெண்களுக்கான பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றது. சூழற் சமநிலையி னைப் பாதுகாக்கும்

கு. அரசரத்தினம், யாழ்ப்பாணம்

நோக்குடன் தென்னம்பிள்ளைகள், நீண் டகாலப் பயிர்கள் என்பன வழங்கப்பட் டுள்ளன.

பேருவளையைச் சேர்ந்த 50 வறிய மா ணவர்களுக்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில இன, மத, மொழி பேத மின்றி தியாகி அறக்கொடை நிலைய உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்

பூதத்தம்பி

02

(சென்றவாரத் தொடர்ச்சி)

இக்கதையை மூலமாகக்கொண்டு ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை வழக்காற்றில் இருந்த வாய்மொழிக் கதையையும் கூத்தாக ஆடப்பட்ட விலாசத்தையும் அடிப்படையாகக்கொண்டு பூதத்தம்பி கதையை விவரித்துள்ளார்.

பூதத்தம்பிப்பிள்ளை கூறும் பூதத்தம்பி கதை

ஒல்லாந்தர் அரசு செய்யத் தொடங்கிய காலத்தில் அரசிறைப்பகுதிக்கு அதிகாரி வேளான் தலைவனாகிய பூதத்தம்பி முதலியையும், நிருபப்பகுதிக்கு அதிகாரியாகக் கரையார் தலைவன் (குருகுலத்தலைவன்) ஆகிய மனுவல் அந்திராசியையும் நியமித்து அவர்களுக்கு பறங்கிக்காரர் போல முதலிடப்பட்டமளித்தார்கள். இருவரையும் ஒல்லாந்தர் மந்திரியாகப் பாவித்து அவர்களை வினாவியே அரசு செய்து வந்தார்கள்.

பூதத்தம்பி முதலியும் அந்திராசியும் பெருநட்புடையவராய்த் தத்தம் பகுதி அதிகாரத்ததைச் செய்திருக்கும் போது, ஒரு நாள் பூதத்தம்பி தனது மாளிகையில் நடந்த விருந்திற்கு அந்திராசியையும் அழைத்தான். அந்திராசி செல்லுதலும் அவனைப் பூதத்தம்பி உபசரித்துத் தனிமையான ஓர் அறையில் போகன் படைப்பித்து அவனுண்ணும் வரையும் பக்கத்தில் நின்று பணி செய்யுமாறு இரண்டு ஏவலரையும் வைத்து, மற்ற விருந்தினரை உபசரிக்குமாறு சென்றான்.

பூதத்தம்பி மனைவி (அழகவல்லி) பந்தி மேல் விசாரணை செய்து கொண்டு நிற்கும் போது அந்திராசி இருந்துண்ணும் அறை சென்று பரிசாரகர்களை அழைத்து வேண்டிய குடிவகைகளை குறைவின்றிளண்ப் படையுங்கள் எனத் தூண்டிப் போனாள்.

அந்திராசி பிறர் மனைவியரைப் பெற்ற தாயென மதிக்கும் விரதம் இல்லாதவனாத லின் அவள் முகத்தழகைக் கண்டான். அவள் நடையழகையும் நோக்கினான். அவன் நோக்கோடு உள்ளமும் அவள் பாற் செல்லப்பெற்றான்.

தணியாய் பெருங்காதல் மூளப்பெற்றான். அவன் அருந்திய விருந்தெல்லாம் வேம்பாயிற்று. பரிசாரகர் வினாவிற்கு அவன் யாவும் கூறாது மரமாகவிருந்தான். பலகாற் கேட்டபின்னர் அவன் உயர்வு வந்து, போதுமெனக் கூறி வாய்சுத்தி செய்து கொண்டுபோய் ஆசாரமண்டபத்திலிருந்து, பூதத்தம்பியோடு பேசிக் கருத்தொருபாலிருக்கத் தாம்பூலந் தரித்து விடைபெற்று வீட்டிற்கு வந்தான்.

அவன் வீடு போய்ச்சேர்ந்நதவுடன், தங்கக்காசுகளும், வாசனைத்திரவியமும், ஒரு பட்டாடையும் ஒரு சந்தனப்பெட்டியிலிட்டு, 'இதனை கொண்டுப்போய் பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி கையில் யாருமறியா வகை கொடுத்து, 'யான் வந்து கொண்டாடுவதற்கு ஏற்ற காலம் யாது? என்று கேட்டு வா' என ஒரு தூதனிடம் கொடுத்து அவனை அனுப்பினான்.

அவன் சென்று பூதத்தம்பி இல்லாத சமயம் பார்த்து தன் தூதைச் சொன்னான். அவள் செவியில் உருகிய ஈயநீர் போலப் பாய்ந்தது. அவள் கொடுஞ்சினம் கொண்டு ஒரு செருப்பை எடுத்து இப்பெட்டி மீது வைத்துக்கட்டுவித்து இதனைக் கொண்டுபோய் அப் பாதகன் கையில் கொடுத்திடுக! என்று அத் தூதனையும் கண்டித்து அனுப்பினாள்.

தூதன் நடந்ததையை அந்திராசியிடம் சொல்லி பெட்டியையும் கொடுத்தான். 'உலகமெல்லாம் என் அடி வணங்க அழகவல்லிக்கு மதிப்பில்லாதவனானேன். என் தூதனும் என்னை மதிக்க மாட்டானே?' என வெட்கமும் துக்கமும் மானந்தூண்ட ஆறாக் கோபமுமைடயவனாகி, இவள் செருக்கை அடக்குவெனச் சமயம் பார்த்திருந்தான்.

எண்ளஅழகவல்லி அச்செய்தியை தன் நாயகனுக்கு சொல்லின் பகை விளையுமென்றஞ்சிச் சாந்தமான காலம் பார்த்து அறிவிக்க எண்ணியிருந்தாள்.

இரண்டு மூன்று தினங்களில் அந்திராசி, பூதத்தம்பியிடம் சென்று ஒரு வெள்ளைக் காகிதத்தைக் காட்டி, 'கச்சாய் துறைக்குச் சில மரங்களுக்கு கட்டளைக் கட்டளையனுப்ப வேண்டும். மரம் இன்னதென்று கணக்குப்பார்த்து வாசகம் எழுதிக்கொள்வேன். பின்பு எமக்குச் சாவகாசமாக இருக்காது. இதில் கையெழுத்திட்டுத் தாரும்' என்றான்.

பூதத்தம்பி அதனைச் சாதகமென்றெண்ணிக் கையெழுத்துக்கொடுத்தான். அந்திராசி தன் எண்ணம் முடிந்ததென்று மகிழ்ந்து கொண்டுபோய், மறுகரலிகிதத்தில் உடல் வாசகத்தை பறங்கித்தலைவனுக்கு ஒல்லாந்தரை வெல்லத் துணை புரிவ தாகவெழுதி ஒரு தூதனிடமனுப்பிய பாவனை செய்து, அதனைத்தான் ஐயுற்றுப்பிடித்தான் போல நடித்து ஒல்லாந்தத் தேசாதிபதிக்குக் காட்டினான். தேசாதிபதி அதணுண்மையை ஆராய்ந்து பொய்யெனக் கண்டு அதனைத் தள்ளினான்.

அந்திராசி அவ் உண்மையை நானறிவேன் இது செய்த பூதத்தம்பியை தப்பவிட்டால் ஒல்லாந்த அரசிற்குப்பழுதுண்டாம். என் உயிரும் தப்பாது என்றாள் ஊர்காவற்துறையில் கடற்கோட்டை கட்டுவித்துக்கொண்டிருந்த தேசாதிபதி தம்பிக்குற்ற நட்பினனாதலின் அவனறியின் இத் தீர்ப்பு நிறைவேறாது என எண்ணி, அந்திராசி காலதாங் செய்யாது, அவ்விரவிற்றானே அநிதியாகப் பூதத்தம் பியை கொள்ளுவித்தான் உடனே அழுக வல்லியும் உயிர் விட்டாள்.

(தொடரும்)

குறுக்கெழுத்துப் போட்டி 02

01	02	03	04	05	06		07
08	09	10			11	12	13
14	15	16		17	18	19	20
	21	22	23		24		25
26		27	28	29		30	
31	32		33	34	35	36	37
38	39	40	41		42	43	44
45	46	47	48	49		50	51

இடமிருந்து வலம்

1. சீதை சிறையிலிருந்தது
8. ஒரு விளையாட்டு
11. தாளிக்க உதவுவது
14. பாட்டு(மாறியுள்ளது)
17. ஏக பத்தினி விரதன்
21. விருட்சம் (திரும்பியுள்ளது)
27. மாலை (மாறியுள்ளது)
31. உணவின் மதிப்பு
33. கிராமிய தெய்வ உருவம்
38. நிழல் (குழம்பியுள்ளது)
42. கவலை(இறுதி எழுத்து இல்லை)
45. அந்தியேஷ்டி கோலப்பொடி (இலை)
50. வா (ஆங்கிலத்தில் திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. மனம்
2. அழகு
3. முள் உள்ளது
6. தசாவதாரத்துள் ஒன்று (தலைகீழாக உள்ளது)
7. குறத்தி (ஆண்பால்) குழம்பியுள்ளது
12. மாதா திருத்தலம் (தலைகீழாக உள்ளது)
23. ஐயரின் வாய்மொழி(குழம்பியுள்ளது)
26. காதலி
37. மாணவர் விரும்புவது
39. இறைவனின் வீடு
42. ஊதுவது (குழம்பியுள்ளது)
46. துரியோதனன் , சகுனி கலை
48. கை -(தலை கீழாகவுள்ளது)
51. பெரிய பழம்

குறுக்கெழுத்துப் போட்டி 02 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி
குறுக்கெழுத்துப் போட்டி
வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்.நகரின் மத்தியில் எழிலுற தனக்கேயுரிய மிடுக்குடன் அமைந்திருக்கிறது அந்தப் பாடசாலை. அப் பிரபல பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்றும் புகழ்பூத்த கல்விமான்களாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றனர். உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கூட அந்தப் பாடசாலையில் பயின்றவர்கள் புகழ் பெறும் அளவிற்கு அப்பாடசாலையின் கல்வித் தரம் அன்றே மேலோங்கியிருந்தது. பல சீர் மிகு கல்வியாளர்களை உற்பவித்த கலைக்கூடத்திற்கு தனிப்பட்ட அலுவல் ஒன்றின் நிமித்தம் அண்மையில் விஜயம் செய்த பாக்கியம் கிடைத்தது. அங்கு கல்வி கற்கும் ஆசிரியர் ஒருவரைச் சந்திப்பதற்காகவே சென்றிருந்தேன்.

அந்நேரம் அப்பாடசாலை ஆரவாரமின்றி இயல்பாக இருந்தது. வழமையை விட உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவு பெருமளவு வீழ்ச்சி கண்டிருந்தது. மரணச்சடங்குக்கோ அல்லது ஏதோ வொரு விஷேட நிகழ்வுக்கோ சென்று விட்டார்களாக்கும் என்ற நினைப்பு என் மனதில் துளிர் விட்டது. இருந்தும் நான் வந்த ஆசிரியரைச் சந்திக்கும் நோக்கம் பூர்த்தியாகிய பின் அந்த ஆசிரியரிடமே மாணவர்களின் வருகை வீழ்ச்சி குறித்த சந்தேகத்தை வினாவினேன். அதற்கு அந்த ஆசிரியர் கூறிய பதில் என்னை சற்றே அசர வைத்தது.

'இன்று எந்திரன் படம் வெளிவருகிறதாம். அதனால்தான் பொடியள் படம் பார்க்கப் போட்டாங்கள்...' என்றார் சாதாரணமாக எப்படி இருக்கிறது நிலைமை. யாழ்.குடாநாட்டு மக்கள் ஒரு காலத்தில் கல்வித்துறையில் கொடி கட்டிப் பறந்தார்கள். முன்னரெல்லாம் கல்வியே கருத்தென இருந்தார்கள். எமது வாழ்க்கையின் அச்சாணியாக கல்வித்துறை விளங்கியது. இதற்கு அன்றைய யாழ். நூலகம் சாட்சியாக இருந்தது. அந்நூலகத்தில் தவழ்ந்து விளையாடிய பலர் இன்றும் உயர் பதவிகளில் பல தேசங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.அத்தகைய கல்வியின் உறைவிடமான அரும் பெரும் பொக்கிஷமான இந் நூலகம் முன்னர் இருந்த அதே பொலிவுடன் இன்று இல்லையே என நினைக்கும் போது வேதனைதான் மிஞ்சுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலகத்தின் வீழ்ச்சி எம்மினத்தின் வீழ்ச்சிக்கு நிலைக்களமாக அமைந்தது என்று கூறினால் தவறாகாது. அந்தளவிற்குத் தென் ஆசியாவிலே பிரமாண்டமான நூல் நிலையமாக ஏறக்குறைய 1 இலட்சம் புத்தகங்களை தன்னகத்தே கொண்டு விளங்கிய பெருமை யாழ் நூலகத்தையே சாரும்.

இன்று குடா நாட்டின் கல்வித்தரம் கீழ் நிலைக்குச் சென்றதற்கு சினிமாக்களின் வரவுகளும் ஒரு காரணம் என்று சொன்னால் அது பிழையில்லை. சினிமாத்துறையின் அசுர எழுச்சியானது கல்வித்துறை மீதான மாணவர்களின் நாட்டத்தை, ஈடுபாட்டைக் குறைத்துள்ளது. சினிமாவானது எந்தளவிற்கு எமது சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தி வருகிறது என்பதற்கு யாழ்.நகரில் இருக்கின்ற திரையரங்குகளின் எண்ணிக்கைகளைக் கொண்டு அறியலாம்.

யாழ்.நகரில் அமைந்திருக்கும் திரையரங்குகளுக்கு ஒரு முறை சென்றால் அங்கு அரங்கேறும் அலங்கோலக்காட்சிகள் காண்போரை முகம் சுழிக்க வைக்கின்றன. அந்த அளவிற்கு கலாசார சீர் கேட்டின் உச்சத்தை அங்கு தரிசிக்கலாம்.

முன்னரெல்லாம் சினிமாத்திரையரங்குகளிற்கு சென்று படம் பார்க்கும் வழக்கம் எம்மவரிடையே இருந்ததுதான். தென் இந்தியாவிலே ஒரு புதிய படம் வெளிவருகின்றது என்றால் இங்கிருந்து கூட தென் இந்தியாவிற்கு இரவில் கடல் வழியாகச் சென்று படம் பார்த்து விட்டு விடியற்காலையிலே வந்து விடுவார்கள் என முதியவர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தளவிற்கு சினிமா மக்களை கட்டிப்போட்டிருந்தது உண்மைதான். ஆனால், இன்றுள்ள சினிமாத்துறையின் அடிநாதமே வேறு சமூக கலாசாரச் சீரழிவுகளுக்குத் தூபமிடுபவையாகவே இன்றைய சினிமாக்களின் வரவு அமைந்திருக்கிறது. முற்றிலும் வருமானத்தைக் குறியாகக் கொண்டு தயாரிக்கப்படும் திரைப்படங்கள் மக்களின் வாழ்வியலில் பல்வேறுபட்ட தாக்கங்களைச் செலுத்துகின்றன. முன்னரெல்லாம் குடும்பப்பாங்கான சமூகப்பிரச்சினையை பிரதிபலிக்கும் படங்களே வெளியாகியிருந்தன. ஆனால், இன்று நிலைமை முற்றிலும் தலை கீழாக மாறியிருக்கிறது.

படம் பார்க்கவென ஒரு சினிமாத்திரையரங்குக்குள் நுழைந்தால் பல அலங்கோலமான காட்சிகளே எம் முன்விரியும். குடும்பத்துடன் இருந்து படம் பார்ப்பதற்கே கூசும் அளவிற்கு அக்காட்சிகள் விரசம் ததும்பும் வகையில் அமைந்திருக்கும்.

அது மட்டுமன்றி அப்படத்தை பார்ப்பதற்கென குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் காதலர்கள் என்ற போர்வையில் உள்நுழையும் இளஞ்சோடிகள் செய்யும் காமலீலைகள் சகிக்க முடியாதளவிற்கு அருவருப்பூட்டுவனவாக இருக்கும். இத்தகைய அனுபவங்களை யாழ்.குடாநாட்டில் உள்ள ஒரு திரையரங்கிற்கு சென்று பார்த்தால் தெரிந்திருக்கும். சகிக்க முடியாத அளவிற்கு இளம் காதலர்கள் நடத்தும் அலங்கோலங்கள் அம்பலத்தில் அரங்கேறுகின்றன.

முன்னரெல்லாம் பெண்கள் திரையரங்குகளிற்குச் செல்ல மாட்டார்கள். அப்படித் திரையரங்கிற்குச் சென்றாலும் கணவனுடனோ அல்லது குடும்பத்தாருடனோ சென்றுதான் படம் பார்ப்பார்கள். ஆனால், இன்று நிலைமை அப்படி இல்லை. முன்பின் தெரியாத ஆடவனுடனோ அல்லது ஆண் நண்பன் (Boy Friend) என்ற ரூபத்தில் பழகும் இளைஞனுடனோ அல்லது சக வகுப்பு மாணவனுடனோ சென்று சேர்ந்திருந்து படம் பார்க்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சம்பவங்கள்தான் வீதியில் அநாதரவாக கைவிடப்பட்டிருக்கும் சிசுக்களாக மாறுவதற்கு வழிகோலுகின்றன. காதல் சோடிகளுக்கென்றே பிரத்தியேகமான முறையில் திரையரங்குகளில் அமைக்கப்பட்டிருக்கும் மறைவான இருக்கைகள் காதல் லீலைகளை அரங்கேற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்குகின்றன.

தவிரவும் பல இளைஞர்கள் மதுபோதையில் ரகளை செய்வது, புகைப்பிடிப்பது குடும்பத்துடன் படம் பார்க்கவரும் பெண்களுடன் சேட்டைகள் விடுவது போன்ற பல அட்டூழியங்களில் ஈடுபடும் நிகழ்வுகள் குடா நாட்டு திரையரங்குகளில் காணமுடிகிறது. கூட்டம் கூட்டமாக வரும் இளைஞர்களின் அட்டகாசத்தை தட்டிக்கேட்பதற்கு கூட ஒருவரும் முன்வருவதில்லை. ஏன் திரையரங்கு நிர்வாகம் கூட நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. காரணம் காலம், சூழ்நிலை என்பவை இவ் இளைஞர்களுக்கு அசாத்திய துணிச்சல்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கின்றன.

அங்கு வரும் இளைஞர்களில் பலர் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களே என்பது சோகம் தரும் விடயமாகும். எழுது கோல் ஏந்தும் கைவிரல்கள் சிகரெட்களை ஏந்தியவாறு படங்களில் வரும் கதாநாயகர்களாகத் தம்மைக் கற்பனை செய்து விடும் புகைகள் அத் திரையரங்கு முழுவதும் ஒரே புகைமூட்டமாக கவிந்திருக்கும். மற்றையவர்கள் சுதந்திரமாகப் படம் பார்ப்பதற்குக் கூடத் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்ற பழமொழியை மெய்ப்பிப்பது போலவே அவ் இளைஞர்களின் காடைத்தனம் மேலெழுகின்றது.

ஆக, எமது சமூகம் இன்று அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எமது கலாசார விழுமியங்களிலிருந்து எம் சமூகம் அந்நியப்பட்டுச் சென்று கொண்டிருப்பதானது சமூகப்பிரக்ஞை உள்ளவர்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

ஓர் இனத்தின் வீழ்ச்சி என்பது அவ் இனத்தின் கலாசார சீரழிவின் உச்சத்தில் தங்கியுள்ளது. எமது பழம் பெருமை மிக்க பண்பாட்டு கூறுகள் கூட எமது வரலாற்றுப் புத்தகத்தில் நித்தியப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் 'சிவபூமி' என்றும் 'யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம்' என்றெல்லாம் பல்வேறு அறிஞர் பெருமக்களால் சிலாகித்துரைக்கப்பட்டுவரும் நிலையில், எமது கலாசார அடையாளங்கள் உன்னத இடத்தைப் பெற்றிருந்தன. ஆனால், அத்தகைய உயர் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் எல்லாம் இன்று சிதைவடைந்து நலிவடைந்து செல்வது எமது இனத்திற்கு ஆரோக்கியமானதல்ல என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே எமது முன்னோர்களால் கட்டிக்காத்து வளர்க்கப்பட்டு வந்த எமது பண்பாட்டு விழுமியங்கள் தொடர்ந்து வரும் எமது சந்ததிக்கும் முதுசொம்களாகப் பேணிக்காத்து வழங்க நாம் அனைவரும் முன்வர வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்க

ஓர் இனத்தின் வீழ்ச்சி என்பது அவ் இனத்தின் கலாசார சீரழிவின் உச்சத்தில் தங்கியுள்ளது.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருப் பெயர்ச்சி பலன்கள் - பரிகாரங்கள்

நவக்கிரகங்களுள் முக்கிய கிரகமாக கருதப்படுபவரும் முழு சுபக்கிரகமாகவும், பொன்னவன், தேவகுரு, பிரகஸ்பதி என்று போற்றப்படுபவருமான வியாழ பகவான் எதிர்வரும் 21.11.2010 இரவு மணி 11 நிமிடம் 11இல் கும்பத்தில் இருந்து மீனத்திற்கு செல்கிறார். அங்கு அவர் 2011ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி வரை இருப்பார். கோச்சார அடிப்படையில் பலன் பார்க்கும் போது ஒரு குறிப்பிட்ட கிரகத்தை மட்டும் வைத்து பலனை பார்க்கக் கூடாது. அதன்படி முக்கிய கிரகங்களான சனி, ராகு, கேது ஆகியவையின் இருப்பிடத்தைக் கொண்டும் ஆராய்ந்தும் தசாபுத்திகளைக் கணித்துமே பலனைப் பார்த்தல் வேண்டும். குருபகவான் பெரும்பாலும் எல்லா ராசியினருக்கும் நன்மைகளை செய்யவே விரும்புவார். அவர் கெடு பலன்களை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் அந்த கெடுபலன் தமக்கு படிப்பினையை உணர்த்துவதாகவே அமையும். அதாவது ஆசிரியர் மாணவனை கண்டிப்பது போல்.

மேடம்

குருபகவான் இப்போது உங்கள் ராசிக்கு 12 ஆம் இடம் உள்ளார். சுமாரான பலனே உண்டாகும். ஆனால் சனி, கேது கிரகங்களால் தொடர்ச்சியான நன்மைகள் உண்டாகும். வீண் விரயங்கள் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் சிக்கனம் தேவை. உத்தியோகத்தில் வேலையில் பளு அதிகரிக்கும். உயர் அதிகாரிகளுடன் அனுசரித்து போகவும். வியாபாரத்தில் தொடர்ச்சியான வளர்ச்சி நிலவும். மாணவர்கள் கல்வியில் அதிக சிரத்தை எடுத்து படித்தல் வேண்டும். வியாபாரிகள் முதலீட்டை தவிர்க்கவும். உடல்நலம் சிறப்பாக அமையும். பரிகாரமாக குருபகவானுக்கும் ராகுவுக்கும் அர்ச்சனை செய்யவும். ஏழைகளுக்கு படிக்க உதவி, முதியோர்களுக்கு இயன்ற உதவிகளை செய்யவும்.

****

இடபம்

குருபகவான் இப்போது உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்துக்கு வருகிறார். மிகவும் சிறப்பான காலம். பல வெற்றிகளை தந்து பொருளாதாரத்தில் பல முன்னேற்றங்களைத் தருவார். உத்தியோகம் சிறப்படையும். பதவி உயர்வு ஏற்படும். 9ஆம் இடத்து பார்வை சாதகமாக அமைவதால் எண்ணற்ற நன்மைகள் உண்டாகும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வியாபாரிகள் முன்னேற்றம் காண்பர். குருவால் லாபத்தை பெறுவர். மாணவர்கள் கல்வி முன்னேற்றம் காண்பர். பெண்களுக்கு புத்திர பாக்கியம் போன்ற நற்பலன்களை குருபகவான் தருவார். சனியும், ராகுவும் சாதகமற்று இருப்பதால் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போதல் நன்று. பரிகாரமாக சனி பகவானுக்கு எள் தீபமேற்றுதல், யானைக்கு கரும்பு கொடுத்தல், பத்ரகாளியம்மனை வழிபடுதல் என்பன நன்று.

****

மிதுனம்

குருபகவானின் மீன ராசி பிரவேசம் அவ்வளவு சிறப்பானதல்ல. முன்பு போல் நற்பலன்களை அவரால் தர முடியாது. பொருள் நஷ்டம், மன சஞ்சலம், முயற்சிகளுக்கு தடை போன்றவை ஏற்படும். குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 5ஆம் பார்வை சிறப்பாக அமைவதால் எந்த இடையூறையும் உடைத்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். பெரியோர்களின் ஆலோசனையின் பேரில் செயற்படவும் உறவினர்களோடு மனக்கசப்பு வரலாம். வாக்கு வாதத்தை தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு சீரான பலன் வியாபாரத்தில் அலைச்சலும் பளுவும் உண்டு. புது வியாபாரம் தற்காலத்தில் வேண்டாம். மாணவர்கள் கல்வியில் சீரான பலனைக் காணலாம். பரிகாரமாக நவக்கிரகங்களை சுற்றுதல், வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை வழிபட்டு மஞ்சள் நிற மலரினால் மாலை சாற்றவும்.

****

கடகம்

குருபகவான் இப்போது மீனத்தில் இருப்பது உகந்த நிலை. இதுவரை காலமும் இருந்த இன்னல்கள் விடுபடும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும் உற்சாகம் பிறக்கும். காரியங்கள் சித்தியாகும். பணப் புழக்கம் அதிகரிக்கும். தேனைகள் தீர்த்தியாகும். தடைப்பட்ட திருமணங்கள் பூர்த்தியாகும். குருவின் 9ஆம் இட பார்வை சிறப்பாக அமைவதால் பொற்காலம் என்ற அளவிற்கு முன்னேற்றம் காண்போம். கணவன், மனைவியிடையே அன்பு பெருகும். செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகம் உயர்வு, வியாபார முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கல்வி சிறப்படையும். முக்கிய கிரகங்களில் கேது மட்டும் சிறப்பாக அமையவில்லை. பாம்பு புற்றுள்ள கோயிலுக்கு சென்று பால் ஊற்றுங்கள். இதனால் கேதுவால் ஏற்படும் பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் அகலும்.

****

சிம்மம்

மீனத்தில் குரு சுமாரான நிலையே, 8ஆம் இட குரு நிலையற்ற தன்மையையும் மன வேதனையையும் அலைச்சலையும் கொடுப்பார். வீண் விரோதங்களை தவிர்க்கவும். 8 ஆம் இட குரு தொல்லைகளை கொடுப்பார் என்பது பொதுவான ஜோதிட வாக்கு. அஞ்ச வேண்டியதில்லை. குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 8 ஆம் இடத்து பார்வை உங்களுக்கு சாதகமாக உள்ளது. குருவின் பார்வையால் கோடி நன்மைகளை அடையலாம். கேதுவின் நன்மைகள் தொடர்வதால் கஷ்டங்களை முறியடித்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உற்சாகம் குறையும். புதிய வியாபாரங்களை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிரத்தை எடுத்து படிக்க வேண்டியிருக்கும். பெண்கள் ஆடம்பர செலவை தவிர்க்கவும். பரிகாரமாக குருபகவானுக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி வழிபடவும். சனி, ராகு கிரகங்களையும் வழிபடவும். ஊனமுற்றவர்களுக்கு உதவி, ஆதரவற்ற மூதாட்டிகளை ஆதரிக்கவும்.

****

கன்னி

மீனத்தில் உள்ள குருவால் பல சிறப்புகள் ஏற்படும். பல்வேறு நன்மைகள் பெறுவீர்கள். மேலும் குருவின் 5ஆம் இடத்து பார்வையும் சிறப்பாக உள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சி, சுப நிகழ்வுகள், செல்வச் செழிப்பு போன்றவை ஏற்பட்டு நிம்மதியுடன் வாழ்வீர்கள். எடுத்த காரியம் அனுகூலம் ஆகும். குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலம் நிலவும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை நிலவும். உத்தியோகத்தில் பின் தங்கிய நிலை அகலும். வியாபார விருத்தி உண்டாகும். வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி விருத்தியுண்டாகும். சனி, ராகு ஆகிய கிரகங்கள் இருப்பிடம் சிறப்பாக இல்லாதவர்கள் ராகு துர்க்கையை வழிபடவும், ஆதரவற்ற வர்களுக்கு உதவுங்கள். காக்கைக்கு அன்னமிட்டு சனிபகவானுக்கு எள் எண்ணெய் தீபமேற்றவும்.

****

துலாம்

குருபகவான் கும்பத்திலிருந்து 6ஆம் இடமான மீனத்திற்கு செல்வதால் உடல் நலம் பாதிப்புகள் ஏற்படும். மனதில் தளர்ச்சி உண்டாகும். மற்றைய கிரகங்களின் நிலையை கணக்கிடும் போது பாதிப்புகள் ஓரளவு குறையும். குரு சாதக மற்ற நிலையில் இருந்தாலும் அவரது 9ஆம் பார்வை இடையூறுகள் தவிர்க்கப்பட்டு பண வரவு இருக்கும். உறவினர் வகையில் அனுகூலமான போக்கு காணப்படும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உங்கள் பொறுப்புக்களை யாரையும் நம்பி ஒப்படைக்க வேண்டாம். கோரிக்கைகளை அதிக முயற்சி எடுத்தே நிறைவேற்ற வேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கு அதிக உழைப்பு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி சுமாராகவே இருக்கும். பெண்கள் ஆடம்பர செலவை குறைப்பது புத்திசாலித்தனம். குரு பகவானுக்கு மஞ்சள் புஸ்பம் கொண்டு அர்ச்சனை செய்யவும். ஏழரைச் சனியின் காலம் ஆதலால் சனி பகவானுக்கும் அர்ச்சனை செய்யவும்.

****

விருச்சிகம்

குருபகவான் 5ஆம் இடத்தில் இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தருவார். திருமணமாகாதவர்களுக்கு திருமண பிராப்தம் ஏற்படும். பொருளாதாரம் வளம் உண்டாகும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். காரியங்கள் சித்தியாகும். சனியின் பலனும் தொடர்வதால் சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். குடும்பத்தில் பிற்போக்கான நிலை மாறும். தடைப்பட்ட திருமணங்கள் கைகூடும். ஆனாலும் ராகு கேது கிரகங்களின் சாதகமற்ற நிலையினால் சில கெடு பலன்களும் ஏற்படலாம். உத்தியோகங்களில் முன்னேற்றம் காணப்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற நற் பலன்கள் உண்டு. வியாபாரிகளிடம் நல்ல வளர்ச்சி, லாபம் காணப்படும். மாணவர் நற்கல்வி பெறுவர். பெண்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் நலம் சுமாராக இருக்கும். உஷ்ணம் சம்பந்தமான உபாதைகள் வரலாம். நிழல் கிரகங்களான ராகு கேது சாதகமற்ற நிலையில் உள்ளதால் ராகு, கேது, துர்க்கை, விநாயகரை வழிபடவும். பௌர்ணமி நாளில் வீட்டில் விளக்கேற்றி சித்ரபுத்திர நாயனாரை வணங்கி ஏழைகளுக்கு தம்மால் இயன்ற உதவிகளை செய்யவும்.

****

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாணவர் மலர்

☺ அமேசன் காட்டில் இரண்டரை மில்லியன் பூச்சி இனங்கள், நாற்பதாயிரம் தாவர இனங்கள் இரண்டாயிரம் வகை பறவைகள், மூவாயிரம் வகை மீன் வகைகள் உள்ளன.

☺ பூமியில் உள்ள அனைத்து மழைக் காடுகளையும் சேர்த்தால், அமேசன் காடுகளின் பாதி அளவுதான் வரும் என்றால் அமேசனின் பரப்பளவை கற்பனை செய்து கொள்ளுங்கள்!

☺ மழை நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் சக்தி அமேசன் காடுகளில் உள்ள மண்ணுக்கு அதிகம் உள்ளது. இதனால் காட்டுப் பகுதி எப்பொழுதும் ஈரத்தன்மையுடனே காணப்படும்.

☺ ஆக்சலோட் (Axoloti) என்பது மத்திய அமெரிக்காவில் மட்டுமே தென்படும் வித்தியாசமான உயிரினம். இவை, அவற்றின் முழுமையான வாழ்க்கையினையும் புழு பருவத்திலேயே கழிக்கும். அது மட்டும் அல்ல பல்லிக்கு எப்படி வால் துண்டானாலும் மீண்டும் வளருமோ அப்படி இதன் கால்கள் திரும்பவும் வளரும்.

☺ சூரியனின் மேற்புறத்தில் இருக்கும் வெப்பத்தை விட ஒரு சாதாரண மின்னலில் ஐந்து மடங்கு வெப்பம் வெளிப்படுகிறது.

☺ உலக நாடுகளின் தேசியக் கொடியில் மிக அதிகமாக இடம்பெற்றுள்ள நிறம் சிவப்பு.

☺ தேசியக் கொடியில் கட்டடத்தைச் சின்னமாகப் பொறித்துள்ள உலகின் ஒரே நாடு கம்போடியா.

☺ லிபியா நாட்டு தேசியக் கொடி முழுவதும் பச்சை நிறத்தில் அமைந்துள்ளது .

☺ உலகின் முதல் தேசியக் கொடி டென்மார்க் நாட்டைச் சேர்ந்தது. டானிப்டரோக் என்று பெயர்.

☺ முழுவதும் சமச்சதுரமான தேசியக் கொடியைக் கொண்ட இரண்டே நாடுகள் வத்திக்கான் மற்றும் சுவிட்சர்லாந்து.

☺ தனது நாட்டின் வரைபடத்தை தேசியக் கொடியில் பொறித்துள்ள இரண்டே நாடுகள் சைப்ரஸ், கொசோவோ.

☺ தண்ணீரில் நடக்கும் பூச்சியின் பெயர் பான்ட் ஸ்கேட்டர்ஸ் பரப்பு இழுவிசையின் காரணமாக இது நீரின் மேல் நடக்கிறது. குட்டை, கிணறு போன்ற அசைவில்லா நீர்நிலைகளில் இந்த பூச்சிகள் வசிக்கின்றன. இப்பூச்சிகளின் எடை, தண்ணீரின் அடர்த்தியைவிடக் குறைவாக இருப்பதால் இவை நீரில் மூழ்காமல் மிதக்கின்றன. இப்பூச்சிகள் Heteropteroe என்ற வகையைச் சார்ந்தவை. இவை தன்னுடைய முதல் இரு கால்களை வேட்டையாடுவதற்கும் நடு இரு கால்களை நீரைத் தள்ளுவதற்கும் பின் இரு கால்களை வழிநடத்துவதற்கும் பயன்படுத்துகின்றன.

☺ அண்டார்ட்டிக்காவில் சூரியன் மறையும்போது. சூரிய ஒளி பிரகாசமான பச்சை நிறத்தில் இருக்கும். அங்குள்ள சீதோஷ்ண நிலையே இதற்குக் காரணம்.

புறாக்கள் பறக்கட்டும்!

புத்தாண்டின் முதல் நாளில் மன்னரைக் கண்டு அவருக்குக் காணிக்கை செலுத்தி, மன்னரின் ஆசி பெறுவது அந்நாட்டு மக்களுக்கு வழக்கம். அன்றும் மக்கள் வரிசையாக அரண்மனை முன் காத்திருந்தனர். மன்னனுக்கு புறாக்கள் மீது மிகவும் ஆசை. எனவே, மக்கள் காணிக்கைப் பொருள்களோடு புறாக்களையும் கொண்டு வந்திருந்தனர். வரிசையில் ஆவலோடு காத்திருந்த முத்து குடும்பத்தினருக்கு அழைப்பு வந்தது. முத்து ஒரு விவசாயி. தன் தோட்டத்தில் விளைந்த பழங்களைக் மன்னனிடம் கொடுத்தார். அவருடன் மனைவியும் மகன் சுமனும் இருந்தனர்.

'மிக்க மகிழ்ச்சி' என்று கூறி அவர்களை ஆசிர்வதித்தார் அரசன். சுமன் அரசரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். 'உனக்கு ஏதாவது வேண்டுமா என்று கேட்டார். 'ஆம் அரசே! நான் கேட்கப் போவது இதுதான். உங்களுக்கு புறாக்கள் மீது பிரியம். எனவே அவற்றை மக்கள் உங்களுக்கு காணிக்கையாகக் கொடுக்கிறார்கள். ஆனால், அவற்றைப் பிடிக்கும்போது எத்தனை புறாக்கள் செத்துவிடுகின்றன தெரியுமா? பிடித்துக் கொண்டு வரும் வழியிலும் எங்கள் கைகளிலேயே மடிகின்றன. தயவு செய்து புறாக்களை வாழவிடுங்கள் என்ற சுமனின் கண்களில் நீர் வழிந்தது.

சுமனை அரசன் அன்போடு அணைத்துக் கொண்டு, 'புறாக்களை உடனே பறக்கவிடுங்கள்' என்று ஆணை பிறப்பித்தார். அனைவரும் பறக்கவிட்டனர். ஒரே நேரத்தில் வானத்தில் எண்ணற்ற புறாக்கள் சிறகடித்துப் பறந்தன. அது மன்னனுக்கும் மக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக் கூறுவது போல இருந்தது.

படத்தை உற்றுக் கவனியுங்கள் இங்கே பதினைந்து பொருட்கள் மறைந்துள்ளன. அவற்றைச் சரியாக கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள்.

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விகேசரி 117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர் கோவில் பிரதேசத்தில் எப்போது மீள்குடியேற்றம்..?

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பிரதேசத்தில் இருந்து மூன்றாம் கட்ட ஈழப்போரின் போது இடம்பெயர்ந்த மக்கள், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் போன்ற இடங்களில் தற்காலிக இருப்பிடங்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். அதே வேளை, வன்னியிலிருந்த நாகர்கோவில் மக்கள் சிலர் அரசால் கூறப்பட்டு வரும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

"எங்கட சொந்த ஊருக்குவிட்டால் நாங்க நினைச்ச மாதிரி தொழில் செய்யலாம். ஆனால், இந்த ஊரில் அவங்கட அந்த ஊரவரின் தொழிலுக்குத்தான் முன்னுரிமை. கரவலைத் தொழில் கூட அவர்கள் செய்த இடங்களில் நாங்கள் செய்ய முடியாது. இப்படி நாங்கள் கடந்த 10 வருடமாக அலையுறோம். மீள்குடியேற்றுகிறோம் என்று சொல்லுறாங்கள். ஆனால், எதுவும் நடந்த மாதிரி இல்லை"

- இப்படி நாகர்கோவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக தங்கியிருக்கும் மீனவர் ஒருவரின் ஆதங்கம்.

எனினும் நாகர்கோவில் பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றுவதிலும் வழமையாக அரசு கண்ணிவெடி அகற்றல் பிரச்சினையையே கூறி வருகின்றது. ஆனால் இறுதி யுத்தம் இடம்பெற்ற வன்னிப் பிரதேசத்திலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதேசமயம், சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே நாகர்கோவில் பிரதேசம் உள்ளது. இங்கு இராணுவத்தினர் மக்கள் வசித்த பிரதேசங்களில் சாதாரணமாக நடமாடுகின்றனர். என அங்கு இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டு அவர்களின் துணையுடன் சென்று வருபவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் இராணுவ நடமாட்டத்துக்கு அப்பிரதேசம் பயன்படும் போது ஏன் மக்கள் அங்கு வசிக்க முடியாது? என்ற கேள்வி எழுகின்றதல்லவா.

நாகர்கோவிலில் பிரசித்தி பெற்ற நாத தம்பிரான் ஆலயத்தை தரிசிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்டளவில் மக்களை தற்போது இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர். இறுதி யுத்தத்தில் முக்கிய வீதியாக பயன்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்தையும் தெற்கையும் இணைக்கும் பிரதான பாதையான ஏ-9 வீதி யுத்தம் முடிந்து சில மாதங்களிலேயே அரசால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால், மருதங்கேணி வீதி இதுவரைக்கும் திறந்து விடப்படவில்லை. இதே வீதியால் தான் பருத்தித்துறை இராணுவ முகாமுக்கும் தென்மராட்சியில் உள்ள இராணுவ நிலைகளுக்கும் படையினர் சென்று வருகின்றனர். அப்படியிருக்கும் போது மக்களின் தேவைக்காக இந்த வீதியைத் திறந்து வைக்க முடியும் தானே?

ஏன் அவ்வாறு இராணுவம் செய்யாமல் உள்ளது என்பது புரியாத புதிரே! இவ் வீதி மூடப்பட்டிருப்பதால் மருதங்கேணி, செம்பியன்பற்று, உடுத்துறை போன்ற மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களுக்குச் செல்லுபவர்கள் முகமாலை ஊடாக பளை சென்று அதன் வழியேதான் மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு தொழிலுக்காகவும் மற்றும் பல தேவைகளுக்காகவும் செல்கின்றனர்.

யுத்தம் முடிவுற்று 19 மாதங்கள் நிறைவடைந்த நிலையிலும் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு தாம் நினைத்த இடங்களுக்கு செல்வதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டு வருவது. இதன்மூலம் புலனாகிறது.

இப் பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு என்னதான் பிரச்சினை என்று யாழ். அரச அதிபரிடம் கேட்டால், அங்கு கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இரண்டு நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. ஆனால், அவர்களுக்கு கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்துவதற்கு ஆட்பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்தார்.

ஆட்பற்றாக்குறையைக் காரணம் காட்டி குறித்த பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் தாமதத்தை ஏற்படுத்துவதால் பாதிக்கப்படுவது மக்களே. எனவே குறித்த நிறுவனங்கள் மீது உரிய அதிகாரிகள் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஆட் பற்றாக்குறை காரணமாக தாமதம் நிலவி வருகின்றது என்றால் குறித்த பிரதேசத்தினூடாக செல்லும் வீதியையாவது திறக்க முடியும்தானே என அரச அதிபரிடம் வினாவிய போது அதற்கு இராணுவம் அனுமதிக்க வில்லை. ஆனால், நாம் மாற்று வீதி குறித்து பரிசீலனை செய்து வருகின்றோம் என்றார்.

நாகர்கோவில் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த குறிப்பிட்ட சிலருக்கு குடத்தனை வெலிக்கண்டிப் பிரதேசத்தில் கல் வீடுகள் அதாவது நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாற்று வீதி, நிரந்தர வீதிகள் ஆகிய வற்றைப் பார்த்தார். எமக்கு எங்கோ இடிக்கின்ற மாதிரித் தெரிகின்றதல்லவா? இதேவேளை, வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளின் மீள் குடியேற்றம் தொடர்பில் அரச தரப்பும் சரி எதிர்க்கட்சிகளும் சரி தமது அக்கறை வெளிப்படையாக காட்டி வருகின்றன. அவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டிய வர்கள்தான். அவர்களின் நலனும் பேணப்பட வேண்டும் தான். அதனை மறுப்பதற்கு நான் வரவில்லை.

ஆனால், இவர்களின் விடயத்தில் அக்கறை காட்டுவதைப் போன்று அதாவது மூன்றாம் கட்ட ஈழப் போரிலோ அல்லது அதற்கு முன்னர் இடம்பெற்ற

கருடன்

ஈழப் போரிலோ இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பில் அரசு சார்ந்த எதிர்க்கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக சிரத்தை காட்டுவதை எம்மால் காண முடியவில்லை.

'ஒரு பிரதேசத்தின் மீள்குடியேற்றம் தாமதம்', 'மக்கள் மீள்குடியேற்றப்படாமல் அவதி' போன்ற செய்திகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்ற போது மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சென்றுவருகின்றனர். ஆனால், உரிய நடவடிக்கைகள் மட்டும் தாமதமடைகின்றன.

"உயர்பாதுகாப்பு வலயம் அங்கு போக இயலாது எண்டு ஆமிக்காரர் சொன்னாங்கள். அங்கு போக இயலாது எண்டபடியால் வெலிகண்டியில் எங்களுக்கு வீடு கட்டித் தந்தாங்கள். இங்கு சரியான வெயில். மரம் தடி கூட இல்லை. பிள்ளைகள் எல்லாம் வெயிலால துடிக்குதுகள். எங்கட ஊரில நல்ல மரம் செடிகள் வைத்திருந்தோம். அது சொர்க்கம்"

- இது வெலிக்கண்டி பிரதேசத்தில் தங்கியிருக்கும் வயோதிப பெண் ஒருவரின் தளம்பல் குரல்.

இதேவேளை, சர்வதேச நாடுகள் குறிப்பாக இந்தியா இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வேண்டும். அவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று இலங்கைக்கு பேச்சளவில் அழுத்தம் கொடுத்து வருகிறது. இதனால், வடக்கு, கிழக்கில் யுத்தம் ஆரம்பமான முதல் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக எந்த சர்வதேச நாடோ அல்லது குறிப்பாக இந்தியாவோ வாயே திறக்கவில்லை.

அதேமாதிரி சர்வதேச அளவில் எந்தப் பிரச்சினை ஊடகங்களில் பிரபலமாகின்றதோ அங்கு அரசு, எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புக்கு பஞ்சமே இல்லை.

கொடூரமான யுத்தம் இடம்பெற்ற இடத்திலேயே மீள்குடியேற்றம் செய்யும் அரசுக்கு நாகர்கோவில் போன்ற பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்வது கடினமாக இருக்காது என்பது மக்களின் எதிர்பார்ப்பு. அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

***

நாகர்கோவிலில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு குடத்தனை வெலிகண்டிப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட வீட்டுத்தொகுதி
படப்பிடிப்பு :- குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் 2 இல் பிறந்தவருக்குரிய பலன்கள் -சந்திரன்

இந்த 2 ஆம் எண்ணைப் பற்றி அனைத்து நூல்களும் மக்களை தேவை யில்லாமல் பயப்படுத்துகின்றன. உண் மை அதுவன்று. பெரும் மரங்கள் சாய்ந் தாலும் நாணல் மட்டும் நிலைத்து நிற்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் புயல் (சோதனைகள்) என்பது நிச்சயம் ஏற்ப டும். அதற்கு எந்த எண்ணும் விதிவிலக் கல்ல. மற்ற எண்காரர்கள் துவண்டு விடும்போது இவர்கள் மட்டும் வாழ்க் கையின் சோதனைகளில் வளைந்து கொடுத்து, முன்னேறி விடுவார்கள். அம் பாளின் அருள் பெற்ற எண் இது. பக லுக்கு ராஜா சூரியன் என்றால் இரவுக்கு ராணி சந்திரன். சூரியன் தந்தைகாரன் சந்திரன் மாதாகாரகன். எனவே இந்த எண் காரர்களிடம் பெண்மையும், மென்மை யும் உண்டு. இவர்கள் ஓரளவு தடித்த தேகத்தினர்தாம். இதில் பிறந்த ஆண்கள் சுருட்டை முடியையும், பெண்கள் நீண்ட முடியையும் கொண்டவர்கள். இவர்கள் எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறார் களோ, பல சமயங்களில் அதைவிடக் கடின சித்தராகவும் மாறிவிடுவார்கள்.

மனத்தினால் செய்யும் தொழில்களில் (கற்பனை, கவிதை, திட்டமிடுதல் போன் றவற்றில்) மிகவும் விருப்பமுடன் ஈடு படுவார்கள். இவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் உள்ளதால், மக்க ளால் பெரிதும் விரும்பப்படுவார்கள். கற் பனை கலந்து கவர்ச்சியுடன் பேசுவதால் இவர்களுக்கு மக்களாதரவு உண்டு. பெரும்பாலோருக்கு முன்னோர்கள் சொத் துக்கள் இருக்கும்.

இந்த எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர் கள் வீண்பிடிவாதம் கொண்டு தங்கள் வாழக்கையைத் தாங்களே கெடுத்துக் கொள்வார்கள். நீதிமன்ற வழக்குகளிலும் சிக்கலை தந்துவிடும். முன்னோர் சொத் துக்களையும் இழக்க நேரிடும். மனதில் நிம்மதி இருக்காது.

இவர்களின் வெற்றிக்கும் அல்லது தோல்விக்கம் ஒரு பெண்ணே காரண மாக இருப்பாள். காரணம் இவர்களுக்குச் சந்தேகம் குணம் அதிகம் உண்டு. இத

மாயூரம்

னால் முழுமையாக யாரையும், நம்பாமல் திரும்பத் திரும்ப மற்றவர்களடன் சந் தேகம் கொள்வதால்தான். இவர்களுக்கு எதிரிகள் உருவாகின்றனர். எதையும் பதட்டத்துடனும், ஒருவித சோம்பலுட னும் அணுகும் குணத்தினையும் மாற்றிக் கொண்டால் இவர்கள் நிச்சயம் முன் னேறுவார்கள்.

முக்கிய காரியங்கள் எவற்றையும் சட் டென முடிக்காமல் காலரத்தைக் கழித்து விட்டு, பின்பு அவசரம் அவசரமாகச் செய்து முடிபார்கள். ஒரு மாதத்தின் இறு தியில் தான் அவசர அவசரமாக உட் கார்ந்து அந்தந்த மாதத்தின் வேலையை முடிப்பார்கள். தங்களது வாக்குறுதிகளை இவர்கள் காப்பாற்றுவது மிகவும் சிரமம். திருநெல்வேலி சென்றவுடன் அல்வா வாங்கி அனுப்புவதாகச் சொல்வார்கள். ஆனால் அனுப்ப மாட்டார்கள்.

சந்திர ஆதிக்கம் நன்முறையில் அமைந் திருந்தால் நல்ல திட்டங்கள் போட்டும் அவற்றில் வெற்றியும் அடைந்து விடு வார்கள். தங்களிடம் பல திறமைகள் இருந்தும் துணிந்து செயல்பட விருப்பப் பட மாட்டார்கள். இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு தங்களது வாழ்க்கை யில் முடிவெடுக்க முடியாமல் திண்டாடு வார்கள். காலையில் சுறுசுறுப்புடன் தொடங்குவார்கள். ஆனால், மாலைக்குள் ஊக்கம் குறைந்து, சோர்ந்துவிடும் இயல் பினர்.

விதி எண் 2 ஆக வரும் அன்பர்கள் ஒரு வகையில் அதிர்ஷ்டசாலிகள். திருமண மானவுடன்தான் அம்பாளின் அனுக்கிர கத்திற்கு உட்படுவார்கள். வசதியுடன் மனைவி அல்லது மனைவி வந்தவுடன் வேலை, வாழ்க்கையில் முன்னேற்றம் ஆகியவை இந்த எண்காரர்களுக்கு ஏற் பட்டு விடும்.

திருமண வாழ்வில் அதிர்ஷ்டம் இருந் தாலும், தங்களுக்கு அதிர்ஷ்ட எண்களில் பிறந்த பெண்களை மணந்து கொண் டால் தான் இவர்களது வாழக்கை வளமாக இருக்கும். இல்லையெனில் குடும்பப் பிரச்சினைகள் கடைசிவரை இருந்து கொண்டே இருக்கும். இவர்களின் திரும ணத்திற்கு 1, 3, 5, 6 ஆகிய எண்களில் பிறந்த பெண்கள் ஏற்றவர்கள். இருப்பினும் 7ஆம் திகதி பிறந்த பெண்ணே மிகவும் சிறந்தவள். ஆனால் 8 அல்லது 9 எண் உடைய பெண்களை மட்டும் மணக்கவே கூடாது. பின்பு வாழ்க்கையே நரகமாகிவிடும்.

2ஆம் திகதியில் பிறந்தவர்கள்

உயர்ந்த இலட்சியத்தை ஏற்றுச் செயல் படுவார்கள். கற்பனைச் சக்தியும் அதிகம் உடையவர்கள். சாந்தமும், அமைதியும் உடையவர்கள். மக்கள் சிர்திருத்த எண் ணங்கள் உருவாகும். பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பு வார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடி கர்கள் போன்றோர் உருவாகும் நாள் இது. 2ம் எண்ணின் முழு ஆதிக்கமும் கொண் டது.

11 ஆம் திகதி பிறந்தவர்கள்

விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். தன்னம்பிக்கையுடன் முன்னேறுவார்கள். தெய்வீக ஆற்றல் உண்டு. வாக்கு பலிதமும் உண்டு. பொதுநலத்திற்காகத் தங்களது அறிவைப் பயன்படுத்துவார்கள். இதனால் பல சோதனைகளும் உண்டாகும். தேவைக்கு ஏற்ற பொருளாதாரம் நிச்சயம் உண்டு. நிம்மதியான வாழக்கை உண்டு. தங்களது திறமைகளைச் சுயநலத்திற்கா கப் பயன்படுத்திக் கொண்டால், பொரு ளாதார நிலையை மிகவும் உயர்த்திக் கொள்ளலாம். ஆனாலும் மனம் பரபரப்

"உனக்கு செவ்வாய் தோஷம் இரு ப்பதாக சோதிடர் சொன்னது பொய்"
"அப்படியா?"
"உனக்கு 'வாய்' தோஷம் தான் இருக்கு!"

"எதுக்கு பெட்டி படுக்கையோடு வாசலில் நிற்கிறீங்க"
"யாரோ என்னை கடத்தப் போறதா ரெலிபோன் பண்ணினாங்கள். அதற்குத் தான் ரெடியாய் இருக்கே ன்"

நிருபர் : உங்களுடைய வருங்கால கண வர் எப்படி இருக்கணும்னு விரும்புறீங் க..?
நடிகை : என்னோட பழைய கணவர் மாதிரியும் இல்லாம இப்போதைய கணவ ரும் இல்லாமல் இருக்க வேணும்

டாக்டர் : பயப்படாதீங்க இந்த ஊசி யைக் குத்தினா எறும்பு கடிச்ச மாதிரி இருக்கும்!
வந்தவர் : நான் வந்ததே எறும்பு கடி ச்சதுக்கு ட்ரீட்மண்ட் எடுக்கத் தான்!

தயங்கி நிற்பார்கள்.

20 ஆம் திகதி பிறந்தவர்கள்

மற்ற மக்களுக்காக உரிமையுடன் போராடுவார்கள் இவர்களேஇ ஆனாலும், பேராசை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுயநலத்தை விட்டுவிட் டால், பெரும் புகழும், செல்வமும் வந்து சேரும். பல மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள். கற்பனை வளம் நிறைந்த வர்கள். தங்களது உணர்ச்சிகரமான பேச்சினால், மக்களை வசியம் பண்ணும் ஆற்றல் உண்டு. தன்னம்பிக்கை அதிகம் உண்டு. அது ஆணவமாக மாறாமல் பார்த்துக் கொண்டால் வாழ்க்கை நன்கு அமையும்.

29 ஆம் திகதி பிறந்தவர்கள்

2ம் எண்ணின் ஆதிக்கம் மிகவும் குறைந்த எண் இது. இதனால் இவர்கள் போராடும் மனோபலம் உடையவர்கள். பிரச்சினைகளை வாய்ச் சமர்த்தினாலும், தேவைப்பட்டால் வன்முறையில் கூட இறங்கிச் சமாளிக்கத் தயங்க மாட்டார் கள்.

திருமண வாழக்கை பல பிரச்சினைகள் உடையதாக இருக்கும்.

பஞ்சாயத்து வரை சென்று, குடும்பப் பிரச்சினைகள் தீரும். தங்கள் ஆற்றலை நல்ல காரியங்களுக்காகச் செலவிட வில்லை யென்றால், இவர்கள் சமூக விரோதியாக மாறவும் வாய்ப்பு உண்டு. சமுதாயத்திற்கே இவர்களால் தொந்தரவு ஏற்படலாம். சர்வாதிகாரிகள் பலர் இந்த எண்ணில் பிறந்தவர்கள். இவர்களால் பல அரிய சாதனைகளும் உலகில் நிகழ்ந் துள்ளன.

தங்களுடைய வாழ்க்கைப் பாதையைச் சரியான பாதையில், விடாப்பிடியாக நடந்தால் இவர்கள் மனிதர்களில் மாணிக் கமாவார்கள். எதிரி மிஞ்சினால் கெஞ்சு வதும், கெஞ்சினால் மிஞ்சுவதும் இவர் களின் சுபாவமாகும். வீறாப்புப் பேச்சும், நல்லவர் போன்ற நடிப்பும் உண்டு. எதற் கும் ஆட்சேபணை எழுப்பும் பிடிவாத மும் உண்டு. கூட்டு எண்ணைப் பொறுத்து வாழ்க்கையின் முடிவு அமை யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதநாட்டியக் கலை சாஸ்திர ரீதியாக சினிமாவில் பேணப்படுவதில்லை

சினிமாவில் பரத நாட்டியம் பயன்படுத்தப்பட்டாலும் பரத நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்ட கதாபாத்திரங்களை உருவாக்கினாலும் பரத நாட்டிய கலை, அதன் நாட்டிய வடிவங்கள் சினிமாவில் சாஸ்திர ரீதியாக அமைந்துள்ளன என்று சொல்ல முடியாது என்கிறார் திருமதி சாந்தினி சிவநேசன்.

நமது நாட்டின் சிறந்த பரத நாட்டிய கலைஞர்களில் ஒருவராக விளங்கும் இவரை நேர் கண்டபோது மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்தார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பரதநாட்டிய விரிவுரையாளராக இவர் விளங்குகிறார்.

கேள்வி : உங்களது மாணவப் பருவம் பற்றியும் கல்வி பற்றியும் கூறுங்கள் ?

பதில் : நான் பாலர் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை கொக்குவில் ஞானப்பண்டித வித்தியாசாலையிலும் 4 ஆம், 5 ஆம் வகுப்புகளை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் 6 ஆம் வகுப்பிலிருந்து க.பொ.த உயர்தரம் வரை வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையிலும் கல்வி கற்றேன். 1970 இல் இந்தியாவிற்கு சென்று கேரள விஷ்வ கலாகேந்திராவில் கதகளி பயின்று இரண்டு வருடங்களில் கதகளி டிப்ளோமா பட்டம் பெற்றேன். 1972 இல் அடையாறு லக்ஷ்மணனிடம் பரதநாட்டியம் கற்றேன். 1974 இல் பரத நாட்டிய டிப்ளோமா பட்டம் பெற்றேன். ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கிய பின் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றேன்.

கேள்வி : நடனக்கலையை கற்க வேண்டும் என்ற எண்ணம் உங்களிற்கு ஏற்படக்காரணம் என்ன?

பதில் : நான் நடனத்துறையை விரும்பியதற்கு காரணம் எனது தந்தையாரேவார். நடனக் கலையை தமது பிள்ளைகளிற்கு கற்பிக்க யாழ்.மக்கள் விருப்பம் கொள்ளாத அந்தக் காலத்தில் யாழ்ப்பாணதிற்கு பரதக் கலையை முதலில் கொணர்ந்தவர் எனது தந்தையாரே. 1948 ஆம் ஆண்டு யாழ் மண்ணில் பரத நாட்டிய கலையை ஆரம்பித்த பெருமை அவரையே சாரும். 1951 இல் நடன ஆசிரியராக நியமனம் பெற்று நெடுந்தீவு மத்திய கல்லூரியிலும் பின்னர் யாழ்.மத்திய கல்லூரியிலும் கடமையாற்றினார். கலைச்செல்வன், அபிநய அரசகேசரி எனும் கௌரவபட்டங்களைப் பெற்ற அவரது பெயர் ஏரம்பு சுப்பையா

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசனுடனான நேர்காணல்

ஆகும். எனது தந்தையார் அவர் பின் நான், இப்பொழுது எனது மகளும் பரதக்கலையை பயின்று வருகிறார். பரம்பரையாகவே பரதக்கலையை வளர்ப்பதற்கு மேலும் வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன்.

கேள்வி : பரத நாட்டிய பாணிகளில் உள்ள வேறுபாடுகள் என்பது பரத நாட்டியத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளதாக இருக்குமா?

பதில் : பரதநாட்டிய பாணிகள் - தஞ்சாவூர், வழுவூர், பந்தணை நல்லூர், காஞ்சிபுரம் என வகைப்படுத்தப்படும் பாணிகள் என்பது Styles எனப்படும். எல்லாப் பாணிகளுக்கும் அடிப்படை தஞ்சாவூர் பாணியே. அந்த அடிப்படை மரபில் கற்ற திறமையான கலைஞர்கள், குருமார்களின் வித்துவச் சிறப்பினால் முன்னெடுக்கப்பட்டவையே ஏனையவை ஆகும்.

இவர்களிடம் பயின்ற மாணவர்களினால் குருவின் தனித்துவம் சிறக்க அவர்களின் பெயர் சொல்லும் படியாக இவை மேலும் விரிந்துள்ளன. பரத நாட்டிய செயன்முறை பயிற்சியில் வேண்டியளவு நுணுக்கங்களைக் கையாள்வதனால் அதற்கெனத் தனிச்சிறப்புண்டு. எனவே பரத நாட்டிய பாணிகளுக்கு எல்லாம் அடிப்படை ஒன்றே. அதுதான் தஞ்சை மரபு. ஆனால் அவற்றை கையாளும் முறைதான் வேறுபடுகின்றது. அப்படித்தான் பரத நாட்டியமும் எவருடையது சிறந்தது எனக் கூறுவதிலும் பார்க்க ஒவ்வொருவரும் அதனைத் தமது சிந்தைக்கு ஏற்ப கையாளும் போது அவர்களிடம் பயில்பவர்கள் அதனை உள்வாங்கி பின்னர் அவர்களினூடாக வெவ்வேறு சிறப்பம்சங்களில் மெருகூட்டி ஆற்றுகைப்படுத்தப்படுகிறது. இதனால் ஒவ்வொரு கலைஞர்களினதும் பெயர் சொல்லும் படியாக அவர்களது மாணவர்களினால் கலை விரிவாக்கம் பெற்று முன்னெடுக்கப்படுகிறது. மாணவர்கள் தங்கள் பாணிகளை வளர்த்து வந்தாலும் அடிப்படையில் பரத நாட்டியத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை.

கேள்வி : பரத நாட்டியத்தில் வேறு நாட்டிய வடிவங்கள் கலந்துகொள்ளலாமா? அப்படியாயின் அதனை ஏற்றுக் கொள்ளலாமா ?

பதில்: எல்லா நாட்டிய வடிவங்களுக்கும் நாடிய சாஸ்திரம் மூல நூலாகும். ஒவ்வொரு நாட்டியமரபும் தனக்கு வேண்டிய சிறப்பம்சங்களை நாட்டிய சாஸ்திரத்திலிருந்து பெற்று அவர்களது பூகோள சூழ்நிலைக்கேற்பவும் கலாசார பாரம்பரிய விழுமியங்களுக்கு ஏற்பவும் வளர்ந்திருக்கிறது. பரத நாட்டியத்தில் வேற்று நாட்டிய வடிவங்கள் கலந்திருப்பது வியப்பில்லை. ஒவ்வொரு நாட்டிய மரபும் தனக்கே உரிய தனித்துவத்தில் ஆழமாக வேருன்றி இருக்கின்றமையால் ஒவ்வொன்றிலிருந்தும் சில சாயல்கள் தென்படலாம். இது பற்றி பரத நாட்டிய மேதை கலாநிதி பத்மா சுப்பிரமணியம் தனது பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆண்டவன் படைப்பால் மனிதன் ஆண், பெண் என இரு கோலங்களைக் கொண்டுள்ளான். ஆனால் அவனது குணங்களாலும் இன ,மத,

நேர்கண்டவர்
சைவப் புலவர்
செ.குணபாலசிங்கம்

மொழி, கலாசார செயற்பாடுகளினாலும் வேறுபடுகின்றான். இதே போலத்தான் நாட்டிய வடிவங்களும் நாட்டிய சாஸ்திரத்தை மூல நூலாகக் கொண்டிருப்பதால் அவற்றில் கலப்பை தவிர்க்கமுடியாது அது தவறுமல்ல.

கேள்வி : பரத நாட்டியக் கலை சினிமாவில் சாஸ்திர ரீதியாக ஒழுங்காக கடைப்பிடிக்கப்பட்டு படங்களில் நடனங்களை அமைக்கிறார்களா?

பதில் : சாஸ்திர ரீதியாக ஒழுங்காக கடைப்பிடிக்கப்படுகிறது என்று சொல்ல முடியாது. சினிமா என்பது ஊடகமே ஆகும். பரதம் முன்பு ஆலயம் சார்ந்தவையாக ஆற்றுகைப்

படுத்தப்பட்டது. எனவே தெய்வ சந்நிதானமே பரத நாட்டியத்துக் குரியகளம், பாடுபொருள், இறைவன். இக் கலை பின்னர் அரச சபைக் கலையானது.

இங்கு அரச சபையினரே பார்வையாளர்கள். அரசன் அவனது பரிவாரங்கள் குறித்து பாடினார்கள். ஆனால், இப்பொழுது பரதக்கலை எல்லோரும் இரசிக்கின்ற கலையாக பரிணமித்துள்ளது. மக்களின் பொழுது போக்கு அம்சமாக விளங்குகின்ற சினிமாவிலும் மக்கள் இரசிப்பதற்காக பரதக்கலையைப் பெருமளவில் பயன்படுத்தியுள்ளார்கள்.

பழைய காலத்தில் இல்லாத தொழில் நுட்ப வசதிகள் இப்பொழுது நிறைய இருக்கிறது. இந்தத் தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி ஒலி ஒளி நுணுக்கத்தால் பரத நாட்டியத்தை சினிமாவில் அழகுற அமைக்கிறார்கள்.

ஆனால், காட்சியின் நேரச் சுருக்கத்திற்காகவும் இரசிகர்களின் இரசிப்பிற்காகவும் நாட்டியக் கலப்புக்களும் முழுமையற்ற தன்மையும் ஏற்படுகின்றன. இவை சாஸ்திர ரீதியாகப் பார்க்கின்றபோது வழுக்களாகவே அமையும். இவற்றால் சினிமாவில் சாஸ்திர ரீதியாகப் பரதக் கலை கைக்கொள்ளப்படுகிறது என்று சொல்வதற்கில்லை.

கேள்வி : இலங்கையில் பரதக் கலையின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறமுடியுமா?

பதில் : பரத நாட்டியமென்பது இலங்கையில் பாரத நாட்டிலிருந்து ஏற்பட்ட தாக்கமாகவே காணப்படுகிறது. தாய்த்திருநாடான பாரத நாட்டிற்கு மிக அருகே சேய்நாடுபோன்று எமது நாடு அமைந்திருக்கிறது. இதனால் தென்னிந்தியக்கலைகளான நடனமும் இசையும் இங்கு பரவியிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி தென்னிந்தியாவில் பரதநாட்டிய மறுமலர்ச்சிக் காலமாக விளங்கியது.

அந்தவகையில் இலங்கையில் யாழ். மண்ணில் பரதநாட்டியத்தை முன்னெடுத்தவர்களாக கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா, கீதாஞ்சலி நல்லையா, ஸ்ரீமதி நீலா சத்தியலிங்கம், திருமதி திருபுலசுந்தரி யோகானந்தன், திருமதி ஞானமணி செல்லையா, மகாவித்துவான் பிரம்மஸ்ரீ என்.வீரமணி ஐயர், திருமதி லீலாம்பிகை செல்வராஜா, செல்வி சாந்தா பொன்னுத்துரை ஆகியோரையும் கொழும்பில் திருமதி கமலா ஜோன்பிள்ளை, திருமதி விஜயலக்சுமி சண்முகம்பிள்ளை, திலகவதி கனகசபை, பாலசுந்தரி கனகசபை, திருமதி ஹரிதேவி ஜெயசுந்தரா, திருமதி ஜெயலக்சுமி கந்தையாவையும் கிழக்கில் வித்துவான் கைலாயபிள்ளை மாஸ்டரையும் பரதத்தை முன்னெடுத்தவர்கள் என்று கூறலாம்.

கேள்வி : எமது நாட்டைப் பொறுத்தவரை பரதநாட்டியம் வளர்ச்சியடைந்துள்ளதா?

பதில் : எமது நாட்டில் பரத நாட்டியம் பரவலாக்கப்பட்டும் ஓரளவு வளர்ந்தும் இருக்கிறது என்று கூறலாம். கல்வித்துறையில் பட்டப்படிப்புவரை பரத நாட்டியம் வளர்ச்சிகண்டுள்ள போதும் தேடல் குறைவதன் காரணமாக விடயஞானம் வளருவது தடைப்படுகிறது. என்று கூறுவேன்.

கேள்வி : பரதம் பயிலும் இளம் சந்ததியினருக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில் : குருபக்தியும் செய்முறைத் தேடலும் நடனம் பயிலும் இளம் சந்ததியினருக்கு வேண்டும் சான்றிதழ் பெறுவதோடு மட்டும் இல்லாது பணிவோடும் தன்னடக்கத்தோடும் கலையை வளர்க்க உழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசவழமைச் சட்டத்தில் மரங்களும் அதன் கனிகளும்

சட்டமும் சமூகமும் 03

இந்தப் பூமிப்பந்தின் மேல் ஒரு மனி தன் உடல் ஆரோக்கியத்துடனும் இங்கித மாகவும் வாழ இயற்கை அளித்த அரிய கொடைகளே சுவை மிகுகனிகளும் காய் களுமாகும். ஒரு விவசாய சமூகத்திற்கு உரித்ததான அகநிலைக்கட்டமைப்பை யும் விவசாய நிலத்தின் மீதான தமது வாழ் வியல் விழுமியங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் புறநிலை அம்சங்களை யும் (CRIP OF THE HANDS ON THE AGRICULTURAL LAND GOV-ERNED BY THE LAW OF THE-SAVALAMAI) தன்னகத்தே முன்னோர் வழியாக உள்வாங்கிக் கொண்டுள்ள யாழ் ப்பாணத்துச்சமூகம் இயற்கை வளங் களைப் பேணிப்பாதுகாப்பதோடு அதன் சுவைமிகு பலாபலன்களையும் அடைந்து வருகின்றது.

இந்தப் பேணுகை என்பது தேசவழ மைச் சட்டத்தின் ஊடாக வழிவழியாகப் பெற்றுக் கொண்டமையாகும். தேசவழ மையால் ஆளப்படும் மக்கள் தமது அசை வற்ற ஆதனங்களிலிருந்து தாம் பெற்றக் கொள்ளும் கனிதரும் மரங்களையும் அச் சட்டத்தின் எழுதப்படாத நியமங்களின் ஊடாகவே அடைந்து வருகின்றார்கள். அயலவனை நேசி (LOVE THE NEIGHBOUR) எனக் குறிப்பிடும் மதக் கோட்பாடுகளையும் தன்னகத்தே உள் வாங்கிக் கொண்டுள்ள தேசவழமையா னது வழக்காறுகளையும் நியமங்களையும் (CUSTOMS AND NORMS) பல்வேறு உருவங்களில் வெளிப்படுத்தி வரு கின்றது. அயலவனோடு முரண்பாடுகள் (CONFLICT) ஏற்படுவதைத் தவிர்க்கு முகமாக தாராண்மைவாதக் கோட்பாடு களையும் (LIBERAL) உட்கிடையாகத் (IMPLIED) தேச வழமைச்சட்டம் தன்ன கத்தே கொண்டுள்ளது.

எல்லைவேலிகளே நிர்ணயக்கோடுகள்

யாழ்ப்பாணத்துச் சமூகக் கட்டமைப் பில் எல்லை வேலிகள் என்பது வாழ்வா தாரங்களை நிர்ணயித்து மேம்படுத்தும் எல்லைக்கோடாகும்.

காணி விற்று காணி வழக்குப் பேசிய காலம் என ஒன்று இருந்தது, ஆனால் உள் நாட்டு யுத்தம் காணி எல்லைகளையும் வீட்டு வேலிகளையும் சிதைத்துவிட்டது. நாடு விட்டு நாடு செல்லும் இடப் பெயர்வு வாழ்வையும் கொண்டுவந்து விட்டது. ஆனால் இவை எவையும் தேச வழமைச்சட்டத்தின் நியமங்களில் மாற்ற ங்களை ஏற்படுத்தவில்லை. எல்லை வேலி ஓரமாக உயர்ந்து நிற்கும் பயன்தரு மரங்களின் விளைப்பொருட்களை அநுப விக்கும் பாரம்பரியம் அழிந்துவிட வில்லை.

யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் அசை வற்ற ஆதனங்களில் எல்லை வேலி ஓர மாக நிற்கும் ஒருவித்து இலைத்தாவர மாகிய பனை, தென்னை, பாக்குமரங்கள் இவையாவும் எந்த ஆதனத்திற்குள் வேர் விட்டு முளைத்து வளர்ந்து நிற்கின்ற னவோ அவற்றின் விளைபயன்கள் (FRUITS) அந்த ஆதனத்தின் சொந்தக் காரருக்கே உரியவையாகும்.

பனைமரமோ,தென்னைமரமோ அடு த்த காணிக்குள் வளைந்து சென்றமை யால் அதன் விளை பொருட்கள் விழுந்தா லும் பக்கத்துக் காணிக்காரன் அவற்றை அநுபவிக்கமுடியாது. உரிய காணிக்கார னிடமே அவற்றை ஒப்படைத்து விட வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்களின் கலாசாரம், பண்பாடு, விழுமியங்களின் குறியீடாக பனைமரமே தென்னிலங்கை ஊடகங்களால் அடை யாளப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

ஆதனச்சொந்தக்காரனாய் அவனது ஆதனத்துள் நாட்டப்படும் பலாமரங்கள், மாமரங்கள் அடுத்த வளவிற்குள் கிளை பரப்பி நின்றாலும் அவையாவும் எந்தக் காணிக்குள் வேரூன்றி நிற்கின்றனவோ அவற்றின் பலாபலன்கள் அக் காணிச் சொந்தக்காரனுக்கே உரியவையாகும். எல்லை வேலி அருகில் நிற்கும் வாழை சற்றே சரிந்து அடுத்த காணிக்குள் குலை போட்டாலும் அவற்றைப்பக்கத்து வள வுக்காரன் வெட்டிக்கொள்ளமுடியாது. இம் மரங்கள் யாவும் (பலா, மா, வாழை, மாதுளை, தோடை, எலுமிச்சை) என்பன நீரூற்றி வளர்க்கப்படும் மரங்களாகும். இவற்றின் பலன்களை நீரூற்றி வளர்ப்ப வனே அடையமுடியும்,அநுபவிக்க முடி யும் என்பது தேசவழமைச்சட்டத்தின் ஏற் பாடுகளாகும்.

ஒருவன் தனது எல்லை வேலியை அடைப்பதற்கு மட்டுமே அடுத்த வள வுக்காரனின் அநுமதியைப் பெறாது அவ னது காணிக்குள் பிரவேசிக்கும் உரிமை யைப் பெற்றுக்கொள்வான். அந்த உரி மையைச் சேவக உரிமை எனக் குறிப்பிடு வார்கள்.

இதே வேளை எல்லைவேலி ஓரமாக தனது காணிக்குள் அதர் (கால்வாய்) வெட்டும் உரிமை பக்கத்துக்குக் காணிக் காரருக்கு கிடையாது. எல்லை வேலியிலி ருந்து நான்கு அடி தூரத்திற்கு அப்பால் தான் அத்தகைய அதர் (கிடங்குகள்) வெட்ட முடியும் என சின்னப்பா எதிர் கன கர் என்ற வழக்கில் இலங்கை உயா நீதி மன்றம் தீர்ப்பளித்தது. யாழ்ப்பாணத்துக் காணிகளின் எல்லை வேலிகள் சரிந்து விழவிடாமல் பேணிப்பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகளும் இருக்கின்றன. எல்லை வேலிகளுக்குச் சட்டம் பாது காப்பு வழங்குகின்றது.

ஓரே ஒரு காணியில் ஓரே ஒரு பலாமரம்

யாழ்ப்பாணத்து மாம்பழமும் வாழைப் பழமும் பிரசித்தமானது.அதே போல் பலாப்பழத்தைக் கொள்வனவு செய்பவன் அதனை ஆகக்குறைந்தது ஒரு தட வையாவது சுண்டிப்பார்க்காமல் பணம் கொடுத்து வாங்கமாட்டான். இது அவ னது குணயியல்பு.

1960 களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள குடியியல் நீதிமன்றம் ஒன்றின் முன்னால் ஒரு விசித்திரமான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட் டது.

ஒரு விதவை மூதாட்டிக்குச் சொந்தமாக ஒரு காணி இருந்தது. அவருக்குப் பிள்ளைகள் இல்லை. இந்தக் காணியை எவருக்கும் உறுதி முடித்துக் கொடுக்கா மல் மூதாட்டி கண்ணை மூடினார். இந்தக் காணியில் ஒரு பலாமரம் நின்றது. பலாப் பழக் காலத்தில் அந்த மரத்தில் ஒரு பலா ப்பழம் காணப்பட்டது. அந்தக் காணியில் காணப்பட்ட ஓரேயொரு பலாமரத்தில் பழுத்த அந்த ஓரே ஒருபழத்திற்கு 124 பேர் உரிமை கோரி நீதிமன்றில் வழக்கிட் டார்கள். இறந்தவரது உறவினர்கள் எனக் கூறி அவரது பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்,கொள்ளுப்பேரன்கள் எனப் பலரும் இதில் அடங்கினார்கள். வழக்குத் தீர்ப்பு வருமுன் பறவைகள்தான் அந்தப் பலாப்பழத்தைச் சுவை பார்த்தன.

மேலும் நீர் ஊற்றி வளர்க்கப்படாத கிளைகளைப் பரப்பி நிற்கும் மரங்களுக் கும் தேசவழமைச்சட்டத்தில் இடம் உண்டு. இவற்றை வான்பயிர்கள் என்பர். மழை நீரை நம்பியே இவை வளர்கின் றன. (தொடரும்)

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
யாழ் ஓசை
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குரு அருள் நல்கும் நிரந்தர மகிமை

பரம ஆச்சரியரான சங்கரருக்கு துரோ தகா, ஹஸ்தமாலகா, சுரேஸ்வரா, பத்த பாதா ஆகிய நான்கு முக்கிய சீடர்கள் இருந் தனர். அவர்களுள் பத்மபாதர் குருவின் சேவையில் மூழ்கியதால் பாடங்களில் அவரால் கவனம் செலுத்த இயலவில்லை. அதனால் அவர் படிப்பில் பின் தங்கியிருப் பதை மற்ற மாணவர்கள் கேலி செய்வது வழக்கம். இருப்பினும் அவரது குரு பக்தி தளரவில்லை.

ஒரு நாள் அவர் குருவின் உடைகளைத் துவைத்து அதை ஆற்றின் மத்தியில் உள்ள பாறை ஒன்றின் மீது உலர்த்தினார். அவர் துணிகளை மடித்துக் கொண்டிருக்கும் போது வெள்ளம் வேகமாகப் பொங்கிப் பாய்ந்தது. பாறையின் உச்சியில் கால் வைப்பதற்குச் சிறிது இடம்தான் இருந்தது. துவைத்த துணிகள் குருவிற்குச் சீக்கிரம் தேவைப்படும் ஆனால் நேரமோ கடந்து கொண்டிருந்தது. எனவே பத்மபா தர் பொங்கி எழும் வெள்ளத்தின் மீது நடந்து விடுவது என முடிவு செய்தார்.

குருவின் ஆசிர்வாதம் தன்னைக் காப் பாற்றும் என்று அவருக்குத் தெரியும். அப் படியே அது காப்பாற்றவும் செய்தது. அவர் பாதம் வைத்த இடமெல்லாம் பத்மம் மலர் ந்து அவரது பாதத்தைத் தாங்கியது. அத னால்தான் அவருககு-பத்மபாதர் என்னும் பெயர் கிட்டியது. குருவின் அருள் அவ ருக்கு அனைத்து விதமான அறிவையும் அருளியதோடு தொன்று தொட்டு வரும் ஞானமும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்படி செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [19.11.10 முதல் 26.11.10 வரை].

கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

* மேஷம்

மேஷ ராசி அன்பர்களுக்கு! சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடை தாமத நிலையிருக்கும். தொழில் நிலைகளில் அலைச்சல் வேலைப்பளு அதிகமாக இருக்கும். உறவினர்களின் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலை தொடரும். பெண்களுக்கு சற்று மனச் சஞ்சலம் இருக்கும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* இடபம்

இடப ராசி அன்பர்களுக்கு! அனுகூலமான பலாபலன் அமையும். குடும்ப நிலையில் முன்னேற்றகரமான பலாபலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலாபலன் அமையும். குழப்பமான நிலைகள் விலகி நற்பலன்கள் ஏற்படும் பலனுண்டு. பணவரவு அனுகூலமான நிலையில் ஏற்படும் பலன் உண்டு. மனைவி மூலம் நன்மையான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

* மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு! சற்று சுமாரான மத்திமமான பலா பலன்களே அமையும். தொழில் நிலைகளில் சற்று மந்த நிலை அமையும். தேவையற்ற அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். வழக்கு விவகாரம், கடன் நிலை பிரச்சினைகள் என்பன அமையும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே இருக்கும். உடல் நிலையில் திடீர் சுகயீனம் மருத்துவ செலவு ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் இருக்கும். குடும்ப நிலையில் மன மகிழ்வும் நற் பலன்களும் அமையும். பணவரவு ஓரளவிற்கு திருப்திகரமான நிலையில் அமையும். சொத்து விடயமான வரவுகள் உங்களை சாரும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமைந்திடும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

* சிம்மம்

சிம்ம ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் அனுகூலமான பலன் ஏற்படும். குடும்பத்தில் சற்று மந்தமான பலாபலன் இடையிடையே அமையும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. தாயின் வழியில் சிறு சிறு செலவீனங்கள் இடையிடையே ஏற்படும். கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் தொடரும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு சிறப்புகள் அமையும்.

* கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலா பலன்களே அமையும். தொழில் நிலைகளில் சற்று மத்திம மான பலன் இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான நிலைகள் உண்டு. சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினை அமையும். பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமைந்திருக்கும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் அனுகூலமான நன்மைகள் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் நற்பலா பலன்களும் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு சிறப்பு உண்டு.

* விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலாபலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலை இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி தாமத நிலை தொடரும். குடும்பத்தில் சற்று மந்தமான நிலைகள் ஏற்பட்டு மறையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். பணவரவு அனுகூலமான நிலையில் ஏற்படும். குடும்பத்தில் நன்மையுண்டு. அதிக செலவு ஏற்படும். திடீர் பிரயாணங்கள் ஏற்படக்கூடிய நிலைகள் இருக்கும். கடன் நிலையில் அனுகூலமான பலா பலன் உண்டு. பெண்களுக்கு சற்று மத்திமமான நிலையுண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.

* மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் மேன்மையான பலன் உண்டு. பண வரவு திருப்திகரமான நிலையிலேயே அமையும் பலனுண்டு. குடும்பத்தில் அனுகூலமான நற்பலா பலன்கள் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

* கும்பம்

கும்ப ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் கூடுதல் முயற்சி வேண்டும். பண வரவு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். கடன் நிலைகளில் மந்தமான பலா பலன்களே அமையும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

* மீனம்

மீன ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் உண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலையும் ஏற்படும். உறவினர்கள் மூலம் அனுகூலமான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

நல்லிணக்க... (8ஆம் பக்க தொடர்ச்சி)

இவர்களின் சாட்சியங்களின்போது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு மத்தியில் அதிகாரப் பரவலாக்கம் இடம் பெறவேண்டும். மேலும் தமிழ்மொழி அமுலாக்கம் உரியமுறையில் இடம்பெற வேண்டும். இனங்களுக்கிடையில் புரிந்துனர்வும் நம்பிக்கையும் ஏற்படும் வகையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவது அவசியம் என்று குறிப்பிட்டிருந்தனர்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி. சிவஞானம் தனது சாட்சியத்தில் இந்த நாட்டில் தாங்கள் அநீதிக்குட்பட்டு வருவதாக தமிழ் மக்களிடம் பாரிய உணர்வுகள் உள்ளன. அரசாங்கத் துறையில் அவர்களுக்கு நியாயமான இடம் கிடைக்கவிலையெனவும் அவர்கள் கருதுகின்றனர். உதாரணமாக நாம் நாட்டின் கடந்த 60 வருட அமைச்சரவை அனுபவத்தை எடுத்துப் பார்த்தால் தமிழ் மக்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது. தபால் அமைச்சு மற்றும் இந்துக் கலாசார அமைச்சு ஆகியவையே தமிழ் மக்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள அமைச்சுக்களாகும். ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு கிழக்கு மக்கள் தங்கள் விடயங்களை தாங்களே கையாள்வதற்கான சட்டக் கட்டமைப்பு அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தார்.

யாழ். மாவட்ட புத்திஜீவிகள் சாட்சியமளித்தபோது ஆணைக்குழு உறுப்பினர்கள் அடிக்கடி கேள்விகளை கேட்டதும் பல்வேறு விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தல்களை கோரி நின்றனர்.

தெல்லிப்பளையில் நடைபெற்ற அமர்வில் சாட்சியளித்த பொது மகன் ஒருவர் யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களை இரவோடு இரவாக குடியேற்ற முடியுமானால் வலி வடக்கு பகுதி மக்களை ஏன் இதுவரை மீள்குடியேற்றாமல் வைத்துள்ளீர்கள். வலி. வடக்கு மக்களுக்கு இந்த நல்லிணக்க ஆணைக்குழு ஏதாவது நல்லது செய்யுமா? நாங்கள் உங்களிடம் நல்லதொரு உதவியை எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

மற்றுமொருவர் சாட்சியமளிக்கையில் வலி வடக்குப் பகுதியில் நாங்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்காத அரசாங்கம் குறிப்பிட்ட இடங்களில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் பெண்கள் கைக்குழந்தைகளை கையில் ஏந்திவாறு சாட்சியமளித்ததுடன் குழந்தைகள் அழுதுகொண்டிருந்த நிலையிலும் சாட்சியமளித்ததை காண முடிந்தது. சில பெற்றோர் காணாமல் போன தங்கள் பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கண்ணீர்மல்க அழுதவாறு மன்றாட்டமாக கோரினர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெற்ற அனைத்து அமர்வுகளிலும் பொது மக்கள் காணாமல் போன தமது உறவுகள் தொடர்பான எழுத்துமூல விபரங்களை ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் கையளித்தனர்.

இதற்காக ஒவ்வொரு அமர்விலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலகம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அதன் ஊடாக விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் அந்த விண்ணப்பங்களை பெற்று காணாமல் போனவர் அல்லது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தருமாறு கோரப்பட்டது. பொது மக்களும் அவ்வாறு விண்ணப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து கொடுத்தனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆணைக்குழுவின் தலைவர் உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்படிவங்களில் குறிப்பிட்டு அவற்றை பூர்த்தி செய்து தாருங்கள். நாங்கள் அவற்றைக்கொண்டு எம்மால் முடியுமான நிவாரணத்தை பெற்றுத்தருகின்றோம். நாங்கள் அனைத்து முகாம்களுக்கும் விஜயம் செய்யவிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை வேலணையில் நடைபெற்ற விசாரணை அமர்வில் சாட்சியமளிக்க வந்திருந்த பொது மக்களுக்கு அமர்வதற்கு போதுமான ஆசனங்கள் இருக்கவில்லை. இதனால் அதிகமான மக்கள் தரையில் அமர்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் மக்கள் தங்கள் பிரச்சினைகள் ஆதங்கங்கள் மற்றும் உளக்குமறல்களை வெளியிட்டுவிட்டனர். ஆணைக்குழு உறுப்பினர்களும் அவற்றை செவிமடுத்தனர். இதற்கு பின்னர் எவ்வாறான பரிந்துரைகளை ஆணைக்குழு முன்வைக்கப்போகின்றது என்பதனை நாம் பார்க்கவேண்டியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் உளக்குமுறல்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்குமா? என்று பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காங்கிரஸுக்கு ஆதரவளிப்பேன் என்றதாலேயே ராஜா பதவியை ராஜினாமா செய்தார்: ஜெயலலிதா

சென்னை :

காங்கிரஸுக்கு நான் ஆரதவளிப்பேன் என்றதாலேயே ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் அமைச்சர் ஆ. ராஜா, தனது பதவியை ராஜினாமா செய்தார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஸ்பெக்ட்ரம் வழக்கை அதிக அதிகாரம் கொண்ட, மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் அடங்கிய கூட்டுக் குழு விசாரிக்க வேண்டும்.

பதவி விலகிய ராஜாவோ தன் மீது எந்தத் தவறும் இல்லை என்று கூறுகின்ற நிலையில், கருணாநிதி பாராளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை என்ற கோரிக்கையை கண்டு அஞ்சுகிறார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் தவறு நடந்திருக்கிறது என்று மத்திய கண்காணிப்பு ஆணையமும் டில்லி உயர் நீதிமன்றமுமே சுட்டிக்காட்டியது.

ராஜா இன்னமும் அமைச்சர் பதவியில் எப்படி தொடர்கிறார்? என்று நீதிமன்றம் வெளிப்படையாக தனது கருத்தை தெரிவித்ததையடுத்து, இந்திய கணக்கு மற்றும் தணிக்கைத்துறைத் தலைவர், தனது இறுதி அறிக்கையில் 1,76,379 கோடி ரூபாய் அளவுக்கு இந்திய அரசுக்கு ராஜாவால் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்.

ஆனால், இதற்கெல்லாம் ராஜாவோ அல்லது கருணாநிதியோ செவி சாய்க்கவில்லை. மாறாக காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு என்று நான் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த உடன், மூன்று நாட்களில் தன்னுடைய பதவியை ராஜா ராஜினாமா செய்திருக்கிறார்.

மேலும், என்னுடைய அறிக்கையின் பயனாகத்தான் ராஜா தன் மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் என்று வெளியிடப்பட்ட செய்தியை பொறுத்துக்கொள்ள முடியாமல், எனது அறிக்கைக்கு பொருளுமில்லை, பொருத்தமும் இல்லை என்று கூறும் கருணாநிதி ஸ்பெக்ட்ரம் ஊழலின் பின்னணியில் உள்ளவர்கள் மீது குற்றவியல் வழக்கு, கைது நடவடிக்கை என இன்னும் பல்வேறு அஸ்திரங்கள் வரும் போது என்ன செய்வாரோ? என்று தெரியவில்லை.

ஸ்பெக்ட்ரம் குறித்த உயர் நீதிமன்றத்தின் கேள்விகளுக்கு பிரதமர் பதிலளிக்க வேண்டும்

- அத்வானி



பாட்னா :

ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்து, ராஜா மீது வழக்கு தொடர அனுமதிக்குமாறு கோரி சுப்ரமணியம் சாமி கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுப்பதில் ஏன் இந்தத் தாமதம் என்று உயர் நீதிமன்றம் கேட்டுள்ள கேள்விக்கு பிரதமர் மன்மோகன் சிங் உடனடியாக பதிலளிக்க வேண்டும் என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக நடவடிக்கை எடுக்க பிரதமர் ஏன் இவ்வளவு கால தாமதம் செய்தார் என்று உயர் நீதிமன்றம் கேள்வியெழுப்பியுள்ளது. ராஜா விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றம் கேட்டுள்ள இந்தக் கேள்விகள் கடுமையானவை. இவற்றுக்கு பிரதமர் உடனடியாக விளக்கம் தர வேண்டும்.

மேலும், ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக முழுமையாக விசாரிக்க வேண்டும். யாருக்கெல்லாம் தொடர்பு உள்ளது என்பது வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கு பாராளுமன்ற கூட்டுக் குழு விசாரணைதான் சரியானதாக இருக்கும். அதைத்தான் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் வலியுறுத்துகின்றன என்று தெரிவித்தார்.

மரணித்த குழந்தையை புதைக்க பணமின்றி ஆற்றில் வீசிய தாய்

மதுரையில் நெஞ்சை உருக்கும் சம்பவம்

மதுரை :

மரணித்த தனது குழந்தையை புதைப்பதற்கு பணமில்லாத காரணத்தால் தாயொருவர் ஆற்றில் வீசிய சம்பவமொன்று மதுரை அருகே இடம்பெற்றுள்ளது.

பெரும் பரிதாபத்திற்குரிய இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது-

அவனியாபுரத்தைச் சேர்ந்தவர் மங்கம்மா. மீனாட்சி அம்மன் கோவில் அருகே பூ வியாபாரம் செய்யும் இவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றனர். இதில் மூன்றாவது பெண் குழந்தை கால் ஊனமாக பிறந்தது. இரண்டரை வயதான இக்குழந்தை காய்ச்சல் காரணமாக இரண்டு நாட்களுக்கு முன் இறந்தது. இறுதி சடங்கிற்கு பணம் இல்லாததால், யானைக்கல் பாலம் அருகே வைகை ஆற்று ஓரம் புதைக்க திட்டமிட்ட மங்கம்மா, தனி ஆளாக குழந்தையை எடுத்து வந்தார். ஆனால், குழி தோண்ட ஆயுதம் எடுத்து வராததால், குழந்தையை ஆற்றில் வீசி விட்டு வீடு திரும்பினார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை குழந்தையின் உடல் ஆற்றில் மிதந்தது. இக்குழந்தையுடன் மங்கம்மா பூ வியாபாரம் செய்ததை அடிக்கடி பொலிஸார் பார்த்திருந்ததால், அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து மங்காவை விசாரித்த பொலிஸார், மரணித்த குழந்தையை புதைக்க பணமில்லாத காரணத்தினால் ஆற்றில் வீச நேர்ந்ததை கண்டறிந்தனர். இதையடுத்து குழந்தையை மங்கம்மாவிடம் ஒப்படைத்த அவர்கள், முறைப்படி அடக்கம் செய்ய 500 ரூபாய் கொடுத்து தங்கள் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தினர்.

சென்னையில் மீண்டும் தொழிலதிபரின் மகன் கடத்தல்

சென்னை :

சென்னையில் மீண்டும் ஒரு தொழிலதிபரின் மகன் கடத்தப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை பாரிமுனையில் வெளிநாட்டு பொருட்களை இறக்குமதி செய்து மொத்த வியாபாரம் செய்து வருகிறார் கஜா. இவரது மகன் ஹசன் அவருக்கு உதவியாக இருந்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கடையில் வியாபாரமான பணத்தை எடுத்துக்கொண்டு வீடு திரும்பிய ஹசனை மர்ம கும்பலொன்று கடத்திச் சென்றது.

கடையிலிருந்து முச்சக்கரவண்டியொன்றில் வந்தவேளை குறித்த வாகனத்தை வழிமறித்த கும்பல், வண்டி சாரதியை கீழே தள்ளியதோடு ஹசனை வாகனத்துடன் கடத்திச் சென்றுள்ளது.

இந்நிலையில் தள்ளி வீழ்த்தப்பட்ட வாகனச் சாரதி பொலிஸாருக்கு புகார் தெரிவித்தார். இதனையடுத்து காவல் துறை அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனிடையே நேற்று முன்தினம் காலை கஜாவை கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட மர்மகும்பல், ஒன்றரை கோடி ரூபா கொடுத்தால் மகனை விடுவிப்பதாக தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து மர்ம கும்பலை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சிறுவன் கீர்த்திவாசனை மீட்டதைப் போல் ஹசனை மீட்கவும் காவல்துறை முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாவோக்களுடன் பேச்சு நடத்த மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படமாட்டார்கள்: மத்திய அரசு அறிவிப்பு

புது டில்லி :

மாவோயிஸ்ட்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்தியஸ்தர்களை நியமிப்பது தொடர்பாக அரசுக்கு பரிந்துரைக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

மக்களவையில் கடந்த செவ்வாய்க் கிழமை கேள்வி ஒன்றுக்கு பதிலிக்கையிலேயே உள்துறை இணை அமைச்சர் அஜய் மக்கானே இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரம் பூதாகரமாகியதும் அப்பிரச்சினையை தீர்க்க மூவர் குழுவை மத்திய அரசு நியமித்தது. இதைப்போல நீண்டகால பிரச்சினையான மாவோயிஸ்ட் பிரச்சினையையும் முடிவுக்கு கொண்டு வர மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. மக்களவையிலும் இதுகுறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

ஆனால் மத்தியஸ்தர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் இல்லை என்பதை மத்திய அரசு இப்போது தெளிவுபடுத்தியுள்ளது.

மாவோயிஸ்ட்கள் வன்முறையை கைவிட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அவர்கள் வன்முறையை நிறுத்திவிட்டு அமைதிப் பேச்சுக்கு வருமாறு மத்திய அரசு ஏற்கெனவே அழைப்பு விடுத்துள்ளது என்று அஜய் மக்கான் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

ம.த.ந.வீரமணி ஐயர் இவரைப் பற்றி 25

உலகத் தமிழர் அறிந்த உன்னதக் கவிஞர்களில் கவிமாமணி கலாபூசணம் பிரம்மஸ்ரீ ம.த.ந.வீரமணி ஐயரும் ஒருவர். இயல், இசை, நடனம் என்னும் முக்கலைகளிலும் நன்கு பாண்டித்தியம் பெற்றவர். இக்கலைகளை உலகத் தமிழர் மத்தியில் வளர்ப்பதிலும், அதில் பல புதுமைகளைப் புகுத்துவதிலும் இறுதி வரை அயராது பாடுபட்டவர். யாழ்ப்பாணத்தில் சங்கீதம், நடனம் போன்ற கலைகளை வளர்ப்பதிலும், சைவ சமயத்தின் பாரம்பரியத்தைப் பேணிக்காப்பதிலும் இவர் ஆற்றிய பங்கை இலகுவில் மறந்துவிடமுடியாது. கலைத் துறையில் சாதனைகள் பல செய்த இவரைப் பற்றி இலங்கை கலை உலக வரலாற்றில் பதிவானவற்றில் சில இங்கே...

☛பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள் -சுந்தராம்பாள் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வீரமணி ஐயர் பிறந்தார்.

☛இவரின் இளம் வயதிலேயே பெற்றோர்கள் இயற்கையெய்திவிட இவரை வளர்த்து ஆளாக்கியவர் அண்ணனான பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர் ஆவார்.

☛இவர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றார்.

☛வீரமணி ஐயர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கியுள்ளார். இவரின் விளையாட்டுத் திறமையைப் பாராட்டி 'சுப்பர் ஹீரோ' என்ற பதக்கம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (இன்று வரை அது இவர் வீட்டில் உள்ளது)

☛ வீரமணி ஐயர் தனது 22 ஆவது வயதில் உயர் படிப்புக்காக தமிழ் நாட்டுக்குச் சென்றார். அங்கு கலாஷேத்திராவில் இணைந்து நடனமேதை ருக்கு மணி அருண்டேலிடம் நடனத்தையும் , இசை மேதை எம்.டி.இராமநாத ஐயரிடம் இசையையும் கற்றுக் கொண்டார். சாகித்திய கலாகுரு பாவநாசம் சிவன் என்பவரிடம் கலை நுணுக்கங்களைக் கற்றுத் தெரிந்து கொண்டார்.

☛இவர் தமிழ் நாட்டில் படித்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே தமிழுக்கும், சைவத்துக்கும், கலைத்துறைக்கும்மென சேவையாற்றத் தொடங்கிவிட்டார். 'திருமலைக்குறவஞ்சி' எனும் பிரபந்த நூலை இயற்றி தமிழக அறிஞர்களிடமும் சங்கீத வித்துவான்களிடமும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

☛ தனது உயர் படிப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஐயர் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

☛ பலாலி , கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளில் 33 ஆண்டுகள் கலைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். யாழ்.பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பீடம் உருவாகுவதற்கு இவரே காரணகர்த்தாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

☛ 1959 ஆம் ஆண்டு ருக்மணி அம்மாள் என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். வீரமணி ஐயரின் கலைச்சேவைக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருந்த ருக்மணி அம்மாள். அவர் இருக்கும் போதே நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

☛ வீரமணி ஐயர் தனது 11 ஆவது வயதில் 'மனோகரா' எனும் நாட்டிய நாடகத்தில் மனோகரா பாத்திரமேற்று நடித்து பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்.

தொகுப்பு - அஸ்வின்

☛ இவரால் கீர்த்தனைகள், கவிதைகள், பாடல்கள் எனப் பல இயற்றப்பட்டுள்ளன. இதில் 72 மேளகர்த்தா இராக திருமயிலை கற்பகாம்பாள் கீர்த்தனைகள், திருமயிலைக்குறவஞ்சி - பிரபந்தம் போன்றன பிரசித்தி பெற்றவையாகும்.

☛ இவர் இயற்றிய கீர்த்தனைகளில் இதுவரை எவராலும் பாடப்படாத 35 தாள கீர்த்தனைகள், 108, 175 தாள கீர்த்தனைகள், திருக்குறள் கீர்த்தனைகள், திருச்செந்தூர் முருகன் கீர்த்தனைகள் என்பன அடங்கும்.

☛ இயல் ,இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் மூன்றிலும் விற்பன்னரான வீரமணி ஐயர் நகைச்சுவையோடு கூடிய கதாப்பிரசங்கமும் செய்யக்கூடியவர் ஆவர்.

☛ இவரின் தந்தையார் த.நடராஜ ஐயர் சிறந்த சங்கீத வித்துவான். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சரளமாகக் கவிதை புனையும் வல்லமை பெற்றவர். வயலின் வாசிப்பதில் வல்லவரான இவர் தியாகராஜ கீர்த்தனைகளைத் தமிழிலாக்கி நூலாக வெளியிட்டார்.

☛ 1958 -1966 ஆம் ஆண்டு வரை கோப்பாய் , பலாலி, நல்லூர், கொழும்பு ஆசிரியர் கலாசாலைகளில் வருகை தரும் நடனத்துறை பயிற்றுனராகவும், 1966 ஆம் ஆண்டு மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் இசை ஆசிரியராகவும், 1972 - 1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், 1977 - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும் பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் பரத நாட்டிய வருகை தரும் விரிவுரையாளராகவும் க.பொ.த. சாதாரணதர, உயர்தர பரீட்சைகளின் பரதநாட்டிய பரீட்சைக் கட்டுப்பாட்டாளராகவும் பணி புரிந்துள்ளார்.

☛ 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்...' என்னும் இவர் எழுதிய பாடலே இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

☛ இந்தப்பாடலை தென்னிந்தியாவின் பிரபல பிண்ணனிப்பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் பாடியது இதற்கு மேலும் புகழைச் சேர்த்தது . ரி.எம்.எஸ். தான் பாடிய பாடல்களில் நெஞ்சுருகிப் பாடியப் பக்திப் பாடல் இது எனக் குறிப்பிட்டுள்ளார்.

☛ சீர்காழி ஜி. சிவசிதம்பரம், நித்தியஸ்ரீ மகாதேவன் போன்றவர்கள் இலங்கைக்கு வந்து கச்சேரி செய்யும் போதெல்லாம் இப்பாடலை பாடத்தவறுவதில்லை.

☛ நடனத்தில் புதிய முத்திரைகளை உருவாக்குதிலும் ,இசையில் புதிய இராகங்களை உருவாக்குவதிலும், சாகித்தியங்களை இயற்றுவதிலுமாக இறுதிக்காலம் வரை இவர் புதுமைகளைச் செய்து கொண்டே இருந்தார்.

☛ இராகங்களுக்கு ஏற்ப பாடல் வரிகளை எழுதுபவர்களை 'வாக்கேயகாரர்' என்று சொல்லுவார்கள். அந்த சொற்பதத்திற்கு மிகவும் பொருத்தமானவராக இருந்தவர் யாழ்ப்பாண மண் தந்த வீர மணி ஐயர் ஆவர்.

☛ இயல் இசையில் இவருக்கிருந்த மேன்மைக்காக வட இலங்கை சங்கீத சபை கலைமாமணி என்ற சிறப்புப்பட்டத்தையும் 'இயலிசைவாரிதி, மகாவித்துவான்' என்ற சிறப்பு விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தது.

☛ 1998 ஆம் ஆண்டு கலாபூசணம் விருது, 1999 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கத்தினரால் கௌரவ முதுமாணி (M.A) பட்டம் என்பன இவரின் திறமையான கலைத்தொண்டுக்காக வழங்கப் பட்டனவாகும்.

☛ 'சௌந்தர்ய லகரி' என்ற சமஸ்கிருத மொழி நூலை தமிழிலில் மொழி பெயர்த்தமைக்காக, வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்ட ஆளுநர் விருது (2000) இவரின் வீடு தேடி வந்தது.

☛ கடல் கடந்து சென்று இவர் ஆற்றிய தமிழ் கலைப்பணிக்காக உலகத்தமிழ் மையம் 'அருள் இசை வித்தகர்' என்ற கௌரவ பட்டத்தையும், கும்பகோணக் கலைஞர் வட்டம் 'லலித கலா அபிஞ்ஞய' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

☛ வீரமணி ஐயர் இந்து சமயத்துக்கு ஆற்றிய தொண்டுக்குகாக 1977 ஆம் ஆண்டு இந்துசமயப் பேரவை தெய்வீக இயலிசைக்கவிப்புலமையை வியந்து 'ஞானக் கவிமணி' என்னும் கௌரவ விருதை வழங்கி அவரைப் பெருமைப் படுத்தியது.

☛ கலைக்காகவே தன் வாழ் நாட்களை அதிகம் செலவிட்ட மகாவித்துவான் கலா பூசணம் பிரம்மஸ்ரீ ம.த.ந. வீர மணி ஐயர் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 8 ஆம் திகதி 72 ஆவது வயதில் இவ்வுலகை விட்டு நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் விருந்திடும் அடி மனப் பதிவுகள்

கல்வியென்பது ஒரு பாடப் பொருளைப் போதித்தல் மட்டுமன்று: கல்வியின் குறிக்கோள் குழந்தையின் முழு வளர்ச்சியேயாகும். இத்தகைய முழுமை பெற்ற இசைந்த வளர்ச்சி எனப் படுவதனுள் உடல், அறிவு, செய்திறன் கள், அழகுணர் ஆற்றல், நல்லொழுக் கம், சமூகவியல் ஆகியவற்றின் வளர்ச்சி கள் யாவும் அடங்கும்.

ஊக்குவித்தல் திறன்கள் (Motiva tional Skills): இதனுள் வலுப்படுத்தல் (Reinforcement), பலவகைத் தூண் டல்களை மாற்றி மாற்றிப் பயன்ப டுத்தல் (Stimulus Variation) கற் றலுக்கான மன நிலையை உரு வாக்கல் (Set induction) போன் றவை அடங்கும்.

மாணவர்கள் வகுப்பறையில் கவ னமின்மை, பகற்கனவு காணல் போன்றவற்றை எவ்வாறு தவிர்க்க லாம்? வகுப்பறையிலும் வீட்டிலும் மாணவர்களை எவ்வாறு முழுமன ஈடுபாட்டுடன் கல்வி கற்கத் தூண்ட லாம்?

மாணவர்கள் ஒவ்வொரு நாளையும் கற்பதற்கு உகந்த நன்நாளாக மாற்றிடல் வேண்டும். 'நான் நன்றாகக் கற்கவேண் டும்' 'திறமைசாலியாக வளரவேண்டும்' என்ற நல்லூக்கத்தை அடிமனதில் பதித் திடல் வேண்டும். அடிமனப் பதிவுகளே நாளடையில் சாதனைகளாக மலர்கின் றன.

காலையில் துயில் எழுந்தவுடன் அரும்பிடும் முதல் பத்து நிமிடங்கள் 'உயர் உன்னத உச்ச சாதனைக் காலமா கும்'. இவ்வுயர் உன்னத உச்ச சாதனைக் காலத்தில் மனதில் திரும்பத் திரும்ப எண்ணும் எண்ணங்களும் சிந்தனைக ளும் ஆழ்மனத்தில் ஆழமாக வலு வூன்றி விடுகின்றன.

இச்சமயத்தில் மாணவர்கள் தமக்குள் இடும் 'மன எழுச்சி சுய ஊக்குவிப்புக் கட்டளைச் சபதங்கள்' ஆழ் மனத்தில் ஆழமாகப் பதிந்திடவல்லன. இவ்வா றாக ஆழ்மனத்தில் ஆழப்பதியும் எண் ணங்களின் உந்து சக்திக்கேற்ப மாண வர்களது செயல்களும் செயற்பாடுக ளும் முனைப்பும் முன்னேற்ற முமாக அமைகின்றன. இவைகளே சாத னைகளாக மாணவர்களில் மலர்கின் றன.

ஆற் மனதிவ் அதிசய ஆற்றல்

ஆகவே உங்கள் குழந்தைகள் துயில் எழுந்ததும் அவர்களை அவர்கள் கல்வி பற்றிச் சிந்திக்கத் தூண்டுங்கள். இரவில் நித்திரைக்குச் செல்லு முன்னரும் கல்வி பற்றிய எதிர்காலச் சாதனைகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுங்கள். மன எழுச்சி சுய ஊக்கக் கட்டளைகள் வலி மை மிக்கவை. அவற்றின் வலிமையை உங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பயன்படுத்திக்கொள்ளுங் கள்.

இவ்வாறு தத்தமது திறமைகள்பற்றி சிந்திக்கும்பொழுதும் எண்ணும் பொழு தும் உள்ளம் உருகிடல் வேண்டும். மன மகிழ்ச்சி அடைய வேண்டும். மனக் கிளர்ச்சிக் களிப்போடும் முழுமன விருப் போடும் சித்த மகிழ்வுடன் மாணவர்கள் இடும் சுய ஊக்கமனக் கட்டளை சபதங் களே ஆழமாக அடி மனதில் வேரூன்ற வல்லன. அவைகள் சாதனைகள் படைக்கவல்ல சக்தியாக மாறிவிடுகின் றன.

உங்கள் குழந்தைகளை அதி காலை யிலும் துயில் செல்ல முன்னரும் பின்வ ரும் மன எழுச்சி சுய ஊக்க கட்டளைச் சபதங்களை எடுக்கத் தூண்டுங்கள். ஒவ்வொரு கட்டளைகளையும் தினம் தினம் ஐந்து ஆறு முறை திரும்பத் திரும்ப மன மகிழ்வுடனும் தன்னம்பிக் கையுடனும் கூறிக்கூறி அவற்றை அடி மனதில் ஆழப் பதிவு செய்யத் தூண்

உங்கள் குழந்தைகள் அதிகாலையில் துயில் எழுந்ததும் மீண்டும் இரவில் துயில்கொள்ள முன்னரும் தினம் தினம் மனதில் எடுக்கவேண்டிய சுய ஊக்க மனவளச் சபதம்.

இன்று இனிய நன்நாள். கல்வியிலும் கலைகளிலும் சிறந்திடும் உயர்நாள்.

நான் இன்றும் என்றும் நல்விருப்புட னும் நல் எதிர்பார்ப்புக்களுடனும் பாடசாலை செல்வேன்.

நான் இன்றும் என்றும் மன உவர்ந்து முழுமன ஈடுபாட்டுடன் பாடங்கள் அனைத்தையும் விருப்பு டன் கற்பேன்.

நான் இன்றும் என்றும் ஆசிரியர்க ளின் நல்வழிகாட்டலுக்கு அமைய நல் ஒழுக்கம் பேணுவேன். நல் லெண்ணம் பூணுவேன்.

நான் இன்றும் என்றும் மிக நல்ல புத்திக்கூர்மை உடையவனாகவும் புதுமை ஆக்கம் நிறைந்தவனாக வும் விளங்குவேன்.

நான் இன்றும் என்றும் கல்வியில் மிக நல்ல உயர் உன்னத உச்ச சாத னைகளை நிலை நாட்டுவேன்.

நானே திறமையானவன், நானே முதன்மையானவன், இன்றும் திற மையானவன் என்றும் திறமையான வன்.

எனக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும்.

நான் தினம் தினம் சிறந்து சிறந்து உயர்ந்து உயர்ந்து முன்னேறி முன்னேறி வருகின்றேன். எனது எதிர்காலம் எனது முன்னேற்றமே.

கலாநிதி க.குகதாசன்

நான் நல்லவற்றையே எண்ணுவேன். நல்லவை பற்றியே உரையாடுவேன். நல்லவற்றையே நாடுவேன். நல்லவை களே என்னை வந்தடையும்.

எனது உயர் உன்னத சாதனை எண் ணங்கள் எனக்கு என்னென்றும் உயர் வையும் ஊக்கத்தையும் உற்சாகத்தை யும் உயர் உச்ச சாதனைகளையும் ஈட் டித்தரும்.

நான் அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் ஆண்மையும் மிக்க அரும்பெரும் மாணவனாக இலங் கித் துலங்குவேன்.

நான் முயற்சி உடையவன். முன்னேற் றம் அடைபவன்.

நான் கல்வியில் முதல்வன். கலைக ளில் தலைவன்.

நான் என்றும் முதல் வன் முதல்வன் முதல் வன் எதிலும் முதல்வன்.

நான் இன்றும் என்றும் ஆசிரியர்கள் கற்பிக்கும் விடயங்களை முழு மனக் கவனத்துடன் கேட்டறிந்து அவை எல்லாவற்றையும் நன்றாகக் கிரகிப்பேன்.

நான் கற்கும் விடயங்களை முழு மனக் கவனத்துடன் கேட்டறிந்து அவை எல்லாவற்றையும் நன்றாகக் கிர கிப்பேன்.

நான் கற்கும் விடயங்கள் யாவும் என் நினைவில் நன்றாகப் பதிந்து விடும். நான் வேண்டும் போதெல்லாம் அவை என் நினைவில் மேலோங்கிவிடும். நான் நினைவாற்றல் மிகுந்தவன். திற னாற்றல் உடையவன்.

பாடசாலையில்

மேற் கூறப்பட்ட மன எழுச்சி சுய ஊக் குவிப்புக் கட்டளைச் சபதங்களை மா ணவர்கள் வீட்டில் எடுப்பதுடன் பாடசா லையிலும் எடுத்திடலாம். பாடசலை யில் நடக்கும் காலை ஒன்று கூடலில் ஆசிரியர்களின் துணையுடன் இவ்வா றான மன எழுச்சிக் கட்டளைச் சப தங்களை எல்லா மாணவர்களும் ஒன்று கூடி எடுத்திடலாம்.

ஒவ்வொரு கட்டளைகளையும் மூன்று முறையாவது திரும்பத் திரும்ப கூறிடல் வேண்டும். ஒரு மாணவன் இவற்றைக் கூற ஏனைய அனைத்து மாணவர்களும் இவற்றைத் திரும்பக்கூ றுதல் நன்று. இவ் அடிமனக் கட்டளைப் பதிவுகள், நாளடைவில் செயல் உருவம் பெற்றுவிடும்.

நான் இன்றும் என்றும் முழுமனவிருப் புடனும் முழுமன ஈடுபாடுடனும் கட றக் கற்பேன். நன்றே கற்பேன், நலமே அடைவேன்.

நான் இன்றும் என்றும் ஆசிரியர்களின் நல் வழிகாட்டலுக்கு அமைய நல் ஒழுக் கம் பேணுவேன். நல் ஏற்றம் அடை வேன்.

நான் இன்றும் என்றும் ஆசிரியர்கள் கற்பிக்கும் விடயங்களை முழுக்கவனத் துடன் கேட்டறிந்து அவை எல்லாவற் றையும் நன்றாகக் கிரகிப்பேன். நற் கல்வி பெறுவேன்.

(தொடரும்)

Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வேதரன நூலகம்
தனாத்துறைப் பல்கலைக்கழக
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இறுதிப்போட்டி தொடரை தீர்மானிக்குமா?

இந்திய- நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் போட்டிகளை கொண்ட தொடரில் இரண்டு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறை வடைந்துள்ள நிலையில் தொடரை நிர்ணயிக்கும் தீர்க்கமான மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை நாக்பூர் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக டெஸ்ட் வெற்றிகளை குவித்து வந்த நிலையில் சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துள்ள இந்திய அணி இறுதியாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் வெற்றி நடை போட்டு வந்த இந்திய அணியின் வீரர்கள், பங்களாதேஷிடம் ஒரு நாள் தொடரை கோட்டை விட்ட நியூஸிலாந்து அணியை இலகுவாக வெற்றி கொள்ள முடியும் என்ற அதீத நம்பிக்கையுடன் அந்த அணியை எதிர் கொண்டனர். எனினும் இந்திய அணியின் எதிர் பார்ப்பு தவிடு பொடியாகும் நிலையில் தற் போதைய டெஸ்ட் தொடர் அமைந்து விட்டது என்பதே பொருத்தமானதாகும்.

தொடரின் முதலாவது போட்டியில் வெற்றியை நியூஸிலாந்துக்கு விட்டுகொடுக்கும் நிலையிலிருந்த இந்திய அணியின் கௌரவம் ஹர்பஜன் சிங்கின் கன்னி சதத்துடனான துடுப்பாட்டத்தால் பாதுகாக்கப்பட்டது.

நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறியமை அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக கிரிக்கெட் டின் கடவுள் என்று வர்ணிக்கப்படுகின்ற மாஸ்ரர் பட்ஸ்மன் சச்சின் டெண்டுல்கர் இந்தத் தொடரில் தனது 50 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்து சாதனை படைப்பார் என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்பு அவரது மோசமான துடுப்பாட்டத்தால் வீணாகிப்போனது. ஒன்றுமில்லாத ஆட்டகளத்தில் இவரது ஆட்டம் புரியாத புதிராகவே உள்ளது. இப்போட்டியிலாவது சாதனை படைப்பாரா?

அத்துடன், அவுஸ்திரேலியாவை மிரட்டிய சுரேஷ் ரெய்னாவின் துடுப்பாட்டம் பரிதாபகரமானதாக அமைந்ததை காண முடிந்தது. பந்து வீச்சாளர்களை பொறுத்த வரையில் அவர்கள் சிறு சிறு தவறுகளை செய்திருந்தாலும் ஓரளவிற்கு தமது பணியை சரிவரச் செய்திருந்தனர்.

இதேவேளை, முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றியின் விளிம்பை எட்டியிருந்த நியூஸிலாந்து அணி அதன் தவறான ஆட்டத்தால் வெற்றியை கோட்டை விட்டமை அவ்வணிக்கு பலத்த ஏமாற்றமாகும். எவ்வாறிருப்பினும் தொடரை தீர்மானிக்கின்ற இறுதிப் போட்டியை வென்று தொடரை வெல்வதற்கு இரண்டு அணிகளும் கடுமையான முயற்சிகளை மேற் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இறுதிப்போட்டியில் முடிவு தெரிய வருமா அல்லது தொடரே சமநிலையில் முடிவுறுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

16 ஆவது ஆசியப் போட்டி

ஆசிய ஒலிம்பிக் என அழைக்கப்படும் ஆசிய விளையாட்டுப் போட்டி சீனாவின் குவான்சுவில் கடந்த வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது. எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 16 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் 45 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

ஆசியப்போட்டி முதன்முதலாக 1951 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது. இப்போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. அந்நிலையில் 16 ஆவது தடவையாக சீனாவில் நடைபெறுகின்றது. சொந்த மண்ணில் போட்டிகள் நடைபெறுவதால் சீனாவின் ஆதிக்கம் பதக்கப்பட்டியலில் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. தற்போது சீனா பெற்றுள்ள பதக்க எண்ணிக்கை அதை மிகத் தெளிவுபடுத்தியுள்ளன. அண்மையில் நடந்து முடிந்த பொதுநலவாயப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய இந்தியா அதே முனைப்பில் ஆசியப் போட்டியிலும் குதித்துள்ளது. ஆனால் அதன் கனவுகள் தற்போது கலைந்து போகிறது என்றே கூறமுடியும். பதக்கப்பட்டியலில் இந்தியா நாளுக்கு நாள் பின்தள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றது.

இந்நிலையில் இலங்கையிலிருந்து 21 போட்டிகளில் பங்கேற்பதற்காக 138 வீர வீராங்கனைகள் சென்றுள்ளனர். இருந்தும் இது வரை இலங்கை ஒரு பதக்கத்தை கூட பெறவில்லை. இந்நிலையில் இம்முறை ஆசியப் போட்டியில் புதிதா இருபது-20 கிரிக்கெட் போட்டி சேர்க்கப்பட்டுள்ளதால் இலங்கைக்கு ஒரு பதக்க எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் ஆசியப்போட்டி வரலாற்றில் இதுவரை அதிக பதக்கங்களை தன்வசப்படுத்தியிருக்கும் சீனா இப் போட்டியிலும் ஒரு பதக்க வேட்டையை நடத்தி முடிக்கும் என்பது தற்போதைய போட்டி நிலவரங்களில் தெளிவாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday November 19, 2010